

திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகன் திரு. ரமேஷ், 12-4-1997 அன்று காவலில் இருந்தபோது, மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும் இதனையடுத்து, 13-4-1997 அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சனை குறித்தும் விசாரணை செய்வதற்கான நீதிபதி திரு. எம். மருதமுத்து விசாரணை ஆணையம்.

நீதிபதி திரு. எம். மருதமுத்து
விசாரணை ஆணையம்
அளித்த

அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எம். மருதமுத்து விசாரணை ஆணைய அறிக்கையைச் சட்ட மன்றப் பேரவையில் வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களைத் தெரிவிக்கின்ற அறிக்கை.

சென்னை மயிலாப்பூர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்து 12—4—1997 ஆம் நாளன்று மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும், இதனையடுத்து 13—4—1997 அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை குறித்தும் விசாரணை செய்த திரு. எம். மருதமுத்துவிசாரணை ஆணையத்தின் அறிக்கை 31—3—1998 ஆம் நாளன்று அரசுக்கு வரப்பெற்றது. நிர்வாகக் காரணங்களினால், 30—9—1998 ஆம் நாளுடன் முடிவடைகின்ற ஆறு திங்களுக்குள் அவ்வறிக்கையை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் வைக்க இயலவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏ. பி. முத்துசாமி,
தலைமைச் செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகன் திரு. ரமேஷ், 12-4-1997 அன்று காவலில் இருந்தபோது, மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும் இதனையடுத்து, 13-4-1997 அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சனை குறித்தும் விசாரணை செய்வதற்கான நீதிபதி திரு. எம். மருதமுத்து விசாரணை ஆணையம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ ஜயதே
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நன்றி

1. இவ்விசாரணை ஆணையம், தனது பணியை, 15—4—1997ஆம் நாளன்று தொடங்கி, 31—3—1998ஆம் நாளன்று முடித்தது. விசாரணை நடத்துவதில் தமிழ்நாடு அரசு, எனக்கு நல்ல ஒத்துழைப்பை நல்கியது. அதற்காக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இந்த விசாரணையை நான் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் பணிபுரிந்த ஆணையத்தின் செயலர் திரு. எஸ். கலிய பெருமாள் அவர்களுக்கும் நேர்முக உதவியாளர் திரு. எம். எஸ். சந்திரசேகரன் மற்றும் ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. இந்த விசாரணைப் பணியை நான் செவ்வனே நிறைவேற்ற சிறந்த ஒத்துழைப்பை நல்கிய, அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் வழக்குரைஞர் திரு. எஸ். சீனிவாசன், காவல் துறையின் வழக்குரைஞர் திரு. வி. ஆர். வேங்கடசாமி, உயிரிழந்தவரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு. எ. ஏசையா ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

(ஒப்பம்)

நீதிபதி. எம். மருதமுத்து,


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பயன்படுத்தப்பட்ட சுருக்கக் குறியீடு.

அ.சா.	:	அரசுத் தரப்புச் சாட்சி
இ.த.சா.	:	இறந்தவர் தரப்புச் சாட்சி
சா.ஆ.	:	சான்றாவணம்
கா.பொ.	:	காட்சிப் பொருள்




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நீதிபதி திரு. எம். மருதமுத்து விசாரணை ஆணையம் முன்னிலையில்

ஈ.வி.கே. சம்பத் மாளிகை IVஆம் தளம், கல்லூரிச் சாலை,
சென்னை-600 006.

முன்னிலை :

நீதிபதி திரு. எம். மருதமுத்து,
ஓய்வு பெற்ற நீதிபதி, உயர் நீதிமன்றம், சென்னை.

விசாரணை ஆணையத்தின் அறிக்கை :

1. தமிழ்நாடு அரசு, இந்த விசாரணை ஆணையத்தை நியமிக்கக் காரணமாயமைந்த நிகழ்வுகளும், சூழ்நிலைகளும் வருமாறு:—

(i) திரு. கே. கபாலீசுவரன் (இ.த.சா. 1) என்பவர், திருமதி லதா, திருமதி சுந்தரி ஆகிய தன்னுடைய இரு மனைவியர்கள், இரு மகள்கள், ஒரு மகன் ஆகியோருடன் ''எண் 95, மாதவராவ் தோட்டம் IIஆம் தெரு, பல்லக்கு மாளியம், சென்னை'' என்ற முகவரியில் வசித்து வருகிறார். மற்றொரு மகனான திரு. ரமேஷ் ராஜாவும் (இனிவரும் இடங்களில் ரமேஷ் எனக் குறிப்பிடப்படும். (இவர் இறந்து விட்டவர்) இ.த.சா. 1—உடன் வசித்து வந்தார்; மேலும், இவர், மந்தைவெளியில் உள்ள திருவாளர்கள் மதார்ஷா டெக்ஸ்டைல்ஸ் கிடங்கில் பணியாற்றி வந்தார். இ.த.சா. 1, கடந்த 18 ஆண்டுகளாக, பாடியிலுள்ள டி.வி.எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ''சுந்தரம் க்ளேடன் லிமிடெட்'' நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். 12—4—1997 அன்று திருவாளர்கள் ''சுந்தரம் க்ளேடன் லிமிடெட்'' நிறுவனத்தின் ''நிறுவனர் தினவிழா'' கொண்டாடப்பட்டது. இதற்கு இ.த.சா. 1-ம் அழைப்பிதழ் பெற்றிருந்தார். (சா.ஆ.டி. 1) இவர், இந்த விழாவில், தன்னுடைய முதல் மனைவி திருமதி லதா, மகன் ரமேஷ், இரு மகள்கள் ஆகியோருடன் கலந்து கொண்டார். அவர்கள் அனைவரும் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் சென்றனர். அந்த ஆட்டோ ரிக்ஷாவை திரு பன்னீர்செல்வம் (இ.த.சா. 2) என்பவர் ஓட்டி வந்தார். அன்று இரவு சுமார் 7-30 மணிக்கு விழா முடிந்த பின்னர், அவர்கள் அனைவரும் (இ.த.சா. 1 மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள்) அதே ஆட்டோ ரிக்ஷாவில் இரவு சுமார் 8-30 மணிக்கு அவர்களுடைய இல்லத்திற்குத் திரும்பினர். இ.த.சா. 1 ஆட்டோ ரிக்ஷா விற்கான கட்டணத்தை இ.த.சா. 2இடம் கொடுத்தார். ஆனால், ரமேஷ் இ.த.சா. 2—க்கு சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து அனுப்பி விட்டு வருவதாகக் கூறி, அதே ஆட்டோ ரிக்ஷாவில் இ.த.சா. 2 உடன் சென்றார். ரமேஷின் நண்பரும், பக்கத்து வீட்டுக்காருமான திரு. ஸ்டாலினும் (இ.த.சா. 3) ரமேஷ் மற்றும் இ.த.சா. 2 ஆகியோருடன் சேர்ந்து சென்றார். லஸ் சர்ச் சாலையிலுள்ள ஆட்டோ ரிக்ஷா நிறுத்தத்தில் ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி விட்டு கச்சேரி சாலையும் இராமகிருஷ்ணா மடம் சாலையும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ள ''சிட்டி ஸ்நாக்ஸ் பார்'' என்னும் சிற்றுண்டிச்சாலையை நோக்கி, ரமேஷ் இ.த.சா. 2 மற்றும் இ.த.சா. 3 ஆகியோர் சென்றனர். அவர்கள், ''சிட்டி ஸ்நாக்ஸ் பார்'' சிற்றுண்டிச்சாலை செல்வதற்கு இராமகிருஷ்ண மடம் சாலையின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ''நேரு நியூஸ் மார்ட்'' கடையிலிருந்து மேற்படி சாலையைக் கடந்து செல்ல வேண்டும்.

(ii) ''லஸ் முனை'' என்பது, நான்கு சாலைகள் சந்திக்கும் இடமாகும். அதாவது, கிழக்கு-மேற்காகச் செல்லும் கச்சேரி சாலை தெற்கு-வடக்காகச் செல்லும் இராம கிருஷ்ணா மடம் சாலை, கிழக்கு-மேற்காகச் செல்லும் லஸ் சர்ச் சாலை மற்றும் தெற்கு-வடக்காகச் செல்லும் இராயப்பேட்டை நெடுஞ்சாலை ஆகியவற்றின் சந்திப்பாகும்.

''லஸ் முனையில்'' சாலையின் மையப் பகுதியில், போக்குவரத்து நிழற்குடை அமைக்கப் பட்டுள்ளது; போக்குவரத்துக் காவலர் இங்கிருந்து போக்குவரத்தை முறைப்படுத்துகிறார். திரு. ஆர். கருடபதி (அ.சா.4) 4—7—1994ஆம் நாளிலிருந்து இ-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பிரிவில் காவல் துறை ஆய்வாளராகப் பணி புரிந்து வருகிறார். பட்டினப்பாக்கம், அபிராமபுரம் காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள போக்குவரத்துப் பிரிவுகளும் இவரது அதிகார வரம்பிற்கு உட்பட்டவையாகும். திரு. ஜி. வேலாயுதம் (அ.சா. 1) நிலை I, காவலர், காவலர்கள் திரு. ஜேசு தேவராஜ் (அ.சா. 5) திரு. எஸ். கிருஷ்ணன் (அ.சா. 2) காவல் துறை ஜீப் ஓட்டுநர் திரு. இ. இராஜேந்திரன் (அ.சா. 3) ஆகிய அனைவரும் இ-1 மயிலாப்பூர் காவல் நிலையப் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

(iii) 12—4—1997 அன்று அ.சா. 5 மாலை 6-00 மணியிலிருந்து இரவு 10-00 மணி வரையில் லஸ் முனையிலுள்ள போக்குவரத்து ஒளிக்குறி (Signal) யிலும் அ.சா. 2 இரவு 7-00 மணியிலிருந்து 9-00 வரையில், இராமகிருஷ்ணா மடம் சாலையில் உள்ள ''ஒட்டல் பிங்கிக்'' அருகேயுள்ள ''வண்டிகள் நிறுத்தக்கூடாத'' பகுதியிலும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அ.சா. 4, 12—4—1997ஆம் நாளன்று மாலை 4-00 மணியளவில் இ. 1 மயிலாப்பூர் காவல் நிலையத்திலிருந்து டி.எஸ்.பி. 8453 ஆம் எண்ணுள்ள காவல் துறை ஜீப்பில் ரோந்துப் பணிக்குப் புறப்பட்டார். அவ்வண்டியை அ. சா. 3 ஓட்டி வந்தார்.

அப்போது பிரச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்த அ. சா. 1 என்பவரும் அவருடன் இருந்தார். அ. சா. 4, அவருடைய அதிகார வரம்பின்கீழ் வரும் சில பகுதிகளை மேற்பார்வையிட்ட பின்னர், அ. சா. 1 உடன் இரவு 8-15 மணிக்கு லஸ் முனையை வந்தடைந்தார். அங்கு கச்சேரி சாலையின் முனையிலுள்ள '' கேரளா ஃபேஷன் ஜுவல்லரி '' என்ற கடைக்கு முன்பு அவருடைய ஜீப்பை நிறுத்தினார். பிக்னிக் ஓட்டல் அருகே '' வண்டிகள் நிறுத்தக்கூடாத பகுதியில் '' பணியிலிருந்த அ. சா. 2 போக்குவரத்துப் பிரிவிற்குப் புதியவர் என்பதால், அவருக்குச் சில அறிவுரைகளை வழங்க வேண்டி, அவரை, (அ. சா. 2-ஐ) அழைத்து வருமாறு அ. சா. 1-க்கு (அ. சா. 4) கட்டளையிட்டார். அதற்கிணங்க, அ. சா. 2-ஐ அழைத்துவர அவர் பணியிலிருந்த இடத்திற்கு அ. சா. 1 சென்றார். அச் சமயம் இராமகிருஷ்ணா மடம் சாலையிலிருந்து இராயப்பேட்டை நெடுஞ்சாலைக்கும் லஸ் சர்ச் சாலைக்கும், கச்சேரி சாலைக்கும் வண்டிகள் கடந்து செல்வதற்கான பச்சை ஒளிக் குறி இருந்தது. அப்போது 6 அல்லது 7 பேர் மேற்குப் பக்கத்திலிருந்து, அதாவது '' நேரு நியூஸ் மார்ட் '' கடையிலிருந்து கிழக்காகச் செல்வதற்கு இராமகிருஷ்ணா மடம் சாலையைக் கடக்க முயற்சித்தனர். வண்டிகள் செல்லுவதற்குரிய பச்சை ஒளிக் குறி போடப்பட்டு, வண்டிகள் கடந்து சென்று கொண்டிருப்பதால், சற்று நேரம் காத்திருந்து சாலையைக் கடக்குமாறு அ. சா. 1 அவர்களிடம் கூறினார். ஆனால், அந்த 6 அல்லது 7 நபர்களில் ஒருவர் அ. சா. 1-ஐப் பார்த்து '' சரிதாண்டா, தேவடியாப் பையா '' என்று சொன்னார். ஆனால், அவ்வாறு பேசிய அந்த நபரை அ. சா. 1 பார்த்த போது, அவர் மிகவும் பவ்யமாக ''சரிதான்னேன் '' என்று கூறினார். சிவப்பு ஒளிக் குறி வரும் போது, சாலையைக் கடக்குமாறு அ. சா. 1 அவர்களுக்கு மீண்டும் அறிவுரை கூறினார். அப்போது, ஏற்கெனவே, அ. சா. 1-ஐப் பார்த்துத் தகாத வார்த்தைகளைப் பேசிய அதே நபர், சில மோசமான வார்த்தைகளைக் (அவை இங்கு குறிப்பிடப்படவில்லை) கூறினார் ; ஆனால், அ. சா. 1 அவரைப் பார்த்தபோது மிகவும் பணிவானவர் போல் போக்குக் காட்டினார். அப்போது மேற்சொன்ன அந்த நபருடன் இருந்த நபர்கள் அ. சா. 1-ஐப் பார்த்துச் சிரித்தனர். சிவப்பு ஒளிக் குறி வந்தவுடன் இராமகிருஷ்ணா மடம் சாலையின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள '' நேரு நியூஸ் மார்ட் '' கடை அருகே அ. சா. 1 சென்று என்ன கூறினாய் என்று அந்த நபரைக் கேட்டதற்கு, தான் யாரென்று உங்களுக்குத் (அ. சா. 1-க்குத்) தெரியாது என்றும் அ. சா. 1 தன்னை நெருங்கினால் தொலைத்து விடுவேன் என்றும் அந்நபர் அச்சுறுத்தினார். அப்போது '' ஓட்டல் பக்கில் '' அருகே நின்று கொண்டிருந்த அ. சா. 2, '' நேரு நியூஸ் மார்ட் '' கடை அருகே வந்து, பணியிலிருக்கும் அ. சா. 1 உடன் சண்டையிட வேண்டாம் என்று அறிவுரை கூறினார். '' நேரு நியூஸ் மார்ட் '' அருகே நடந்தவற்றைக் கண்ணுற்ற அ. சா. 4 அந்த நபர்களைத் தன்னிடம் அழைத்து வருமாறு அ. சா. 1, அ. சா. 2 ஆகியோரிடம் கூறினார். அதற்கிணங்க, அ. சா. 1, அ. சா. 2 ஆகியோருடனும், அ. சா. 1 உடன் சண்டையிட்ட அந்த நபரும் மற்றொரு நபரும் '' கேரளா ஃபேஷன் ஜுவல்லரி '' கடைக்கு எதிரே ஜீப் அருகே நின்று கொண்டிருந்த அ. சா. 4 இடம் வந்தனர். '' நேரு நியூஸ் மார்ட் '' கடை அருகே என்ன நடைபெற்றது என்று அ. சா. 4, அ. சா. 1-ஐ வினவினார். வண்டிகள் கடந்து செல்வதற்காக, பச்சை ஒளிக் குறி இருந்தபோது மேற்படி இருவரும் இராமகிருஷ்ணா மடம் சாலையைக் கடக்க முயற்சித்தனர் என்றும் ; சிவப்பு ஒளிக் குறி வந்த பின்னர் சாலையைக் கடக்குமாறு அறிவுறுத்தியதை அவர்கள் கேட்கவில்லை என்றும் ; அதற்குப் பதிலாக, ஒரு நபர் அ. சா. 1-ஐ கெட்ட வார்த்தைகளைச் சொல்லித் திட்டினார் என்றும், அ. சா. 1 தெரிவித்தார். அந்த நபர் நாகரீகமாகவும், நல்ல உடையணிந்தும் இருப்பதை அ. சா. 4 கண்டார். இவ்வளவு நாகரீகமாகத் தோன்றும் நீ, ஏன் பணியிலிருக்கும் காவலரைத் திட்ட வேண்டும் என்று அ. சா. 4 அந்த நபரை வினவியதற்கு அவர் மௌனமாக இருந்தார். அதன் பின்னர், அந்த நபரைத் தன்னுடைய ஜீப்பில் ஏற்றி மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவிடம் ஒப்படைக்குமாறு அ. சா. 4, அ. சா. 1-க்குக் கட்டளையிட்டார். ''நேரு நியூஸ் மார்ட் '' கடைக்கு எதிராக நடந்த சம்பவத்தையும், அ. சா. 1 உடன் சண்டையிட்ட நபரை, அ. சா. 4 இட்ட கட்டளையின் பேரில், ஜீப்பில் ஏற்றிக் கொண்டு செல்வதையும், லஸ் முனையில் போக்குவரத்து நிற்கருகையின்றி போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் இருந்த திரு. ஜகத் தேவராஜுலு (அ. சா. 5) கவனித்தார்.

(iv) அ.சா. 3 ஜீப்பை ஓட்டினார். ஜீப் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்ட பின்னர், முதலில் பணியாற்றிக் கொண்டிருந்த அதே பணி இடத்திற்கே திரும்பிப் போகுமாறு அ.சா. 2 கேட்டுக் கொள்ளப்பட்டார். அ.சா. 1-உடன் சண்டையிட்ட நபரோடு வந்த மற்றொரு நபர் ஏதும் செய்யவில்லை என்று அ.சா. 2 தெரிவித்திருந்ததன்பேரில், அவர் திருப்பி அனுப்பப் பட்டார். லஸ் முனையிலிருந்து மயிலாப்பூர் காவல் நிலையத்தை நோக்கி, அதாவது, மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக ஜீப் சென்று கொண்டிருந்தபோது, ஓட்டுநருக்குப் பின் புறமிருந்த நீண்ட இருக்கையில் அ.சா. 1-ம் லஸ் முனையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட நபர் அ.சா. 1 அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே இருந்த மற்றொரு நீண்ட இருக்கையிலும், அமர்ந்திருந்தனர். ஜீப்பின் முன் இருக்கையில் அ.சா. 3-க்கு அருகில் எவரும் அமரவில்லை. கால்வாய் பாலத்தைத் தாண்டி (Canal Bridge) இராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிர்புறம் ஜீப் சென்று கொண்டிருந்தபோது, கிழக்குப் பக்கத்திலிருந்து லஸ் முனையை நோக்கி வழித்தட எண் 12-பி கொண்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று வந்ததால், அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, காவல் துறையின் ஜீப் உட்பட அனைத்து வண்டிகளும் மெதுவாகக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. இவ்வாறு ஜீப் மெதுவாகச் சென்று கொண்டிருந்தபோது, போக்குவரத்து ஏன் ஊர்ந்து செல்கிறது என்றும் அறியும் ஆவலின் பேரில் அ.சா. 1 அவருடைய இருக்கையிலிருந்து முன்புறம் எட்டிப் பார்த்தார். அச் சமயம், ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்ட அந்த நபர் திடீரென ஜீப்பிலிருந்து வெளியே தாவிக் குதித்து லஸ் முனையை நோக்கி, அதாவது, மேற்குப் பக்கமாகவும், பின்னர் கல்விராயன் தெரு

வழியாக வடக்குப் பக்கமாகவும் ஓடினார். அ.சா. 1 ஜீப்பிலிருந்து இறங்கி அந்த நபர் ஓடுவதைப் பார்த்தார். ஆனால், சாலையில் வண்டிகள் சென்று கொண்டிருந்ததாலும், அந்த நபர் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்ததாலும், சென்று கொண்டிருக்கும் வண்டிகள் அவர் மீது மோதிவிடக் கூடும் என்பதாலும் அ.சா. 1 அந்த நபரை துரத்திப் பிடிக்க முயலவில்லை. இந்த சம்பவத்தைக் கண்ணுற்ற அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த சிலர் அ.சா. 1 ஐப் பார்த்து, ஒருவன் ஜீப்பிலிருந்து குதித்து, தப்பி ஒடும்போது ஏன் வெறுமனே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது தப்பி ஒடும் அந்த நபர், அவரே விபத்தில் மாட்டிக் கொள்வார் என்பதால்தான் அவரைப் பிடிக்க முயற்சிக்க வில்லை என்று அ.சா. 1 தெரிவித்தார். கால்வாய் பாலம் மற்றும் கல்விராயன் தெரு (கால்வாயின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள இது கல்லுக்காரன் தெரு என்றும் அழைக்கப் படும்) ஆகியவற்றின் வழியாக ஓடுவதை, இராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரேயுள்ள சாலையின் நடைபாதையில் பூ விற்கும் தன் மூத்த சகோதரி திருமதி இராஜம்மாள் என்பவருக்கு உதவி புரிந்து வரும் திருமதி. கலாவும் (அ.சா. 6) ஜீப்பிலிருந்து ஒரு நபர் குதித்து ஒடுவதைப் பார்த்தார். அதன்பின்னர், அ.சா. 1 ஜீப்பில் ஏறி, லஸ் முனையில் அ.சா. 4 காத்திருக்கும் இடத்திற்குத் திரும்பி, தான் அழைத்துச் சென்ற நபர் இராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரே தப்பிச் சென்றுவிட்ட சம்பவத்தை அ.சா. 4-இடம் தெரிவித்தார். அ.சா. 4 கோபமுற்று, அலட்சியமாக இருந்ததற்காக, அ.சா. 1 ஐத் திட்டினார். அ.சா. 1-ம், அ.சா. 4-ம் லஸ் முனையில் இரவு 9-00 மணி வரை இருந்தனர்.

(v) பக்கிங்காம் கால்வாய் வடக்கு-தெற்காக செல்கிறது. இதில் கரை நெடுக பெருநகரப் போக்குவரத்துத் திட்டம் (ரயில்வே) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கால்வாய் கரை நெடுக பெரிய காண்கிரீட் தூண்கள் நிறுவப்பட்டு, அதன்மீது ரயில் இருப்புப்பாதை போடப்பட்டுள்ளது. இந்தத் தூண்களை நிறுவ கால்வாய்க் கரையில் ஆழமாகத் தோண்ட வேண்டியிருந்ததால், அவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட மண், அந்தக் கால்வாயில் போடப் பட்டு, அது சேரும் சகதியுமாக நிரம்பி வழியும் அளவிற்குக் கால்வாய் இருந்தது. இதன் விளைவாக, கால்வாயில் கழிவு நீர் தடையின்றி ஓட முடியாமல், மயிலாப்பூர் பகுதியில் கால்வாய் வடிகால் நீர் வழியில் அடைப்பை ஏற்படுத்தியது. பொதுமக்கள் புகார் செய்ததன் பேரில், தமிழ்நாடு அரசு, பொதுப்பணித் துறையின் 21-8-1996 ஆம் நாளிட்ட 580 ஆம் எண் அரசு ஆணையில் (கா.ஆ. P 15) பள்ளிக்கரணை வரை இந்தக் கால்வாயில் முன்று கட்டமாக, தூர் வாரி, சகதிகளை அகற்ற ஆணையிட்டது. மேற்சொன்ன பணி, 1996 ஆகஸ்டில் தொடங்கி 1997 மார்ச்சில் முடிந்தது. தூர் வாரும் பணியைத் துறை மேற் கொண்டபோது, இந்தக் கால்வாயை 10 அடி ஆழத்திற்குத் தோண்ட வேண்டியிருந்தது. இப்போதுங்கூட., இந்தக் கால்வாய் 10 அடி ஆழம் இருக்கும். இந்தத் தூர் வாரும் பணி முடிந்த பிறகும்கூட மயிலாப்பூர் பகுதியிலிருந்து வரும் மழை நீர், கழிவு நீர், இந்தக் கால்வாயில் வந்து சேர விடுவதால், இந்தக் கால்வாய் நீரும் சகதியுமாகவே இருக்கிறது. அ.சா. 14 இது தொடர்பாக 25—6—1997 ஆம் நாளன்று மயிலாப்பூர் காவல் துறை ஆய்வாளரிடம் அறிக்கை ஒன்றை (சா. ஆ. P. 16) அளித்துள்ளார். பெருநகரப் போக்கு வரத்துத் திட்டத்திற்காக (ரயில்வே) தூண்கள் நிறுவுவதற்காக தோண்டப்படுவதற்கு முன் இந்தக் கால்வாய் ஆழமானதாக இல்லை. ஆகையால் மக்கள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செல்ல கால்வாயில் எளிதில் நடந்து செல்ல முடிந்தது.

(vi) பெருநகர போக்குவரத்துத் திட்டத்தின் கட்டுமானப் பணியைச் செய்துவந்த ஒப்பந்தக்காரர் திருவாளர்கள் பாரூக் அண்டு கம்பெனியில் இரவு 8 மணி முதல் காலை 8 மணி வரை இரவுக் காவலராக இருந்தவர் திரு. மூர்த்தி (அ.சா. 7) ஆவார். இவருடைய காவல்பணி மயிலாப்பூர் முண்டக்கண்ணியம்மன் கோயில் அருகே பெ.போ.நி. (ரயில்வே) பாலத்திலிருந்து, கச்சேரி சாலை பக்க பெ.போ.நி. (ரயில்வே) பாலம் வரைக்குமாக இருந்தது. அவர் 12—4—1997 அன்று இரவுப் பணியில் இருந்தார். சென்னை, மயிலாப்பூர், இராமகிருஷ்ணபுரம் எனப்படும் பட்டுநூல்காரன் VI தெரு, 50 ஆம் எண் வீட்டில் வசிப்பவர் கண்ணப்பன் (அ.சா. 11) ஆவார். இந்த இடம் கால்வாயின் கிழக்குப் பக்கம் உள்ளது. திருமதி மகேஸ்வரி (அ.சா. 10) என்பவர், அ.சா. 11 வீட்டிலிருந்து 25 அடி தொலைவில் வசிக்கிறார். 12—4—1997ஆம் (ஞாயிற்கிழமை) நாளன்று இரவு சுமார் 9-00 மணிக்கு வழக்கம் போல அ.சா. 11 வீட்டில் அ.சா. 10 தொலை காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த போது, அவரும் அ.சா. 11-ம் வெளியே ''ஐயோ காப்பாத்துங்க, காப்பாத்துங்க'' என்ற சத்தம் வருவதைக் கேட்டனர். அ.சா. 10, 11 வீட்டிற்கு எதிர்ப்பக்கம் கல்விராயன் தெருவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அ.சா. 7-ம் அப்போது அந்தகைய சத்தத்தைக் கேட்டார். அ.சா. 10, 11 ஆகியோர் வசித்து வரும் தெரு, அ.சா. 7 இரவுக் காவலராக இருந்த இடம் ஆகியவற்றைத் தனித்தனியாகப் பிரிக்கும் வகையில் அவற்றிற்கு நடுவே கால்வாய் செல்கிறது. கல்விராயன் தெரு, கதவிலக்கம் 5-ல் உள்ள மெக்கானிக் கொட்டகையில் பணிபுரிந்து வந்த சிலர், கால்வாயை நோக்கி ஓடினர். அவர்களைத் தொடர்ந்து அ.சா. 7-ம் சென்றனர். கால்வாயின் இருபுறமும் சிறு கூட்டம் கூடியது. அப்போது சில பெண்கள், கால்வாயில் ஒரு சிறுவன் விழுந்து விட்டான் என்றும், அவனைக் காப்பாற்றுங்கள் என்றும் கத்தினர். சிலர் அந்தச் சிறுவனைத் தேட முயன்றனர். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இரவு சுமார் 10-00 மணிக்கு யாரோ ஒருவர் மயிலாப்பூர் காவல் நிலையத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கல்விராயன் தெரு, கதவிலக்கம் 5-க்கு எதிரே கால்வாயில் ஒருவர் விழுந்து விட்டார் என்று தெரிவித்தார். தலைமைக் காவலர் எண் 3347 திரு. பா. பாலகிருஷ்ணன் (அ.சா. 16) உடனடியாக அந்த இடத்திற்குச் சென்றார். அங்கு 25, 30 பேர் கூடியிருந்தனர். கூட்டத்திலிருந்த ஒருவர், கல்விராயன் தெரு, கதவிலக்கம் 5-க்கு எதிரே ஒரு குறிப்பிட்ட

இடத்தை அ.சா. 16-க்குச் சுட்டிக்காட்டி, அந்த இடத்தில் தான் அந்த நபர் விழுந்தார் என்று தெரிவித்தார். அ.சா. 16 அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தபோது அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மயிலாப்பூர் வட்டச் செயலாளர் திரு. எம். குமார் (அ.சா. 8) ஆவார். இவர், கல்விராயன் தெருவிற்கு எதிரே உள்ள பட்டுநூல் காரன் தெருவில் வசிக்கிறார். இவருடைய மனைவி மாநகராட்சியின் 144 ஆவது வட்டஉறுப்பினர் (தி.மு.க. கட்சி) ஆவார். கால்வாயில் ஒருவர் விழுந்துவிட்டார் என்ற தகவலைக் கேட்டு மேலும் சிலருடன் அந்த இடத்திற்கு அவர் சென்றார். அந்த நபர் விழுந்த இடம் என்று அவரிடமும் ஒரு இடத்தைக் காட்டினார். விழுந்ததாக சொல்லப்பட்ட அந்த இடத்தில் எந்தவொரு நபரையும் அவரால் காண இயலவில்லை. அவர் உடனடியாக உதவிக்காக தீயணைப்புத் துறைக்கு தொலைபேசி செய்தார். பெ.போ.தி. (ரயில்வே) பாலம் கீழே பக்கிங்காம் கால்வாயில் ஒருவர் விழுந்து விட்டார் என்பது குறித்து எழும்பூரிலுள்ள தீயணைப்பு கட்டுப்பாட்டு அறையிலிருந்து மயிலாப்பூர் தீயணைப்பு நிலையத்தில் உள்ள பெயர் பெற்ற தீயணைப்பு ஆளான திரு. ஃஜேஸ் (அ.சா. 9) இரவு 10-25 மணிக்கு தொலைபேசிச் செய்தி வரப்பெற்றார். அவர் அவருடைய ஆட்களான வீராராகவன், மதிவாணன் ஆகியோருடன் டி.என். 01ஜி 0597 என்ற எண்ணுடைய லாரியில் அந்த இடத்திற்கு சென்றார். கால்வாயில் அந்த நபர் விழுந்த இடம் என்று ஒரு இடம் அவருக்குக் காட்டப்பட்டது. அ.சா. 9 அவருடைய இடுப்பில் கயிறைக் கட்டிக்கொண்டு அவருடைய ஆட்கள் மதிவாணனும் வீராராகவனும் கால்வாய்க் கரையில் இருந்து பிடித்துக்கொள்ள இவர் கால்வாயில் இறங்கினார். ஆனால், அந்தக் கால்வாயில் அதிகமாக சகதிகள் இருந்ததால், அவரால் மேற்கொண்டும் செல்ல முடியவில்லை. அவருடைய ஆட்கள் அவரை மேலே தூக்கி விடவேண்டியிருந்தது. பிறகு அவர் அவசர மீட்பு வண்டியையும் பல கொக்கிகள் கொண்ட நங்கூரத்தையும் அனுப்புமாறு தீயணைப்புப் பணிக் கட்டுப்பாட்டு அறைக்கு உடனடி செய்தி ஒன்று (Wireless message) அனுப்பினார். அதற்கேற்ப மேற்சொன்ன சாதனங்களுடன் தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் வந்தனர். கால்வாயின் உள்ளே இருந்து பல கொக்கிகள் கொண்ட நங்கூரத்தைப் பயன்படுத்தி, ஒருவரது உடலை அவர்கள் வெளியே எடுத்தனர், சுமார் 25 வயதுள்ள ஒருவரின் உடல் தரையில் கிடத்தப்பட்டது. இறந்துவிட்டவர் கறுப்பு பேண்ட்டும் கோடு போட்ட சட்டையும், கறுப்பு ஷூவும் அணிந்திருந்தவராகக் காணப்பட்டார். இந்த மீட்புப் பணியின்போது அங்கிருந்த அ.சா. 16 இடம் அந்த உடலை அ.சா. 9 ஒப்படைத்தார். கூட்டத்தில் இருந்த எவராலும் இறந்தவர் யார் என்று அடையாளம் காண முடியவில்லை. அ.சா. 16, இரவு சுமார் 11-30 மணிக்கு அ.சா. 7-இடமிருந்து ஒரு புகாரைப் பெற்றுக் கொண்டு (சா.ஆ. P 25) குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 174 ஆம் பிரிவின்கீழ் 718/97 ஆம் குற்ற எண்ணில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்தார். சா.ஆ. P-20 என்பது அ.சா. 16 தயாரித்த முதல் தகவல் அறிக்கையின் கார்பன் நகல் ஆகும். சா.ஆ. P-20-ன் நகல்கள் நடவடிக்கை எடுப்பதற்காக காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. அந்த நபரின் உடலை அ.சா. 16 காவல் துறைக் காவலர்களான கலையரசன், வில்சன் (அ.சா. 17) ஆகியோரிடம் ஒப்படைத்தார்.

(vii) மயிலாப்பூர் காவல் நிலைய சட்டம்–ஒழுங்கு காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. எஸ். பாண்டியன் (அ.சா. 41) அவருடைய பந்தோபஸ்து பணிக்குப் பிறகு இரவு 12-15 மணிக்கு (12—4—1997 நடு இரவு) காவல் நிலையம் திரும்பினார். கல்விராயன் தெரு கதவிலக்கம் 5-க்கு எதிரே தற்செயலாகக் கால்வாயில் விழுந்து விட்டவரின் உடலை தீயணைப்புத் துறையினர் கால்வாயிலிருந்து வெளியே எடுத்தது குறித்து அ.சா. 16 அவரிடம் தெரிவித்தார். அ.சா. 41 இந்த வழக்கில் புலனாய்வை மேற்கொண்டு அந்த உடல் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றார். இறந்த நபர் கறுப்பு பேண்ட், கோடுபோட்ட சட்டை, கறுப்பு ஷூ அணிந்திருந்ததை அவரும் பார்த்தார். தீயணைப்புத் துறைப் பணியாளர்களும் பொதுமக்களும் அங்கே இருந்தனர். இறந்த நபர் இன்னாரென்று அடையாளம் காட்ட முடியுமா என்று அ.சா. 41 அந்த கூட்டத்தில் இருந்தவர்களைக் கேட்டார். ஆனால் எவராலும் அந்த நபரை அடையாளங்காட்ட முடியவில்லை. புகார் (சா.ஆ. P 25) கொடுத்த அ.சா.7 இது தொடர்பாக தனது இயலாமையையும் தெரிவித்தார். சடலத்தை அடையாளம் காண இயலும் வகையில் காவல் துறையின் புகைப்படக்காரர்களது உதவியுடன் இறந்த நபரை (உடலை) புகைப்படம் எடுத்து விளம்பரப்படுத்த அ.சா. 41 முயற்சித்தார். ஆனால், அப்போது நடு நிசி நேரம். ஆதலால் அவ்வாறு செய்ய அவரால் இயலவில்லை. ராஜா கல்யாண மண்டபம் அருகில் உள்ள தினகரன் நாளிதழ் அலுவலகம் சென்று செய்தியாளர் திரு. முத்தையா (அ.சா. 22) வைப் பார்த்து கால்வாயில் விழுந்து மூழ்கி இறந்துபோன நபர் ஒருவரைப் புகைப்படம் எடுக்க அலுவலகத்தில் புகைப்படம் எடுப்பவர் எவரேனும் இருக்கின்றனரா என்று அவர் விசாரித்தார். அ.சா. 22 திரு. சேவியரை (அ.சா. 12) அ.சா. 41 உடன் அனுப்பி தேவையான புகைப்படங்களை எடுக்கச் சொன்னார். அ.சா. 12 இறந்தவர் சடலத்தை (சா.பொ. 1, சா.பொ. 2 நிகரான நெகட்டிவ்களுடன்) புகைப்படங்கள் எடுத்தார். அடுத்த நாள் (13—4—1997) காலை தினகரன் செய்தித்தாளில் இறந்து போனவரின் பாதி அளவு புகைப்படம் வெளியானது. சா.பொ. 3 என்பது, இறந்து போனவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக வெளிவந்த பத்திரிகை செய்தியாகும். இறந்துபோனவரின் முழு உருவத்தைக் காட்டும் மற்றொரு புகைப்படம் செய்தித்தாளில் வெளியிடப்படவில்லை. அ.சா. 22-ம் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அ.சா. 12 புகைப்படங்கள் எடுத்த அங்கிருந்த சடலத்தைப் பார்த்தார். அப்போது போதிய வெளிச்சம் இல்லாததாலும், நடுநிசி நேரமாக இருந்ததாலும், அ.சா. 41 சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை நடத்த இயலவில்லை. இறந்துபோனவரின் சடலம், சவப் பரிசோதனைக்காக இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அ.சா. 17 மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அ.சா. 7 மற்றும் எனைய 12 பேரை

சம்பவ இடத்தில் அ.சா. 41 விசாரித்து விட்டு 13—4—1997 அன்று அதிகாலை 4-00 மணிக்குக் காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்து, பிறகு தனது வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். 13—4—1997 அன்று காலை 7-00 மணிக்கு அவர், பணிக்காக காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்தபோது, கால்வாயிலிருந்து எடுக்கப்பட்ட சடலம் பல்லக்குமானியத்தைச் சேர்ந்த (மாதவராவ் தோட்டம்) இரமேஷ் என்பவரின் சடலம் என்றும், லஸ் முனைக்கு அருகில் ஒரு பெரும் கும்பல் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வன்முறையில் ஈடுபட்டுள்ளதாகவும், காவல் நிலைய எழுத்தர் திரு. நடராஜன், அவரிடம் தெரிவித்தார். அ.சா. 41, பாதுகாப்பு

(viii) இதற்கிடையில், முந்தைய நாள் இரவு சுமார் 9-00 மணிக்கு லஸ் முனையில் அ. சா. 4, தனது பணியை முடித்து விட்டு அ. சா. 3 ஓட்டி வந்த ஜீப்பில் அ. சா. 1 உடன் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்தார். அவர் அங்கு வந்த போது, மின் விளக்குகள் எரியாததால், மயிலாப்பூர் காவல் நிலைய வளாகம் முழுவதும் இருட்டாக இருந்தது. அ. சா. 4, தனது ஜீப்பை, போக்குவரத்துப் பிரிவு அலுவலகத்திற்கு அருகில் நிறுத்திவிட்டு நின்றிருந்தார். சற்று தூரத்தில் அ. சா.1 நின்றிருந்தார். அப்போது, ஒருவர் அ. சா. 4-ஐ அணுகி அவருடைய ஜீப்பில் அழைத்து வந்த பையன், தன்னுடைய பையன் என்றும் கூறினார். அதற்கு அந்தப் பையன், நாகரீகமாகவும், நல்ல உடை அணிந்தவனாகவும் தெரிந்தான். ஆனால், காவல் துறையினரிடம் அநாகரீகமாகவும் கீழ்த்தரமாகவும் நடந்துள்ளான் என்று அ. சா. 4 குறிப்பிட்டுள்ளார். காவல் நிலையத்திற்கு அவனை அழைத்து வந்த வழியில் ஜீப்பிலிருந்து அவன் கீழே குதித்து ஓடி விட்டதாகவும், இந்தோ அவன் வீட்டிற்குப் போயிருப்பான் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அவனுக்கு நல்ல அறிவுரை கூறி நாளைக்கு அவனை அழைத்து வருமாறும் அவர் தெரிவித்தார். அ. சா. 4 கூறியது உண்மை என்று நம்பி, மேற்படி நபர், அங்கிருந்து போய்விட்டார். பன்னீர்செல்வம் (இ.த.சா. 2) மற்றும் ஸ்டாலின் (இ.த.சா. 3) அளித்த தகவல்களின் பேரில், தான் காவல் நிலையத்திற்குச் சென்றதாகவும், மயிலாப்பூர் போக்குவரத்துக் காவல் துறையினர், லஸ் முனையில் வாய்த் தகராறு செய்ததின் பேரில் அவருடைய மகன் ரமேஷைப் பிடித்து வைத்திருந்தனர் என்றும், இ.த.சா. 1 தன்னுடைய சாட்சியத்தில் கூறுகிறார். இரவு சுமார் 9-10 மணிக்குப் போக்கு வரத்துக் காவல் துறையினரும் ரமேஷும் லஸ் முனையில் இல்லாததால் இ.த.சா. 1 தன்னுடைய மகன் ரமேஷ் பற்றி விசாரிக்க காவல் நிலையத்திற்குச் சென்றார். அ.சா. 4 தனது தன் குறிப்பேட்டில் 12—4—1997 அன்று பதிவுகள் செய்துள்ளார். அவற்றில் சா. ஆ. பி-97, என்பது, கார்பன் நகல். சா. ஆ. பி-99 என்பது, ஜீப்பில் அந்த நபரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றது பற்றியும் வழியில் அவர் தப்பித்துவிட்டது பற்றியும் காவல் துறைப் போக்கு வரத்து உதவி ஆணையர் திரு. சேஷனுக்கு (அ. சா. 46) அனுப்பிய மூல நகல் ஆகும். தமிழ்நாடு மின் வாரியத்தின் மந்தைவெளி—பட்டினப்பாக்கம் பிரிவில் ஒயர்மேனாகப் பணிபுரியும் திரு. வேணுகோபாலுக்கு (அ. சா. 15) 12—4—1997 நடு இரவு 1-35 மணிக்கு மின் தடை ஏற்பட்டிருப்பதாகத் தகவல் ஒன்று மயிலாப்பூர் காவல் நிலையத்திலிருந்து வந்தது. எனவே இடங்களிலிருந்தும் அதே போன்ற தகவல்கள் அவருக்கு வந்தன. லீயூஸ் கால் பதிவேட்டில் (சா. ஆ. பி-18) அவற்றிர்குரிய பதிவுகளை அவர் செய்துள்ளார். அதில், உதவிப் பொறியாளர் திரு. சிதம்பரம் கையொப்பமிட்டுள்ளார். அ. சா. 15, தன்னுடைய உதவியாளருடன் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குச் சென்று அங்கு மின் கம்பிகள் அறுந்து உருகிப் போய் இருந்ததைக் கண்டறிந்தார். பின்னர், நேரடி மின் இணைப்புக் கொடுத்து மின் வழங்கல் சீரடைய நடவடிக்கை மேற்கொண்டார்.

(ix) அடுத்த நாள் காலை (13—4—1997) இ.த.சா. 1 பல்லக்குமானியத்தைச் சேர்ந்த ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் விஜி என்பவரை விசாரித்தார். பிறகு பூ வியாபாரியான சௌந்தர்யா என்பவரிடம் இ. த. சா. 1 அவர் அழைத்துச் சென்றார். இ.த.சா. 1 தன்னுடைய மகன் ரமேஷ் பற்றிய அடையாளங்களைச் சௌந்தர்யாவிடம் கூறினார். ரமேஷ் ரூ. 1,250 சொக்கம், ஒரு பேனா, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் அட்டை ஆகியவற்றை வைத்திருந்த தாகவும், தெரிவித்தார். ரமேஷ் கால்வாயில் விழுந்து இறந்திருக்கக் கூடிய நிலையில், தியணைப்புப் பணியாளர்கள் முந்தைய நாள் இரவு 11-30—12-00 மணியளவில் இ. த. சா. 1-ன் மகன் ரமேஷின் சடலத்தைப் பக்கிங்காம் கால்வாயிலிருந்து எடுத்தது பற்றி சௌந்தர்யா வருத்தத் துடன் கூறினார். இச்செய்தியைக் கேட்டதும், இ. த. சா. 1 மற்றும் அவருடைய மனைவி லதா அதிர்ச்சியுற்று, கவலை கொண்டு லஸ் முனையை நோக்கி விரைந்தனர். வழியில் முத்துராஜ் என்பவரை அவர்கள் சந்தித்தனர். அவர், 13—4—1997 ஆம் நாளிட்ட தினகரன் செய்தித் தாளைக் காட்டினார். "மயிலாப்பூர் கூவத்தில் விழுந்தவர் சாவு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட செய்திகள் புகைப்பட ஆதியவை அவருடைய மகன் ரமேஷ் சம்பந்தப்பட்டவையா என்று இ. த. சா. 1-ஐக் கேட்டார். இ. த. சா. 1 செய்தியையும், புகைப் படத்தையும் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அவர், மயிலாப்பூர் காவல்நிலையத்திற்குச் சென்று என் மகன் ரமேஷை என்ன செய்தீர்கள், ஏன் கொன்றீர்கள்? என்று கத்தினார். காவல் நிலையத்திற்கு முன் கும்பல் ஒன்று கூடியது.

(x) சுமார் காலை 7-00 மணிக்குத் தினகரன் செய்தித்தாள் துணை ஆசிரியர் திரு. சீனிவாசன் (அ. சா. 13) அலுவலகத்தில் இருந்தபோது, சுமார் 100 பேர் அடங்கிய கும்பல் ஒன்று, சோடா பாட்டில்கள், சவுக்குக் கம்புகள், கற்கள் ஆகிய ஆயுதங்களுடன் தினகரன் செய்தித் தாள் அலுவலகத்தில் நுழைந்து அலுவலகத்தில் இருந்தவர்களிடம் கூவத்தில் விழுந்தவர் யாரென்று தெரியவில்லை என்ற செய்தியை எப்படி வெளியிடலாம் என்றும் கூவத்தில் ஒருவர் விழுந்தது

தவறுதலாக நடந்த சம்பவம் என்பது எவ்வாறு தெரியும் என்றும், அங்கு அலுவலகத்தில் இருந்தவர்களை வினவினார். காவல் துறையினர், அவரைத் துன்புறுத்தி, கொன்று உடலை கால்வாயில் வீசி எறிந்து விட்டனர் என்றும், கூட்டத்தினர் சத்தம் போட்டனர். தினகரன் பத்திரிகை, அத்தகைய பொய்யான செய்திகளை என் வெளியிட வேண்டும் என்றும் வினவினர். அ. சா. 13-ம் ஏனையோரும் தங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அச் செய்திகளையும் புகைப்படத்தையும் வெளியிட்டதாக அங்கிருந்த கூட்டத்தினருக்கு விளக்கினர். கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு காவலர்கள் சுடலையையும், கோம்பையையும் தாக்கி விட்டு, மறுநாள் அதாவது 14—4—1997 அன்று வெளி வரவிருந்த தினகரன் தமிழ்ப் புத்தாண்டு மலரை தாறுமாறாகத் தூக்கி வீசினர். மேலும், அவர்கள் சில புத்தகங்களையும், தீ வைக்க முயன்றதோடு கதவு, சன்னல் சட்டங்களைக் கற்களால் அடித்து உடைத்தனர். தமிழ்ப் புத்தாண்டு மலர்ப் புத்தகங்கள் ஏற்றியிருந்த அலுவலக வேன் ஸ்வராஜ் மாஸ்டாவையும் கூட்டத்தினர் தாக்கி சேதப்படுத்தினர். கூட்டத்தினர் சில புத்தகக் கட்டுக்களையும் தூக்கிச் சென்றனர். அவருடைய அலுவலகத்தைச் சேர்ந்த சுமார் 15 பேருடைய உதவியுடன், அ. சா. 13 மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடுவதிலிருந்து அவர்களைத் தடுக்க முயன்றார். அதில், அவருடைய அலுவலகத்தைச் சேர்ந்த 7 அல்லது 8 பேர் காயமடைந்தனர். கண்ணாடித் துண்டுகள் தாக்கியதால் அ. சா. 13-ன் கீழ் உதட்டிலும் கீழ் தாடையிலும் காயம் ஏற்பட்டு, தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றார். ''தினகரன்'' இயந்திர முதலாள் அ. சா. 18 திரு. பலவேசத்திற்குக் காலில் காயம் ஏற்பட்டு, தனியார் மருத்துவ மனையில் அவர் சிகிச்சை பெற்றார். ''சோடா'' பாட்டில் தாக்குதலால் அலுவலக உதவியாள் திரு. இசக்கி துரைக்குத் (அ. சா. 21) தலையில் காயம் ஏற்பட்டு, சான்றாவணம் பி. 44 வரிசைப்படி 10 நாட்களுக்குத் தேவதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். வன்முறைக் கும்பல் மயிலாப்பூர் காவல் நிலையத்திலிருந்து தினகரன் அலுவலகத்தை நோக்கிச் சென்று அங்கிருந்து வஸ் கார்னரை நோக்கிச் சென்றது என்பதைக் கேள்வியுற்று மயிலாப்பூர் காவல் நிலைய சட்டம்-ஒழுங்குப் பிரிவு காவல் துறை ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி (அ. சா. 44) லஸ் கார்னரை நோக்கிச் சென்றார். அவர், அங்கு சென்ற போது சுமார் 200 பேர் கொண்ட கூட்டம் ஒன்று அங்கிருந்தது. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. வி. கே. ராஜகோபாலன், இ.கா.ப. (அ. சா. 45) உத்தரவுகளின் பேரில் மயிலாப்பூர் காவல்நிலைய சட்டம்-ஒழுங்கு பிரிவு காவல்துறை உதவி ஆணையாளர் திரு. கே. தோதண்டராமன் (அ. சா. 43) லஸ் கார்னர் வந்து சேர்ந்தார்; லஸ் கார்னரில் சுமார் 500 பேர் கொண்ட கும்பல் ஒன்று அனைத்து பக்கங்களிலும் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர், சாலையின் அனைத்துப் பக்கங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்; ஆனால், அவர்கள் கலைந்து செல்லவில்லை.

(xi) காலை சுமார் 9-00 மணிக்கு மயிலாப்பூர் சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் திரு. என். பி. ராமஜெயம் (அ. சா. 42) அங்கு வந்து ரமேஷின் தந்தை இ.த.சா. 1 இடமிருந்து (சா. ஆ. பி 26) புகார் ஒன்றைப் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அப்புகாரை அ. சா. 43 இடம் கொடுத்தார். சம்பவ இடத்திற்குச் சென்ன மாவட்ட ஆட்சியர் வரவிருப்பதால், கா. நி. ஆ. 145-ன் கீழ் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, கூட்டத்தினர் அமைதியாகக் கலைந்து செல்லுமாறு அ. சா. 42 கூட்டத்தினரிடம் தெரிவித்தார். அ. சா. 43-ம் ஏனைய காவல்துறை அதிகாரிகளும் அதே ஆலோசனையைக் கூட்டத்தினருக்குத் தெரிவித்தனர். ஆனால், கூட்டத்தினர் அதைக் கேட்கவில்லை. கூட்டத்தினர் அமைதியற்று அ. சா. 42 மர்ம்ம் காவல்துறை அதிகாரிகளையும் திட்டினர். காலை சுமார் 10-30 மணிக்குக் கூட்டத்தில் ஒரு பிரிவினர் விளம்பரப் பலகைகளின் மீதும், காவலர்களின் மீதும் கல்லெறிந்தனர். அதில், காவல்துறை இணை ஆணையாளரின் (தெற்கு) அம்பாசிடர் காரும், டெல்டா வேன், எண். 29-ம் சேதமடைந்தது. அப்பகுதியிலிருந்து கடைகளின் பெயர்ப் பலகைகளும், லஸ் கார்னரிலுள்ள போக்குவரத்துக் காவல் நிழற்குடையும் சோடியும் விளக்குகளும் கல்லெறி பிலாலும் சோடா புட்டிகள் அடிக்கப்பட்டதாலும், தடிகளால் தாக்கியதாலும் சேதமடைந்தன. அந்த இடத்தில் பணியிலிருந்த காவல்துறைப் பணியாளர்களும் காய மடைந்தனர். அ. சா. 43 வன்முறையில் ஈடுபட்டிருந்த கூட்டத்தினரை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு எச்சரிக்கை செய்தார். ஆனால், அவர்கள் அதற்குச் செவி சாய்க்காது, மயிலாப்பூர் காவல் நிலையத்தைத் தாக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு அவர்கள் வேகமாக முன்னேறினர். அ. சா. 43 வன்முறையில் ஈடுபடவேண்டாம் என்று மீண்டும் அவர்களை எச்சரிக்கை செய்தார்; அதில் பயனேதும் ஏற்படவில்லை. காலை சுமார் 10-45 மணிக்குக் கூட்டத்தினரை நோக்கி கண்ணீர்ப்புகைக் குண்டை வீசுமாறு அ.சா. 43, காவலர் 2863 அதாவது திரு. சீதாராமனுக்கு (அ.சா. 35க்கு) ஆணையிட்டார். அப்போதும் கூட்டம் கலையவே இல்லை. மீண்டும் அ.சா. 43-ன் ஆணையின் பேரில் மூன்று கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. பிறகு, கூட்டத்தினர் மூன்று பிரிவுகளாக கலைந்தனர். ஒரு பிரிவினர் ராமகிருஷ்ணா மடம் சாலையை நோக்கியும் மற்றொரு பிரிவினர் லஸ் சர்ச் சாலையை நோக்கியும் இன்னொரு பிரிவினர் நாகேஸ்வர ராவ் பூங்காவிற்கு அருகே காமதேனு திரை அரங்கிற்கு எதிரிலுள்ள மாதவராவ் கார்டன் தெருவை நோக்கியும் ஓடினர், அப்போதும் கூட்டத்தினர் வண்டிகளையும், போக்குவரத்துப் பேருந்துகளையும் தாக்கி சேதப்படுத்தினர். காலை சுமார் 11-45 மணிக்கு லஸ் சர்ச் சாலையில் மாதவராவ் கார்டன் II ஆவது தெருவில் சுமார் 500 பேர் மீண்டும் ஒன்று கூடி கற்களையும், சோடாபுட்டிகளையும் வீசி, காவல் துறையினரை அடித்துக் கொல்ல வேண்டும் என்று கோஷமிட்டுக் கொண்டிருப்பதை அ. சா 45 காவல்துறை ஆணையாளர் கண்டார். சிலர் குடியிருப்புப் பகுதிகளின் மேற்பகுதியில் நின்று கொண்டு கல்லெறிந்தனர். அ.சா. 45-ம் ஏனைய காவல்துறை அதிகாரிகளும் கல்லெறியினால்

காயம் அடைந்தனர். அ.சா. 45–ன் இடது உள்ளங்கையில் வெளிப்பக்கத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. கூட்டத்தினரைக் கலைந்து செல்லும்படியும், இல்லாவிடில், அவர்கள் சட்ட விரோதமாகக் கூடியிருப்பதாக அறிவிக்கப்படுவர் என்றும் அ.சா. 43–க்கு ஆணையிடுமாறு உத்தரவிடப்பட்டது. கூட்டத்தினர் எச்சரிக்கையைச் செவிமடுக்காது தொடர்ந்து கல்லெறிந்தனர். காவல் துறையினர் மற்றும் பொது மக்களின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு மேற்கொண்டும் சேதம் ஏற்படாமலிருக்கவும், கூட்டத்தினரைக் கலைப்பதற்குக் கண்ணீர்ப்புகைக் குண்டு பயன்படுத்தப்படும் என்று எச்சரிக்கை செய்யுமாறு அவர் அ.சா. 43–க்கு உத்தரவிட்டார். இந்த எச்சரிக்கையினால் எவ்விதப் பயனும் எற்படவில்லை. கூட்டத்தினர் காவல் துறையினருக்குக் காயம் ஏற்படும் வகையில் தொடர்ந்து அவர்கள்மீது கல்லெறிந்தனர். காலை சுமார் 11-50 மணிக்குக் காவலர் பெரியசாமி (அ. சா. 36) டெல்டா வேன் 4 மூன்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார். அப்போதும் கூட்டம் கலையவில்லை. அவர்கள் தொடர்ந்து கல்லெறிந்தனர். கூட்டத்தினரைக் கலைப்பதற்கு அ. சா. 36 மீண்டும் மூன்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை கூட்டத்தில் வீசினார். அப்போதும் கூட்டம் கலையவில்லை. காவல் படையினர் கூட்டத்தை நோக்கி தெருவிற்குள் சென்ற பின்னர்தான் கூட்டத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வெவ்வேறு திசைகளில் ஓடினர். அச்சமயம், கூட்டத்தில் ஒருவருக்கு அவருடைய தலையில், கல்லெறியினால் காயம் ஏற்பட்டு, சிகிச்சைக்காக அவர் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப் பட்டார். நிலைமையை உணர்ந்து அப்பகுதியில் இயல்பான நிலையைக் கொண்டு வர அ.சா. 45 பொருத்தமான உடனடி நடவடிக்கையினை எடுத்தார். லஸ் கார்னர் பகுதியில் காவலர்களை நிற்கவைத்து, சோந்துப் பணிக்கான ஏற்பாடுகளைச் செய்கிறோரு, அ.சா. 45 தனியார் மருத்துவமனையான செயின்ட் இசெபெல் மருத்துவமனையில் அவருடைய காயத்திற்குச் சிகிச்சை பெற்றார். சா.ஆ. P-95 மருத்துவமனையில் அ.சா. 45–க்குக் கொடுக்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும். அதேபோல, காயமடைந்த ஏனைய காவல் துறை அலுவலர்களும் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(xii) 13—4—1997 பிற்பகல், லஸ் கார்னர் பகுதியில் முற்பகல் கல்லெறி நடந்ததன் காரணமாக, ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிற காயங்களுக்காகப் பின்வரும் நபர்களைச் சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையைச் சேர்ந்த அவசரச் சிகிச்சைப் பிரிவு மருத்துவ அதிகாரி டாக்டர் ஏ. என். சண்முகம் (அ. சா. 39) பரிசோதனை செய்தார்.

காவல் துறை ஆய்வாளர் திரு. ஆர். செல்வராஜ் (அ. சா. 38) என்பவருக்குப் பின்வரும் காயங்கள் இருந்தன:–

(1) இடது கைப்பின்புறத்தில் எலும்புப் பகுதிவரையில் ஆழமாக 0.5×0.5 செ.மீ. அளவிற்கு ஆழமான காயம்.

(2) இடது கால் முன்பகுதியில் 2×1 செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புக் காயம்.

(3) வலது கால் மேல்பகுதியில் 2×1 செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புக் காயம்.

மற்ற இரு காயங்களும் சிறு அளவில் சாதாரணமாக இருக்கையில் அ.சா. 39–ன் கூற்றுப்படி ஆம் எண் காயம் கடுமையானதாகும். சா.ஆ. P-72 அ. சா. 38–க்குக் கொடுக்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

காவல் துறை உதவி அய்வாளர் திரு. வெங்கடாசலத்திற்கு (அ.சா. 28) உச்சந்தலையில் மேற்பகுதியில் 2×1×0.5 செ.மீ. அளவிற்குக் கன்றிய காயம் ஏற்பட்டிருந்தது. காயம் சிறு அளவிலானதாகும். சா.ஆ. P-72, அ.சா. 28–க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும். திரு. வஜ்ரவேலு, காவலர் எண் 1598–க்கு (அ.சா. 31) இடது கால் முன் புறத்தில் 2×0.5 செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. இக் காயம் சிறு அளவிலானதாகும். சா.ஆ. P-74 அ.சா. 31–க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

எழும்பூர் த.சி. கா.ப. II.ஆம் பிரிவைச் சேர்ந்த திரு. பி. தமிழ்க்குமரன், காவலர் எண் 2042–க்குப் பிற்பகல் 12-30 மணிக்கு உச்சந்தலையில் இடப்புறம் தசைப் பகுதி வரை ஆழமாக 4×0.5 செ.மீ. அளவிற்கு ஆழமான காயம் ஏற்பட்டது. இக்காயம் சிறுஅளவிலான தாகும். சா.ஆ. P-75, காவலர் எண் 2042, திரு. தமிழ்க்குமரனுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

திரு. பி. சண்முகராஜ், காவலர் எண் 862 (அ.சா. 29–க்கு) இடது கண் புருவத்தில் எலும்புப் பகுதிவரை ஆழமாக 3×0.5 செ.மீ. அளவிற்குக் காயம் ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. இக் காயம் சாதாரணமானதாகும். சா.ஆ. P-76, அ.சா. 29–க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை VIII ஆம் பிரிவு 'ஈ' கம்பெனி டெல்டா 29 வண்டியின் திரு. அஜெய்குமார், காவலர் எண் 2796–க்கு உச்சந்தலையில் இடது பக்கத்தில் எலும்புப் பகுதி வரை ஆழமாக 2×0.5 செ.மீ. அளவிற்குக் காயம் ஏற்பட்டது. இக் காயம் சாதாரண மானதாகும். சா.ஆ. P-77, திரு. அஜெய்குமாருக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

சென்னை மயிலாப்பூர் எண் 115 மாதவராவ் தோட்டத் தெருவில் வசிக்கும் திரு. மோகன் ராஜூவிக்கு உச்சந்தலையில் பின்பகுதியில் எலும்புப் பகுதி வரையில் ஆழமாக 4×0.5. செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புக் காயம் ஒன்று வன்முறைக் கும்பல் செய்த கலவரத்தால் ஏற்பட்டது. இக்காயம் சாதாரணமானதாகும். சா.ஆ. P. 78, திரு. மோகன்ராஜீக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

மேற்சொன்ன நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் எந்த முறையில் எப்படிப்பட்ட நேரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது குறித்து அ.சா. 39 தெரிவித்துள்ளார்.

(XIII) இராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் "DAS" வார்டிலுள்ள மருத்துவ அதிகாரி டாக்டர் பி. பெரியசாமி (அ.சா. 40) முற்பகல் நடந்த கல்லெறி சம்பவத்தினால் காயம் அடைந்ததாகக் கூறப்படும் பின்வரும் நபர்களைப் பரிசோதனை செய்தார்.

ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படையைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி, நிலை I காவலர் எண். 11905க்கு (அ.சா. 34) வலது முன் கால் எலும்பின் பெரு எலும்புப் புடைப்புப் பகுதியில் சிராய்ப்புடன் கூடிய கன்றிய காயம் ஏற்பட்டிருந்தது. சா.ஆ. P. 80, அ.சா. 34-க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படையைச் சேர்ந்த திரு. எட்வின், நிலை I காவலர் எண் 14312-க்கு (1) இடது கால் முட்டெலும்பைச் சுற்றி அங்குல அளவிற்குச் சிராய்ப்புடன் கூடிய கன்றிய காயம் ஏற்பட்டிருந்தது. (2) இடது மார்பகப்பகுதி முழுவதும் வலது தோள்பட்டையிலும் வலி இருந்தது. இக்காயங்கள் சிறு அளவிலானதாகும். சா.ஆ. P. 81. திரு. எட்வினுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படையைச் சேர்ந்த தலைமைக் காவலர் 9959 திரு. ஜனார்த்தனம் என்பவருக்கு இரு காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

(1 இடது கால் பெருவிரலின் அடிப்பகுதியில் வீக்கம் ஏற்பட்டிருந்தது.

(2) இடது முழங்கையின் பின் பகுதியில் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்தது.

இக்காயங்கள் சாதாரணமானவை ஆகும். சா.ஆ. P. 82 திரு. ஜனார்த்தனம் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

ஆயுதம் தாங்கிய சேமக்காவல் படையைச் சேர்ந்த நிலை I காவலர் 2761, திரு. குப்புசாமிக்கு, வலது முழங்காலில் ஒரு அங்குலம் சுற்றளவிற்குச் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும், இடது மார்பகப் பகுதியில் வலி இருந்ததாகச் சொல்லப்பட்டது. சா.ஆ. P. 83 திரு. குப்புசாமிக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

எழும்பூர் 8ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 'ஈ' கம்பெனியின் காவலர் 2673, திரு. சத்தியநாதனுக்கு இடது காலில் ½×½ செ.மீ. அளவிற்குச் சிறு குழிக்காயம் ஏற்பட்டிருந்தது. இக்காயம் சாதாரணமானதாகும். சா.ஆ. P. 84, திரு. சத்தியநாதனுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 2ஆவது பிரிவைச் சேர்ந்த 'சி' கம்பெனியின் காவலர் 3034, திரு. பி. வெங்கடேசனுக்கு இடது முன் கால் எலும்பின் பெரு எலும்புப் புடைப்புப் பகுதியில் ½×½ செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புடன் கன்றிய காயம் ஏற்பட்டிருந்தது. இடது உள்ளங்கையில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டிருந்தது. இக்காயம் சாதாரண மானதாகும். சா.ஆ. P. 85 திரு. வெங்கடேசனுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படை IIஆவது படைப்பிரிவின் 'A' கம்பெனியைச் சேர்ந்த நாயக் 2206, திரு. கார்த்திகேயனுக்கு வலது கணுக்காலில் ரத்தக் கட்டுடன் கன்றிய காயம் ஏற்பட்டிருந்தது.

இக்காயம் சிறு அளவிலானதாகும். சா.ஆ. P. 86, திரு. கார்த்திகேயனுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 8ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த 'பி' கம்பெனியின் காவலர் 1569 திரு. அழகேசனுக்கு (அ.சா. 33) வலது முன்னங்கையின் மேல் பக்கத்தில் ½×½ செ.மீ. அளவிற்குச் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. இக்காயம் சிறு அளவிலான தாகும். சா.ஆ. P. 87, அ.சா. 33க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை Vஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 'D' கம்பெனியின் காவலர் 2219, திரு. முத்தையாவிற்கு (அ.சா. 32) ஏற்பட்ட காயங்களின் விவரங்கள் வருமாறு :—

(1) நெற்றியின் வலது பகுதியில் 1 அங்குலம் சுற்றளவிற்குச் சிராய்ப்புடன் கன்றிய காயம்.

(2) மார்பின் இடது பகுதியில் இலேசான காயம்.

இந்தக் காயம் சிறு அளவிலானதாகும். சா. ஆ. P. 88 திரு. முத்தையாவிற்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் V ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த 'D' கம்பெனியின் காவலர் 1294 திரு. மணிக்கு முகவாய்க் கட்டையின் வலது பகுதியில் ஒவ்வொன்றும் ½ செ.மீ. அளவிற்கு இரு சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவை, சாதாரணமானவையாகும். சா.ஆ. P. 89 திரு. மணிக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

V ஆவது படைப்பிரிவின் 'D' கம்பெனியைச் சேர்ந்த காவலர் 1870 திரு. வேலுவுக்கு (1) விரைப்பகுதியில் வலியும், (2) முதுகின் இடது பகுதியில் வலியும் இருந்ததாகத் தெரிவித்தார். காயங்கள் சிறு அளவிலானவையாகும். சா. ஆ. P 90 திரு. வேலுவுக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

சென்னை- இராயப்பேட்டை காவல் நிலையத்தின் காவல்துறை-ஆய்வாளர் திரு.பழனிசாமிக்கு (அ.சா. 37) வலது கையின் பின்பகுதியில் சிறிய சிராய்ப்புக் காயத்துடன் 2 அங்குலத்திற்கு 2 அங்குலம் என்ற அளவில் வீக்கம் இருந்தது. இக் காயம் சாதாரணமானதாகும். சா.ஆ. P 91, திரு. பழனிச்சாமிக்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் நகலாகும்.

மேற்சொன்ன நபர்களுக்கு எந்த முறையில் எப்போது காயம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது பற்றி அ.சா. 40 கருத்துத் தெரிவித்திருந்தார்.

அ.சா. 38-க்கு இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அவருடைய இடது கட்டு விரலில் ஏற்பட்டிருந்த எலும்பு முறிவு வழக்கமான முறையில் சரி செய்ய முடியவில்லை. எனவே, அவர் ரூ. 17,000 செலவு செய்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

(xiv) தினகரன் மேலாளர் திரு. பி. ஏ. சுந்தரம் (அ.சா. 20) 13-4-1997 அன்று காலை 8-30 மணிக்கு அவருடைய அலுவலகத்திற்குச் சென்றார். வன்முறை கும்பலொன்று அவருடைய அலுவலகத்தைத் தாக்கிய விவரத்தை அவருடைய அலுவலகப் பணியாளர்கள் மூலம் அவர் தெரிந்து கொண்டார். கதவுகளும் ஜன்னல்களும் சேதமடைந்திருந்ததையும் மறுநாள் 14-4-1997 வெளிவரவிருந்த 'தமிழ்ப் புத்தாண்டு மலர்' புத்தகங்கள் தாறுமாறாக வீசப்பட்டும் கிழிக்கப்பட்டும் இருந்ததையும் அம்மலரின் ஒரு பகுதியைக் கூட்டத்தினர் எடுத்துச் சென்று விட்டதையும் அவர் தெரிந்து கொண்டார். கூட்டத்தினர் தாக்கியதால் அவருடைய அலுவலக வேன் சேதமடைந்திருந்ததையும் அவர் கண்டார். கா.பொ.வி. 4, கா.பொ.வி. 5, கா.பொ. 6 தொடர் எண் வரிசைகள் நெகட்டிவ்களுடன் கூடிய புகைப்படங்களாகும். அவை, மேற்சொன்ன சேதத்தைக் காட்டுகின்றவையாகும். அவர் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்; முதல் தகவல் அறிக்கையின் நகல் சா.ஆ. P 43 ஆகும். அவருடைய அலுவலகத்திற்கு ஏற்பட்ட சேதத்தைச் சரி செய்ய அவருடைய அலுவலகம் ரூ. 82,875 செலவு செய்தது. சா.ஆ. P 44இன்படி காயமடைந்த பணியாளர்களுக்கு மருத்துவச் செலவுகள் வகையில் ரூ. 16, 281 செலவிடப்பட்டது.

காலை 8-30 மணியளவில் இராமகிருஷ்ணா மடம் சாலையில் திமுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள ஹோட்டல் பிக்னிக் பிளாசாவின் வரவேற்பாளரான திரு. இராதாகிருஷ்ணன் (அ.சா. 23) சுமார் 400 முதல் 500 பேர்கள் கொண்ட கும்பல் ஒன்று லஸ் முனையின் அனைத்துப் பக்கங்களிலும் போக்குவரத்தைத் தடை செய்வதையும் காவல் துறையினர் அமைதியாக இருக்குமாறு அந்தக் கும்பலைச் சேர்ந்த நபர்களுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருப்பதையும் பார்த்தார். காலை 10-00 மணியளவில் 100 பேர்களைக் கொண்ட கும்பல் ஒன்று பல்லக்கு மாளியம் குடிசை மாற்று வாரியப் பகுதியிலிருந்து கையில் கற்கள், சவுக்குக் கட்டைகள், சோடா பாட்டில்கள் ஆகியவற்றுடன் வந்து கடைகளை அடைக்குமாறு கடைக்காரர்களை நோக்கி கோஷமிட்டுக் கொண்டிருந்ததை அவர் பார்த்தார். அவர்கள் கடைகளையும் தாக்கி சேதப்படுத்தினர். காவல் துறையினர் எச்சரிக்கை செய்த போதிலும், கும்பல் வன்முறையில் ஈடுபட்டதால் கண்ணீர்ப் புகை குண்டுகள் வெடிக்கப்பட்டன. கும்பல் ஹோட்டல் பிக்னிக் பிளாசாவின் கண்ணாடிக் கதவுகளையும் சன்னல் கதவுகளையும் தாக்கி சேதப்படுத்தியது. ஹோட்டல் பிக்னிக் பிளாசாவின் மேலாளர் அளித்த புகாரின் முதல் தகவல் அறிக்கையின் நகல், சான்றாவணம் P 46 ஆகும். சான்றாவணம் P 48-ன்படி, ஹோட்டலுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 1,07,500 ஆகும்.

திரு. நாராயணன் (அ.சா. 24) என்பவர். காமதேனு திரையரங்கிற்கு எதிரே லஸ் சர்ச் சாலையில் 'நியூ சௌமியா பேக்கரி' எனற பெயரில் பேக்கரி கடை ஒன்றை நடத்தி வருகிறார். காலை 8-00 மணியளவில் 500 பேர்கள் கொண்ட கும்பல் ஒன்று லஸ்முனை பகுதியில் அனைத்துப் பக்கங்களிலும் இருந்து போக்குவரத்தைத் தடை செய்ததை அவர் பார்த்தார். அவர்கள், சவுக்குக்கட்டைகளையும், சோடா பாட்டில்களையும் கற்களையும் வைத்திருந்தனர். காவல் துறையினர் அறிவுரை கூறி எச்சரிக்கை செய்தபோதிலும், அவர்கள் கலைந்து செல்ல மறுத்தனர். ஏறத்தாழ 100 பேர் அவரது கடையையும் அருகிலுள்ள

மற்ற கடைகளையும் தாக்கினர். அதில், பெயர்ப் பலகைகள் சேதமடைந்தன. முற்பகல் 11-00 மணி வரையில் வன்முறை தொடர்ந்தது. அந்தப் பகுதியில் பதட்டம் நிலவியது. அ.சா. 24, அவரது கடையை மூடிவிட்டார். சான்றாவணம் P. 51இன்படி அவரது கடைக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 7,900 ஆகும். அவர், மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அந்தப் புகாரின் முதல் தகவல் அறிக்கையின் நகல் சான்றாவணம் P 49 ஆகும்.

காலை 10-30 மணியளவில் இராமகிருஷ்ணா மடம் சாலையில் கற்களையும், சோடா பாட்டில்களையும் வைத்திருந்த 50 பேர்கள், அந்தப் பகுதியில் நிறுத்தி வைத்திருந்த அரசுப் பேருந்துகளைத் தாக்கியதைத் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தைச் சேர்ந்த 5D வழித்தடப் பேருந்தின் (பதிவு எண் டி. எஸ். 01 எண். 2423) ஓட்டுநரான திரு. கன்னியப்பனும் (அ.சா. 26) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 12 எல். வழித்தட (பதிவு எண் டி. எஸ். 01 எண் 1131) நடத்துனரான திரு. B. வைத்தீஸ்வரனும் பார்த்தனர். வன்முறைக் கும்பல், பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியது, அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளையும், கதவுகளையும் தாக்கி, சேதப்படுத்தினர். அந்தச் சம்பவம் குறித்து, அ.சா. 26–ம் அ.சா. 27–ம் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார்கள் கொடுத்தனர்.

(XV) மயிலாப்பூர் சட்டம்-ஒழுங்கு காவல் துறை உதவி ஆணையாளரிடமிருந்து (அ.சா. 43) வரப்பெற்ற ரமேஷின் தகப்பனார் இ.த.சா. 1 கொடுத்த புகாரை (சான்றாவணம் P. 26) மயிலாப்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த சட்டம்-ஒழுங்கு, காவல்துறை ஆய்வாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (அ.சா. 44) காவல்துறை நிலை ஆணை 145இன் கீழ் அறிக்கை ஒன்றைத் தயாரித்து, சென்னை மாவட்ட ஆட்சியரின், நேர்முக உதவியாளர் (பொது) திரு. ஆபிரகாமுக்கு (அ.சா. 19) தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு வேண்டுகோளுடன் (சான்றாவணம் P. 27) சான்றாவணம் P. 26ஐயும் சான்றாவணம் P. 24யும் அனுப்பினார். ஆ.சா. 7 கொடுத்த புகாரின் பேரில், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 174ஆம் பிரிவின்கீழ் முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே பதிவு செய்யப் பட்டிருந்தது. ஆனால், இ.த.சா. 1 கொடுத்த புகாரில் (சான்றாவணம் P. 26) ரமேஷின் மரணத்திற்குக் காவல் துறையினரே காரணம் என்று தெரிவிக்கப்பட்டதால், தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக (அ.சா. 44) அனைத்து ஆவணங்களையும் அ.சா. 19-க்கு சமர்ப்பித்தார்.

(XVI) சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. அபிரகாம் (அ.சா. 19) சான்றாவணம் P. 24, 26 சான்றாவணம் P. 27 ஆகியவை வரப் பெற்றதன் பேரில் தேவையான விசாரணையை நடத்தினார். அவர், அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்று இ.த.சா. 1 முன்னிலையில் 13–4–97ஆம் நாளன்று மதியம் 12–00 மணி முதல் பிற்பகல் 2-15 மணி வரை ரமேஷின் இறப்பு குறித்து விசாரணை செய்தார். உடல் அ.சா. 17இன் பொறுப்பில் இருந்தது. இறப்பு பற்றிய விசாரணையின்போது, பஞ்சாயத்தார்களாகிய திருவாளர்கள் நாகப்பன், டி. கே. ராஜன், டி. எஸ். லோகநாதன் எம். பி. சண்முகசுந்தரம், கே. கோபால் ஆகியோர் அளித்த வாக்கு மூலங்களை அ.சா. 19, பதிவு செய்து, இறப்பு விசாரணை அறிக்கை (சான்றாவணம் P. 28) ஒன்றைத் தயாரித்தார். இறந்தவரின் உடலைப் பிணப் பரிசோதனை செய்யுமாறு, அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, தடய அறிவியல் மருத்துவத்துறை தலைமை பேராசிரியரும் காவல் துறை அறிவை சிகிச்சை மருத்துவருமான அ.சா. 19-க்கு கோரிக்கை (சான்றாவணம் P 52) ஒன்றை அளித்தார்.

(xvii) சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, பேராசிரியரும் தடய அறிவியல் மருத்துவத் துறைத் தலைவருமான டாக்டர் கே. ரவீந்திரன் (அ.சா. 25) கூடுதல் மாவட்ட மாஜிஸ்டிரேட் ; சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிட மிருந்து (பொது) (அ.சா. 19) கோரிக்கை வந்தபையடுத்து (சா.ஆ. P 52) அ.சா. 17-ன் பொறுப்பில் இருந்த உடலை 13–4–1997 அன்று பிற்பகல் 3–15 மணிக்கு சவப் பரிசோதனை செய்யத் தொடங்கினார். உடலின் நிலைமை பின்வருமாறு இருந்தது.

உடல் முழுவதும் விறைத்துப் போயிருந்தது. இது ஒரு ஆணின் உடல். நல்ல ஆரோக் கியமான உடலாகும். உடல் முழுவதும் உலர்ந்த மணல் மற்றும் மண் துகள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. வாயிலிருந்தும், மூக்குத் துவாரத்திலிருந்தும் இரத்தம் கோய்ந்த நுரை போன்ற நிரவம் வந்து கொண்டிருந்தது. இரண்டு கண்களிலும், கருமையான இரத்தம் கட்டியிருந்தது காணப்பட்டது. கை விரல், கால் விரல், நகங்கள் கடுமையான நில நிறமாக மாறியிருந்தன. உள்ளங்கையும், உள்ளங்கால் தோலும் ஈரமாக இருந்தன (வண்ணார் பெண் கையும், காலும் போல). விந்து வெளியேறியிருந்தது. உடலில் பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

(1) நெற்றியின் வலது பக்கத்தில் 3.5 x 1.5 செ.மீ. அளவுள்ள சிராய்ப்பு காயம்.

(2) கண்ணுக்குக் கீழே வலது கன்னத்தின் வளை எலும்புப் பகுதியில் 1 x 0.5 செ.மீ. அளவுக்கு சிராய்ப்பு காயம். இரண்டு சிராய்ப்புக் காயங்களும் கருஞ்சிவப்பாக இருந்தன. பக்கு ஏற்படவில்லை.

உடலில் வேறு எந்த இடத்திலும் வெளிப்புறக் காயமோ, உள் காயமோ அல்லது எலும்புக் காயமோ காணப்படவில்லை. உடலை அறுத்துப் பார்த்தபோது பின்வருபவை காணப்பட்டன.

இதயம் :—அறைகளில் உறைந்த இரத்தம் இருந்தது. வால்வுகள் இயல்பாக இருந்தன. தமனிகள் இயல்பாக இருந்தன.

நுரையீரல் :—நுரையீரல்களில் ஒலி வந்துகொண்டிருந்தது. பெரிதாக இருந்தது. குறிப் பிடத்தக்க வகையில் நீர் கோத்து விங்கியிருந்தது. மிக அழுத்தமாக சைய னோட்டிக் (Cynotic) நிலை காணப்பட்டது.

மார்புவரிப் பகுதிகளில் பல இடங்களில் இரத்த ஒழுக்கு இருந்தது. வெட்டுத் தோற்றம் மிகவும் செறிவாக இருந்தது. ஏராளமான இரத்தம் தோய்ந்த நுரை சேர்ந்த திரவம் வெளியே வந்துகொண்டிருந்தது.

குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் :—இரத்தம் தோய்ந்த நுரை போன்ற திரவம் நிரம்பியுள்ளது. கருஞ்சிவப்பு மண் துகள்கள் காணப்பட்டன. சளிச்சவ்வில் இரத்தம் கட்டி இருந்தது.

நாவடி எலும்பு :—அப்படியே இருந்தது.

கழுத்தில் உள்ள நாளமற்ற சுரப்பி :—அப்படியே இருந்தது.

வயிறு :—கரும் மஞ்சள் நிறமுள்ள ஒளவு திட வடிவிலான 280 கிராம் அளவுள்ள குறிப்பிட்ட வாசனை எதுமில்லாத ஒளவு செறிமானமாகியிருந்த சமைத்த உணவுப்பொருள் இருந்தது. சளிச் சவ்வு இரத்தம் கட்டி இருந்தது.

சிறுநீர்ப்பை / சவ்வுப்பை :—காலியாக இருந்தது.

மூளை :—நீர்கோத்து இருந்தது. இரத்தம் தின்டிருந்தது. அதன் மேற்பரப்பு இரத்தக் குழாய்கள் இரத்தம் கட்டி இருந்தது. வெட்டுத் தோற்றம் பல இடங்களில் இரத்த ஒழுக்கு இருப்பதைக் காட்டியது.

உடலின் ஏனைய அனைத்து உள் உறுப்புகளும் செறிவாக இருந்ததாகக் காணப்பட்டன. உள்ளுறுப்புகள் பாதுகாக்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை வரப்பெறாத நிலையில் இறப்பிற்கான காரணம் குறித்து அ.சா. 25 கருத்துத் தெரிவிப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. அ.சா. 25 அளித்த பிணப் பரிசோதனை சான்றிதழ், சான்றாவணம் P. 29 ஆகும். அ.சா. 25 இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை (சான்றாவணம் P. 31) 23-4-1997 ஆம் நாளன்று பெற்றார். உடலின் உள்ளுறுப்புகளில் விஷம் அல்லது ஆல்கஹால் எதுவும் இருந்ததாக அதில் குறிப்பிடப்படவில்லை. இறந்துபோனவர் நீரில் மூழ்கியதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்திருக்கக்கூடும் என்று தோன்றுவதாக அ.சா. 25 கருத்துத் தெரிவித்தார். (சான்றாவணம் P. 30) சான்றாவணம் P. 30, இரசாயனப் பகுப்பாய்வின் அடிப்படையில் அ.சா. 25 அளித்த அறிக்கையாகும்.

இறந்துபோனவர் பிணப் பரிசோதனை செய்யப்படுவதற்கு ஏறத்தாழ 12 முதல் 24 மணி நேரத்திற்கு முன்னர் இறந்திருக்கக்கூடும் என்று அ.சா. 25 கருத்துத் தெரிவித்தார். 1 மற்றும் 2 ஆவது காயங்கள், இறப்பதற்கு முன்னர் ஏற்பட்ட வெளிக் காயங்களாகும். இறந்துபோனவர் காடுமுடாடான தரையில் மோதியதால் அந்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். குரல்வளையிலும் மூச்சுக் குழலிலும் காணப்பட்ட சேறு கலந்த பொருட்கள், இறந்து போனவர் நீரில் மூழ்கும்போது உயிரோடு இருந்ததையும், சேறு கலந்த பொருட்களுடன் நீர் உள்ளே சென்றதையும் காட்டுகின்றன. உடல் ஒரு சில மணி நேரம் நீரில் இருந்ததால், உள்ளங்கை மற்றும் உள்ளங்கால் தோலில் ஈரத்தின் அறிகுறி காணப்பட்டது. முச்சு விடுவதற்கு அந்த நபர் சிரமப்பட்ட காணத்தால் விந்து வெளியேறியிருக்கக்கூடும். அது உயிர் பிரியும் கடைசி நிலை நிகழ்வு ஆகும்.

(xviii) இ.த.சா. 1, அ.சா. 7, அ.சா. 10 ஆகியோரை அ.சா. 19 விசாரணை செய்து, அவர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அவை முறையே சான்றாவணம் P. 32, P. 33, P. 34 ஆகும். அவர் விசாரணையின் அடிப்படையில் அறிக்கை (சான்றா வணம் P. 35) ஒன்றைத் தயாரித்து, 14-4-1997 ஆம் நாளன்று சென்னை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பினார். அவர் (மாவட்ட ஆட்சியர்) காவல் துறை நிலை ஆணை 145ன் கீழ் விசாரணை நடத்தி, இறப்பிற்கான உண்மையான காரணத்தைக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை அளிக்குமாறு அ.சா. 19-க்கு உத்தரவிட்டு ஆணை ஒன்றைப் (சான்றா வணம் P. 36) பிறப்பித்தார். அ.சா. 19, 17-4-1997 ஆம் நாளன்று, அ.சா. 41, அ.சா. 1 முதல் 4 வரையிலான சாட்சிகளை விசாரித்து, அவர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அவை, முறையே சான்றாவணங்கள் P. 37, P. 38, P. 39, P. 40, P. 41 ஆகும்.

தமிழ்நாடு அரசு பொதுத் (சட்டம்–ஒழுங்கு–F) துறையின் 15–4–1997 ஆம் நாளிட்ட 428 ஆம் எண் அரசாணையில் இவ்வகாரம் குறித்து விசாரணை செய்வதற்காக இந்த ஆணையத்தை நியமித்து, 15–4–1997 ஆம் நாளன்று, ஆணை பிறப்பித்தது. அந்த ஆணை 17–4–1997 ஆம் நாளன்று அ.சா. 19-க்குக் கிடைத்தது. இந்நிலையில், அ.சா. 19, அவரது விசாரணையை மேற்கொண்டும் தொடரவில்லை.

(xix) மேற்சொன்ன அரசாணையில் இடம் பெற்றுள்ளவாறு இந்த விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் வருமாறு :—

(i) எண் 94, மாதவராவ் தோட்டம் தெரு, மயிலாப்பூர், சென்னை-4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகனான திரு. ரமேஷ் என்பவரைப் போக்குவரத்து ஆய்வாளர் திரு. கருப்பதி கைது செய்ய வழிவகுத்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும் மேற்சொன்ன ரமேஷ் 8453 ஆம் எண் ஜீப்பில், நிலை I காவலர் திரு. வேலாயுதம் உடனிருக்க மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது எந்தச் சூழ்நிலைகளில் தப்பிச் சென்றார் என்பது குறித்தும், அவரை மீண்டும் கைது செய்வதற்கு மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் குறித்தும் விசாரணை செய்தல்.

(ii) திரு. ரமேஷின் புதிரான மரணம் ஏற்படக் காரணமாக இருந்த தகவல்கள், சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்தல் ;

(iii) மேற்சொன்ன திரு. ரமேஷ் காவல் துறைக் காவலின்போது மரணம் அடையச் செய்து, அவரின் உடல், பக்கிங்காம் கால்வாயில் வீசப்பட்டது என்ற புகார் உண்மையானதா என்பது குறித்து விசாரித்து, அறிக்கை அளித்தல் ;

(iv) திரு. ரமேஷ் குறித்து காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையில் அத்துமீறல் இருந்ததா ? என்றும், ஆமெனில், அதற்குப் பொறுப்பான காவல் துறை அதிகாரிகளைக் கண்டறிந்து அதற்குப் பொறுப்பான காவல் துறை அலுவலர்கள் மீது எடுக்க வேண்டிய உரிய நடவடிக்கைகள் பற்றி கருத்துத் தெரிவித்தல் ;

(v) அதன் பின்னர், 13–4–1997 அன்று மைலாப்பூர் பகுதியில், பொதுச் சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படும் வகையில் வன்முறைச் செயல்கள் ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் மற்றும் காரணங்கள் பற்றி விசாரித்தல் ;

(vi) அத்தகைய வன்முறை நிலையைச் சமாளிப்பதில், காவல் துறையினரின் அத்து மீறல்கள் எவையேனும் இருந்தனவா என்பதுகுறித்து விசாரித்து, அறிக்கை அளித்தல்.

(vii) இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழாவண்ணம் உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தல்;

இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவிற்குள் இந்த ஆணையும், அதன் விசாரணையை முடித்து, மாநில அரசிடம் அதன் அறிக்கையை அளிக்க வேண்டும் என்று இந்த அரசாணையில் மேற் கொண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கால அளவு, செல்திறனுடைய காரணங்களுக்காக குறித்த காலத்திற்கொருமுறை, 31—3—1998 வரையில் நீட்டிக்கப் பட்டது.

(xx) நான், 15—4—1997 அன்று விசாரணை ஆணையத்தின் பொறுப்பை, ஏற்றுக் கொண்டேன். இந்த விசாரணை தொடர்புடைய இச் சம்பவம் பற்றி அறிந்தவர்கள் அவர்களின் உறுதிமொழிப் பத்திரங்களை இந்த விசாரணை ஆணையத்திடம் அளிக்கும்படி கோரியும் அத்தகைய உறுதிமொழிப் பத்திரங்களைப் பெறுவதற்கான கடைசி நாள் 27—6—1997 அன்று மாலை 5–30 மணி என்று நிர்ணயித்தும், அறிவிப்பு ஒன்றை ஆணையம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 28—5—1997 அன்று வெளியிட்டது. இந்த ஆணையம் 21 உறுதிமொழிப் பத்திரங்களை மட்டுமே பெற்றது. அவற்றுள் 17 உறுதிமொழிப் பத்திரங்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் 4 உறுதி மொழிப் பத்திரங்கள் மரணமடைந்தவரைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் வரப் பெற்றன. இத்தகைய உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான காலக் கெடுவை 27—7—1997 அன்று மாலை 5–30 மணி வரையில் நீட்டிப்பது அவசியம், என ஆணையம் கருதி 28—6—1997 அன்று அதற்கான மற்றொரு அறிவிப்பையும் வெளியிட்டது. இந்த ஆணையம், காவல் துறை தரப்பில் மேலும் 47 உறுதிமொழிப் பத்திரங்களைப் பெற்றது.

பொதுத் (சட்டம்–ஒழுங்கு–எப்) துறையின் 9—7—1997ஆம் நாளிட்ட 2(1) 9ஆம் எண் அரசாணையின் மூலம் இந்த ஆணையத்திற்கு உதவுவதற்காக வழக்குரைஞராக சென்னையைச் சேர்ந்த திரு. எஸ். சீனிவாசன், வழக்குரைஞர் அவர்கள் நியமிக்கப்பட்டார். திருவாளர்கள் எஸ். சீனிவாசன் ஆணையத்தின் வழக்குரைஞர் வி. ஆர். வெங்கடசாமி, காவல் துறையின் வழக்குரைஞர், மரணம் அடைந்தவர் தரப்பு வழக்குரைஞர் ஏ. ஈசய்யா ஆகியோரின் முன்னிலையில் 22—8—1997 அன்று சம்பவம் நடந்த இடங்களை ஆணையம் சென்று பார்வையிட்டு ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரித்து (இணைப்பு-I)

அதன் நகல்களை எல்லா வழக்குரைஞர்களுக்கும் அளித்தது. இந்த ஆணையம் சாட்சிகளை 9—9—1997 அன்று விசாரணை செய்யும் பணியைத் தொடங்கியது. காவல் துறை தரப்பில் 46 சாட்சிகளையும் (அ.சா. 1 முதல் 46 வரையில்) இறந்தவர் தரப்பில் 3 சாட்சிகளையும் (இ.த.சா. 1 முதல் 3 வரையில்) விசாரணை செய்து, அவர்கள் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரங்கள் சான்றாவணங்களாகவும் குறிக்கப்பட்டது. அது தவிர 58 ஆவணங்களும் சான்றாவணங்களாக குறிக்கப்பட்டது. 5 ஆவணங்கள் சான்றாவணம் D1 முதல் D5 எனக் குறிக்கப்பட்டன. காட்சிப் பொருட்களைப் பொறுத்தவரையில் 7 இருந்தன. அவை, கா. பொ. 1 முதல் 7 வரையிலானவை என்று குறிக்கப்பட்டது (இணைப்பு-IV).

2. தற்போது நான் ஆய்வு வரம்புகள் பற்றி விவாதிக்கின்றேன். ஆய்வு வரம்பு (i) அ.சா. 4 ஆன காவல் துறை (போக்குவரத்து) ஆய்வாளர், ரமேஷை கைது செய்து, அ.சா. 1உடன் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றாரா மற்றும் வழியில், அவர் தப்பியோடிவிட்டாரா? என்ற வினா தொடர்பானதாகும். ஆய்வு வரம்புகள் (ii), (iii) மற்றும் (iv) ஆகியன, ரமேஷ் தற்செயலாக, பக்கிங்காம் கால்வாயில் மூழ்கி இறந்து விட்டாரா அல்லது அவர், கொல்லப்பட்டு அவரின் உடல் கால்வாயில் வீசப்பட்டதா? மற்றும் ரமேஷ் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையில் காவல் துறையின் அத்துமீறல் இருந்ததா? ஆமெனில் கடமை தவறியவர்கள் யார்? ஆகிய வினாக்கள் தொடர்பானவை யாகும்.

இந்த 4 ஆய்வு வரம்புகளும், 12—4—1997 அன்று இரவு நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பானவையாகும். எனவே, அவற்றை ஒன்று சேர்த்து விவாதிக்கலாம்.

ஆய்வு வரம்பு (v) மற்றும் (vi) ஆகியன, 13—4—1997 அன்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பானவையாகும். பொதுச் சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட வழிவகுத்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் எவை என்பதையும் அத்தகைய வன்முறை நிலைமையைச் சமாளிப்பதில் காவல் துறையினரின் அத்துமீறல் ஏதாவது உள்ளதா என்பதையும் இந்த ஆணையம் அறிய வேண்டும்.

ஆய்வு வரம்பு (vii)-ஐ பொறுத்தவரையில், இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் இனி நிகழா வண்ணம் உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் பற்றி கருத்துத் தெரிவிக்கும்படி, இந்த ஆணையத்திடம் கேட்கப் பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஆய்வு வரம்புகள் குறித்த தனது முடிவுகளை, இந்த ஆணையம் அளிக்கும்.

ஆய்வு வரம்பு நிபந்தனை (i) கைது செய்ததும் தப்பியோடியதும்:

மயிலாப்பூர் பகுதியில் லஸ் சர்ச் சாலையில் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மாதவ் ராவ் தோட்டம் தெரு பல்லக்கு மானியம் என்ற இடத்தில் வசித்து வந்த கபாலீஸ்வரனின் (இ.த.சா. 1) மகன் ரமேஷ் ராஜா என்கிற ரமேஷ் தான் இறந்தவர் என்பதிலும், அவரின் சடலம் 12—4—1997 அன்று இரவு, பக்கிங்காம் கால்வாயிலிருந்து (இனிமேல் இது கால்வாய் என்று குறிப்பிடப்படும். மக்களால் இது, கூவம் கால்வாய் என்றும் அழைக்கப் படுகிறது) எடுக்கப்பட்டது என்பதிலும் மறுப்பேதுமில்லை. 12—4—1997 அன்று இரவு, அந்தச் சடலம், ரமேஷ்தான் என்று அடையாளம் காண இயலாத போதிலும் அடுத்த நாளன்று (13—4—1997 அன்று) அது ரமேஷ்தான் என்பதும் லஸ் காவல்நிலையந்து 12—4—1997 அன்று இரவு சுமார் 8-45 மணிக்கு மயிலாப்பூர் E-1 காவல் நிலையத்திற்கு அ.சா. 1உடன் அ.சா. 4ஆல் காவல் துறை ஜீப்பில் அனுப்பி வைக்கப்பட்டவர் என்பதும் சாட்சியத்தையும் சூழ்நிலையையும் வைத்து, ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது. 13—4—1997 அன்று காலை ''தினகரன்'' நாளிதழில் ''மயிலாப்பூர் கூவத்தில் விழுந்தவர் சாவு'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ரமேஷின்புகைப்படம் (சா.பொ. 3) 13—4—1997 அன்று பிற்பகல் அ.சா. 19, பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்த சவ விசாரணை ஆகியவை முந்தைய நாள் இரவு சுமார் 8-45 மணிக்கு, காவல் நிலையத்திற்கு, காவலர்களால் கொண்டு செல்லப் பட்ட ரமேஷ்தான் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளன.

3. காவல் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்கு யாதெனில் லஸ் கார்னரில் கச்சேரி சாலையிலுள்ள கேரள பேஷன் ஜுவல்லரியின் முன்பு காவல் துறையின் ஜீப்பை நிறுத்திய பின்னர் அ.சா. 1, அ சா. 4உடன் லஸ் கார்னரில் போக்குவரத்துக் கடமையில் இருந்தபோது 12—4—1997 அன்று மாலை சுமார் 8-30 மணிக்கு அச்சாலை வழியே வாகனங்கள் செல்வதற்கான பச்சை ஒளிக்கு இருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நேரு நியூஸ் மார்ட்டிலிருந்து லஸ் கார்னர் சந்திப்பிற்கு மிக அருகில் ரமேஷும் வேறு திலகும் ராமகிருஷ்ண மடத்துச் சாலையைக் கடந்து செல்ல முயன்றபோது ரமேஷும், எனையோரும் அச்சமயம் சாலையைக் கடப்பதை அ.சா. 1 ஆட்சேபித்து கிவப்பு ஒளிக்குரி இருக்கும்போது சாலையைக் கடந்து செல்ல வேண்டுமென அறிவுறுத்தினார் என்பதும் ரமேஷ் அ.சா. 1இடம் எதிர் வினா எழுப்பி கெட்ட வார்த்தையில் அவரைத் திட்டினார் என்பதும் அ.சா. 1-க்கும் ரமேஷுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்ச் சண்டையைக் கவனித்த பிறகு அ.சா. 1உடன் சண்டையிட்டவர்களைத் தன்னிடம் அழைத்துவரும்படி அ.சா. 1-க்கு, அ.சா. 4 உத்தர

விட்டார் என்பதும் ஆகும். அ.சா. 1–ம் ரமேஷும் வாய்ச் சண்டை செய்து கொண்டிருந்த போதும் ரமேஷ் அ.சா. 1–ஐ திட்டி வசை பேதியபோதும், இராமகிருஷ்ண மடத்துச் சாலையில் பிக்னிக் ஹோட்டலுக்கு அருகில் ''வாகனம் எதுவும் நிறுத்தக்கூடாது'' என்ற பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த அ.சா. 2, அ.சா. 1உடன் சேர்ந்து கொண்டார் என்றும், அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ஆகிய இருவரும் அ.சா. 4 இருந்த இடத்திற்கு ரமேஷை அழைத்து வந்தனர் என்றும், மேலும் தெரிவிக்கப்பட்டது. அ.சா. 1 தெரிவித்த புகாரைக் கேட்ட பிறகு, ரமேஷும், நல்லவராகத் தோற்றமளிக்கும் நீங்கள் போக்குவரத்துக் கட்டமையார் றும் காவலிடம் முறைதவறி நடக்கக் கூடாது என்று அ.சா. 4 தெரிவித்ததாகவும், ரமேஷ் கெட்ட வார்த்தையில் அ.சா. 1–ஐ நிட்டியுள்ளதாகக் கூறப்படுவதால் சென்னை மாநகரச் காவல் சட்டத்தின் 75ஆம் பிரிவின்கீழ் வழக்குப் பதிவு செய்வதற்காக ரமேஷை சட்டம் ஒழுங்குப் பிரிவில் வரும் மயிலாப்பூர் E-1 காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லும்படி அ.சா. 4, அ.சா. 1–க்கு உத்தரவிட்டார் என்றும், தெரிவிக்கப்பட்டது. ரமேஷ் மீது போக்குவரத்து ஒழுங்கு முறையை மீறியதாகக் குற்றம் சாட்டுவது அவசியமில்லை என்று அ.சா. 4 கருதினார். கேரள வேஷன் ஜீவல்லரி கடைக்கு அருகிலிருந்து ரமேஷை அ.சா. 3 ஓட்டிய ஜீப்பில் ஏற்றிக் கொண்டு மயிலாப்பூர் E-1 காவல் நிலையம் இருந்த கிழக்கு நோக்கி அழைத்துச் செல்லப்பட்டபோது, ஜீப்பு கால்வாய்ப் பாலத்தைத் தாண்டி இராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரே கச்சேரி சாலையில் சென்று கொண்டிருந்தபோது, ரமேஷ் ஜீப்பின் பின்பக்கத்தின் மூலமாக ஜீப்பிலிருந்து குதித்து தப் பிச் செல்லும் நோக்குடன் மேற்கு நோக்கி அதாவது லஸ் கார்னர் நோக்கி ஓடினான் என்றும், அ.சா. 1 அவரைப் பிடிக்க முயல வில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. அரசுப் போக்குவரத்துப் பேருந்து கிழக்கில், எதிர்ப்பக்கத்திலிருந்து வந்தது என்றும், அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட காரணத்தால் ஜீப் மெதுவாகச் சென்றது என்பதும் அ.சா. 3 ஜீப்பை ஏன் மெதுவாக ஓட்டுகிறார் என்று அறிய வா.சா. 1 அவரின் இருக்கையில் இருந்துகொண்டே முன்நோக்கி பார்த்த நிலைமையை ரமேஷ் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ரமேஷ் ஜீப்பின் பின்பக்கத்தின் மூலமாக குதித்து, எதிர் திசையில் தப்பியோடினார் என்பதும் இது தொடர்பாகக் காவலர் அளித்த விளக்கமாகும். தப்பியோடிய ரமேஷை அ.சா. 1 துரத்திச் சென்று பிடிக்காததற்குக் காரணம் என்ன என்பதற்கு ரமேஷ் தப்பிவிட வேண்டும் என்று தாற்காலிகமாக ஒடியதாகவும், அப்போது கடந்துசென்ற வாகனங்களில் மோதிவிடும் அபாயம் இருந்ததாகவும், கல்வி ராயன் தெரு எண் 5 உள்ள கட்டிடத்திற்கு எதிரில் கால்வாயைக் கடக்க முயன்றதாகவும், அவரின் பாதுகாப்புக் கருதி, வேறு பக்கம் சென்றதாகவும், அப்போது அவர் கால்வாயில் விழுந்து மூழ்கி விட்டதாகவும், அவரின் சடலத்தை அன்று இரவு 11-30 மணிக்குத் தீயணைப்பு படையினர் வந்து வெளியில் எடுத்தனர் என்றும் தெரிவித்துள்ளார். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் விசாரணை நடத்தியபோதிலும் அந்த சடலம் ரமேஷுடையுதான் என அடையாளம் காண முடியவில்லை என்றும் அந்த சடலம் ரமேஷுடையுதான் என்பது 'தினகரன்' செய்தித் தாளில் அவருடையப் புகைப்படம் வெளியான 13–4–1997ஆம் நாள் காலையில்தான் தெரியவந்தது என்றும் காவலர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ரமேஷின் முறையற்ற அநாகரிகமான நடத்தைக் காக சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75–வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்றைப் பதிவ் செய்வதற்காக மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அவரை ஜீப்பில் அழைத்துச் சென்றதைத் தவிர, தாங்கள் ரமேஷிற்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை என்றும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறிருக்க, ரமேஷின் மரணத்திற்குக் காவலர்களுக்கு எத்தகைய பொறுப்போ அல்லது கடப்பாடோ இல்லை என காவலர் மறுப்பதுடன் ரமேஷின் மரணம் காவல் நிலைய பாதுகாப்பில் நிகழ்ந்தது அல்ல என்றும் காவல் துறையினர் தெரிவித்தனர்.

4. காவல் தரப்பு குற்றச்சாட்டுகளை இறந்துபோன ரமேஷ் தரப்பினர் கடுமையாக எதிர்த்தனர்; அதாவது, 12–4–1997ஆம் நாளன்று இரவு சுமார் 8–45 மணிக்கு லஸ் கார்னரின் பணிமீல் இருந்த போக்குவரத்துக் காவலர், ரமேஷை மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு காவலர்களினால் அவர் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டு, பின்னர் அவருடைய சடலத்தை கால்வாயில் எறிந்து விட்டதாக இறந்து போன ரமேஷ் தரப்பு சாட்சிகள் தெரிவித்தனர். இவ்விரு தரப்பினரின் கோரிக்கைகள், கருதுகுகளில் எது சாத்தியமானது எது உண்மையானது என்பதை நாம் தற்போது அலசிப் பார்க்க வேண்டும்.

5. இது குறித்து மேற்கொண்டும் விவாதிப்பதற்கு முன்னர், அந்த குறிப்பிட்ட இரவு, லஸ் கார்னரில் ரமேஷ் இழைத்ததாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றம் அல்லது அத்து மீறல் எத்தகைய தன்மை வாய்ந்தது என்பதை (அதாவது, ஆணையத்தைம் அளிக்கப் பட்டுள்ள சாட்சியத்தின் தன்மையைக் கருதி பார்க்கையில், ரமேஷ் போக்குவரத்து விதி முறைகளை அத்து மீறியிருக்கிறாரா அல்லது, சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75ஆம் பிரிவின் கீழ் குற்றம் இழைத்திருக்கிறாரா என்பதை) நாம் கண்டறிய வேண்டும். ''நேரு நியூஸ் மார்ட்டி'' லிருந்து கிழக்கு நோக்கி, ரமேஷ் சிலருடன் ராமகிருஷ்ண மடச் சாலையைக் கடக்க முயற்சித்ததாகவும், ரமேஷ், அ.சா. 1 தெரிவித்த ஆட்சேபனையையும் அறிவுரை யையும் புறக்கணித்ததோடு மட்டுமின்றி, அவரை ஏளனம் செய்தும் மட்டாகமான வார்த்தை களால் அவரைத் திட்டியதாகவும், அ சா. 1 சாட்சியம் அளித்தார். அதனைத் தொடர்ந்து புகார் கொடுக்கும்பொருட்டு அ.சா. 4 இடம் அவரை அழைத்துச் செல்ல வேண்டியதாயிர் று என்றும், மயிலாப்பூர் காவல் நிலையத்தில் உள்ள சட்டம்–ஒழுங்குப் பிரிவிடம் அவரை ஒப்படைக்க வேண்டி, அ.சா. 4 அவரை மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அவர் (அ.சா. 1) மேலும் தெரிவித்தார். ரமேஷ் சாலையின் எப்படியையும் கடக்கவில்லை என்பதும், ஆனால், கடக்க முயற்சித்ததாகவும், ஆனால் பொது இடத்தில் அவர், அ.சா. 1 இடம், அநாகரீகமாகவும் முறைகேடாகவும் நடந்து கொண்டதோடு அவர்,

அ சா. 1—ஐ திட்டினார் என்றும், இக்குற்றம் சட்டம்-ஒழுங்கு பிரிவின் கீழ் வரக்கூடியது என்றும் அ.சா. 1 தெரிவித்தார். ஆனால், அ.சா. 2 அளித்த சாட்சியம், அ.சா. 1 அளித்த சாட்சியத்திற்கு முரண்பாடாக உள்ளது. அதாவது, ரமேஷ் சிலருடன் ராமகிருஷ்ண மடம் சாலையின் மையப் பகுதிக்கு வந்து அ சா. 1டன் வாய்ச் சண்டை போட்டதாகவும், ரமேஷ் இழைத்த இக்குற்றம் உண்மையிலேயே போக்குவரத்து விதி முறைகளின்கீழ் வரப் பெறும் குற்றமென்றும், அப்படியிருந்தும் மேற்படி விதித் துறைகளின்கீழ் ரமேஷ் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அ.சா. 2 தெரிவித்தார். அவ்வாறு ரமேஷ் போக்குவரத்து விதிகளின் கீழ் குற்றம் புரிந்திருந்தாலும், சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75—வது பிரிவின் கீழ் ரமேஷ் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அ.சா. 1 தனது சாட்சியத்தில் ஒரிடத்தில் சுட்டிக் கூறினார். அ.சா. 4 என்பவரைப் பொறுத்த வரையில் பொது இடத்தில் முறைகேடாகவும் அநாகரீகமாகவும் நடந்து கொண்டமைக்காக மட்டுமே சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75 பிரிவின் கீழ் ரமேஷ் மீது குற்றம் சாட்டப்பட வேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும். எனவே, போக்குவரத்து விதிகளையும் விதிமுறைகளையும் மீறியதற்காக ரமேஷ் மீது குற்றம் சுமத்த அ.சா. 4 நினைக்கவில்லை; ஆனால், சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75—வது பிரிவின் கீழ் மட்டுமே குற்றம் சுமத்த அவர் தீர்மானித்தார். போக்குவரத்து விதிகள் மற்றும் விதிமுறைகள் கீழ், அ.சா. 4, ரமேஷ் மீது ஏன் குற்றம் சாட்டவில்லை என்பதற்காக காரணம் வெளிப்படையானதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதும் ஆகும். ஒருவர் பகலில் போக்குவரத்து விதிகளையும் விதிமுறைகளையும் மீறிய குற்றங்களை, அதாவது, சாலைகளில் செல்லும்போது சாலை விதிகளை மீறி தன்னிஷ்டப்படியாக செல்வது, மற்றும் அரசுப் பேருந்துகளில் பிரயாணம் செய்யும்போது பேருந்துப் படிக்கட்டில் நின்று பயணம் செய்வது போன்ற குற்றங்களைப் புரிந்தால், அவருக்கு எதிராக சம்பந்தப்பட்ட காவல் நிலைய தலைமைக் காவலர் குற்றப் பத்திரிகை ஒன்றைத் தயாரித்து, அத்துடன் அந்த நபரை நடமாடும் நீதிமன்ற நீதிபதியின் முன்பு ஆஜர்படுத்த வேண்டும்; அங்கு அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டால், அந்நபர் அபராதம் செலுத்தும்படி தீர்ப்பளிக்கப்படும் என்றும் குற்றம் புரியவில்லை என மறுத்தால் அத்தகைய வழக்குகள் விசாரணை செய்து, தீர்ப்பளிப்பதற்காக வழக்கமான மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அ.சா. 1 கூறுகிறார் இரவு நேரத்தில் சாலை விதி மீறல் குற்றம் புரிந்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைப் பற்றி அ.சா. 1 அல்லது, அ.சா. 4 ஏதும் கூறவில்லை என்றாலும், பொழுது சாய்ந்த பிறகு நடமாடும் நீதி மன்றம் செயற்படாத காரணத்தினால் இரவு நேரத்தில் மேற்படி குற்றம் செய்பவர்கள் வழக்கமாக எச்சரித்து அனுப்பப்படுகிறார்கள் என்று காவலரின் வழக்கறிஞர் திரு. வி. ஆர். வெங்கடசாமி கூறுவது எனக்கு திருப்தி தருகிறது. காவல் துறை வெளியிட்ட சட்ட விதித் துறை அல்லது கட்டளைகள் அல்லது சுற்றறிக்கை ஆணைகள் எவையும் பார்வைக்கு வைக்கப் படவில்லை. ஆனால், இந்நிலை சரி என்று தோன்றுவதோடு போக்குவரத்து காவல் துறையினர் இம்முறையைப் பின்பற்றி வருகின்றனர். இந்நிகழ்ச்சி இரவு சுமார் 8-30 மணிக்கு நடைபெற்ற இச்சூழ்நிலையில் சாலை விதி மீறல் குற்றத்திற்காக ரமேஷ் மன்னிக்கப் பட்டிருக்கக்கூடும்.

6. சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75வது பிரிவின் கீழ் ரமேஷ் கைது செய்யப் பட்டு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாரா என்ற வினா இங்கு எழுகிறது. அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ஆகிய இருவருடைய சாட்சியத்தின்படி தெரியவருவது யாதெனில் 12—4—1997 அன்று இரவு ''லஸ் கார்னரில்'' ரமேஷ் கைது செய்யப்படவில்லை. ஆனால் மயிலாப்பூர் காவல் நிலையத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவில் ஒப்படைப்பதற்காக மட்டுமே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ரமேஷை தன்னிடத் திற்குக் கொண்டுவருமாறு அ.சா. 4, அ.சா. 1—ஐப் பார்த்து கூறியபோது, ரமேஷின் கைகளை அவர்கள் இருவரும் பிடித்துக் கொண்டு ''நேரு நியூஸ் மார்ட்'' கடை பக்கத்திலிருந்து அ.சா. 4 இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் அவர்கள் ஒரே மாதிரியாக கூறுகின்றனர். ஒரு நபருடைய உடலைத் தொடுவதே கைது என்றாலும் கூட, அவரைக் காவலில் வைக்கும் நோக்கத்துடன் இது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது. இங்கு, உடனடியாக சுட்டிக் காட்டப்படலாம். அ.சா. 1—ம், அ.சா. 2—ம் ரமேஷை தங்களுடைய கரங்களால் பிடித்து அழைத்துச் சென்ற சமயம், ரமேஷை காவலில் வைப்பது அல்லது கைது செய்வது என்ற எண்ணமே எழவில்லை. அ.சா. 1, ரமேஷை அ.சா. 4—யிடம் அழைத்து வந்து ரமேஷ் தனக்கு எதிராக முறைகேடாகவும் அநாகரிகமாகவும் நடந்து கொண்டது பற்றி அ.சா. 4யிடம் அவர் (அ.சா. 1) தெரிவித்த பிறகே சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75—வது பிரிவின்படி ரமேஷ் குற்றம் புரிந்தார் என்று அ.சா. 4 முடிவு செய்து, ரமேஷை E-1 காவல் நிலையத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவிற்கு அழைத்துச் செல்லும்படி, அ.சா. 1—ஐப் பார்த்து ஆணை யிட்டார். எனவே, ரமேஷை, ''நேரு நியூஸ் மார்ட்'' கடை பக்கத்திலிருந்து அ.சா. 4 நின்றுக் கொண்டிருந்த இடமான ''கேரளா பேஷன் ஜுவல்லரி'' கடைக்கு அழைத்துக்கொண்டு வந்தபோது, அ.சா. 1 அல்லது அ.சா. 4ஆல் ரமேஷை கைது செய்யும் அல்லது காவலில் வைக்கும் வினா எழவில்லை.

7. ரமேஷை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு காவல் நிலையத்திற்குச் சென்றபோது ரமேஷ் கைது செய்யப்பட்டாரா என்ற வினாவிற்கு ரமேஷ் கைது செய்யப்படவில்லை என்றும், ஆனால் சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் அவர் மீது குற்றம் சாட்டப்படுவதற்காக சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவில் ஒப்படைப்பதற்காக காவல் நிலையத் திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் காவல் துறையினர் பதில் அளித்திருக்கக்கூடும். 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டத்தின் 23-வது பிரிவு, காவல் துறை அதிகாரிகளின்

கடமைகளைப்பற்றி விளக்குகையில், இச்சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக ஒவ்வொரு காவல் துறை அதிகாரியும், எப்போதும் பணியில் இருப்பதாகக் கருதப்படுவதோடு, குற்றங்களும், பொது மக்களுக்குத் தொல்லைகளும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அமைதியைக் காப்பதற்கு, ஒழுங்கற்ற மற்றும் சந்தேகத்திற்குரியவர்களைப் பிடிப்பதற்கும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கும் காவல்துறை அதிகாரி அவரது முயற்சிகள் மற்றும் திறமைகள் முழுவதையும் பயன்படுத்த வேண்டியது அவருடைய கடமையாகும் என்று விளக்குகிறது.

ஒருவர், பொது இடங்களில் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் அல்லது விளைவிக்கக்கூடிய வகையில் வன்முறையாகவோ அல்லது மூர்க்கத்தனமாகவோ அல்லது முறைகேடாகவோ அல்லது அபரிமிதமாகவோ அல்லது அநாகரீகமாகவோ நடந்து கொண்டாலும் அல்லது அச்சுறுத்துகின்ற தகாத அல்லது அவமதிக்கின்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினாலோ, 6 மாதத்திற்கு மேற்படாத கால அளவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கு அல்லது ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை அபராதம் செலுத்துவதற்கு உட்பட்டவராவார் என்று சென்னை மாநகர காவல் சட்டத்தின் 75 (1) (C) பிரிவு கூறுகிறது.

இ.பி. கோ. 41 ஆம் பிரிவு, பின்வருமாறு தெரிவிக்கிறது :—

(a) பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றமொன்றில் சம்பந்தப்பட்டுள்ளவர் அல்லது அவர்மீது நியாயமான புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது அல்லது நம்பத்தகுந்த தகவல் வரப்பெற்றுள்ளது அல்லது அவர், அதில் அவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளதற்கு நியாயமான ஐயப்பாடு எழுந்துள்ளது என்ற வகையில், ஒருவரை, காவல்துறை அதிகாரி, மாஜிஸ்டிரேட்டிடமிருந்து ஆணை ஒன்றைப் பெறாமலும் பிடியாணை இல்லாமலும் கைது செய்யலாம்.

8. ரமேஷ் கைது செய்யப்படலாம் என்ற போதிலும் அவர் 12—4—1997 ஆம் நாளன்று அ.சா. 1, அ.சா. 4 ஆகியோரால் லஸ் கார்னர் பகுதியில் கைது செய்யப்படவில்லை என்பதைச் சட்டத்தின் மேற்சொன்ன விதித்துறைகள் காட்டும். அ.சா. 1, அ.சா. 4 ஆகியோர் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரிந்துகொண்டிருந்தனர் என்பதும், அவர்கள், வழக்கமாக போக்குவரத்து விதிகளை மீறுகின்ற குற்றங்களைப் புரிவோரைக் கூட கைது செய்வதில்லை என்பதும் காவல்துறைத் தரப்பினர், ரமேஷை அ.சா. 1 மற்றும் அ.சா. 4 கைது செய்யாமலிருந்ததற்குத் தெரிவித்த முதல் மற்றும் முக்கியகாரண மாகும். பகல் நேரத்தில் நடமாடும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் இயங்கி வருவதால், குற்றம் புரிந்தோர், நடமாடும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றனர் என்றும், சூரியன் மறைந்த பின்னர் குற்றம் நடந்திருந்து நடமாடும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் இயங்காமல் இருந்தால் சட்டத்திற்கிணங்க, அவர்கள் மீது வழக்கு தொடர இயலும் வகையில் குற்றம் புரிந்தோர், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். போக்குவரத்துக் காவல்துறையினர், போக்குவரத்து விதிகளையும், விதி முறைகளையும் மீறுகின்ற குற்றம் புரிவோரை வழக்கமாகக் கைது செய்வதில்லை என்பதையே இது காட்டுகிறது. சென்னை மாநகர காவல்துறை சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் குற்றம் ஒன்றுக்காக, ரமேஷ் மீது குற்றஞ்சாட்டப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்ட தற்போதைய வழக்கில் ரமேஷ், அ.சா. 1 அல்லது அ.சா. 4-னால் கைது செய்யப்படவில்லை என்ற எனக்குத் தெளிவாகத் தெரியவருகிறது. கி.பு. கோவின் 41 ஆம் பிரிவு காவல் துறையினருக்குப் பரந்த அதிகாரங்களை அளித்துள்ளபோதிலும், அதற்குக் கண்டிப்பான பொருள் விளக்கம் கொள்ளப்படவேண்டும். இந்தப் பிரிவின்கீழ் வரும் அதிகாரங்கள், விருப்புரிமை இருப்பதால், அதை, சிறு வழக்குகளில் செயல்படுத்தக் கூடாது. அத்தகைய வழக்குகளில், கைது செய்வதற்குப் போதியகாரணம் இருக்கும்போது, அதாவது, ஒரு நபர் தலைமறைவாவதற்கான சாத்தியக்கூறு இருக்கும்போது அல்லது அவரை வெளியே உலவ விட்டால், அவர் வருங்காலத்தில் சில குற்றங்களைச் செய்வதற்குரிய அபாயம் இருக்கும்போது மட்டுமே அதைச் செயல்படுத்த இயலும். ரமேஷ் மீது சாட்டப்படவிருந்த குற்றம், சென்னை மாநகரக் காவல் துறை சட்டத்தின் 75 ஆம் பிரிவைச் சேர்ந்தது ஆகும் என்பது வெளிப்படை. அது ஒரு சிறிய குற்றமாகும். அவர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்படுவதற்காக, ஜீப்பில் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார். இந்தச் சூழ்நிலையில், காவல் துறையினர் ரமேஷை கைது செய்வதற்கான அவசியம் எழவில்லை. ரமேஷ் காவல்துறையின் காவலில் வைக்கப்படுவதற்காக ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டிருந்தால், அதை, கைது செய்யப்பட்டதாகக் கொள்ளக் கூடாது. அ.சா. 1, அ.சா. 4 ஆகிய இருவரில் எவரொருவரும், எந்நிலையிலும் ரமேஷ் கைது செய்யப்பட்டிருப்பதாக அவரிடம் (ரமேஷிடம்) கூறவில்லை. ''காவலில் வைப்பது'' என்ற கருத்து, முறைப்படியாகக் கைது செய்யப்படுதல் என்ற கருத்தை ஒத்ததாக இருக்க இயலாது. இவ்விரண்டிற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

9. அ.சா. 1-னால் காவல்துறை ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்ட ரமேஷ், வழியில் ஜீப்பிலிருந்து குதித்து தப்பிச் சென்றாரா என்பது மற்றொரு முக்கியமான வினாவாகும். இந்தக் கூற்றை மெய்ப்பிப்பதற்கு, காவல்துறையின் தரப்பில், அ.சா. 1, அ.சா. 3, அ.சா. 6 ஆகியோர் அளித்த சாட்சியம் சான்றாகக் கூறப்பட்டுள்ளது. காவல் துறையின் ஜீப், கால்வாய் பாலத்தைக் கடந்த பின்னர் ராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரே சென்று கொண்டிருந்தபோது, அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச்சேர்ந்த மாநகரப் பேருந்து ஒன்று எதிர்ப்பக்கத்திலிருந்து வந்துகொண்டிருந்தது என்றும், சாலையில் போக்கு வரத்து நெரிசல் இருந்தது என்றும், அதனால் அ.சா. 3 ஜீப்பை மெதுவாக ஓட்டினார்

என்றும் அந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ரமேஷ் அரைக் கதவு மட்டுமே இருந்த ஜீப்பின் பின்பக்கம் வழியே குதித்துத் தப்பித்துச் சென்றார் என்றும், அவர்கள் ஒரே மாதிரியாகக் கூறுகின்றனர். ரமேஷ் மேற்குப் பக்கத்தில் லஸ் கார்னரை நோக்கி ஓடினார் என்று அவர்கள் சாட்சியமளித்தனர். கால்வாய்ப் பாலத்தைக் கடந்த ரமேஷ், கால்வாய்க்கும், பெருநகரப் போக்குவரத்துத் திட்டப் (இரயில்வே) பாலத்திற்கும் மேற்கில் வடக்கு-தெற்காக அமைந்துள்ள கல்விராயன் தெரு நெடுக ஓடினார் என்று அ.சா. 6 குறிப்பாகக் கூறுகிறார். கால்வ் நிலையத்திற்குச் செல்லும் வழியில், ரமேஷ் தப்பிச் சென்றதில், நிகழ்க் கூடிய சாத்தியமாகக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பது அவர் களுடைய சாட்சியத்தைக் கவனமாகப் பரிசீலித்ததிலிருந்து தெரிய வந்துள்ளது. வண்டிகள் மெதுவாக நகர்ந்தன என்றும், போக்குவரத்து நெரிசல் இருந்தது என்றும், அதன் விளைவாக அ.சா. 3 ஜீப்பை மெதுவாக ஓட்டினார் என்றும், ரமேஷ் ஜீப்பின் பின்பக்கம் வழியே குதித்து, தப்பிச் சென்றார் என்றும், அ.சா. 1, அ.சா. 3 ஆகியோர் அளித்துள்ள சாட்சியத்தை நம்பாமல் இருப்பதற்கு எதுமில்லை. போக்குவரத்து நெரிசலின்போதும், மேற்கிலிருந்து ஜீப் வந்துகொண்டிருந்தபோதும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று எதிர்த்திசையிலிருந்து (கிழக்கு) வந்துகொண்டிருந்தது என்ற கருத்து மறுக்கப்பட வில்லை. ராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரேயுள்ள சாலை 30 அடி அகலம் மட்டுமே உடையது. கல்யாண மண்டபத்திற்கு மேற்கே கால்வாய்ப் பாலத்தில் அதன் அகலம் 25 அடிக்கும் குறைவாக உள்ளது. இந்தச் குறுநிலையில் அ.சா. 3 ஜீப்பின் வேகத்தைக் குறைத்தது இயற்கையே. அ.சா. 1 ஜீப் என் மெதுவாகச் சென்றது என்று அறிவதற்காக அ.சா. 3-ன் பக்கம் எட்டிப்பார்த்தார் என்றும், அந்தச் சமயத்தில் அ.சா. 1-ன் கவனம் வேறெங்கோ இருந்ததை அறிந்த ரமேஷ், ஜீப்பின் பின்பகம் வழியே நிமோன்று குதித்துத் தப்பிச் சென்றார் என்றும் அ.சா. 1 கூறுவதும் நிகழ்க் கூடியதே. ஜீப்பின் பின்பக்கக் கதவு, வழக்கமான கதவின் உயரத்தில் பாதி மட்டுமே இருந்தது. எனவே, ரமேஷ் ஜீப்பிலிருந்து எளிதாகத் தப்பிச் சென்றிருக்க இயலும் என்பதை மறுக்க இயலாது. மேலும் அ.சா. 1, ரமேஷ் அமர்ந்திருந்த நேளானை இருக்கைக்கு எதிரேயிருந்த மற்றொரு நேளானை இருக்கையில் அமர்ந்திருந்தார். ரமேஷ் தப்பியோடத் தொடங்கியபோது கூட அவரைப் பிடிக்க இயலும் வகையில், அ.சா. 1 அமர்ந்திருந்த அதே நேளானை இருக்கையில், அவர் இருந்த பக்கத்தில் ரமேஷ் அமர்ந்திருக்கவில்லை. அ.சா. 3 ஜீப்பை நிறுத்தியபோது, அ.சா. 1 ஜீப்பிலிருந்து இறங்கியிருக்கலாம். அ.சா. 1 ரமேஷை பிடிக்க முடியாமல் செய்வதற்கு எதுவாக அவர் இருந்த திசைக்கு எதிர்த்திசையில் ரமேஷ் வேகமாச ஓடியிருக்கலாம் என்பதும் சாத்தியமானதே.

10. ரமேஷை தூத்துவதற்கும், அவளைப் பிடிப்பதற்கும் முயற்சி செய்யாததற்கு அ. சா. 1 தெரிவித்த காரணமும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ரமேஷ் ஓடிக்கொண்டிருக்கிற வண்டிகளுக்கு இடையே தாறுமாறாக ஓடினார் என்றும், அவை, ரமேஷ் மீது மோதி அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திவிடக் கூடும் என்றும், எனவே, அவர் (அ.சா. 1) ரமேஷை தூரத்திச் செல்ல முயலவில்லை என்றும், அ. சா. 1, அ. சா. 3 ஆகியோர் தெரிவித்துள்ளனர். ஓடிக்கொண்டிருந்த ரமேஷை பிடிக்க, சாலையில் சென்று கொண்டிருந்தவர்களை அ. சா. 1 சத்தமிட்டு அழைத்து எச்சரிக்கை செய்யாமல் இருந்ததற்கும், அதுவே காரணமாக இருந்திருக்க லாம். ரமேஷை, சிறு குற்றத்திற்காகவே ஜீப்பில் அழைத்துச் சென்றதாலும், அ. சா .1, ரமேஷின் உயிரைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறைக் கொண்டதாலும், அ. சா. 1, ரமேஷ் தப்பிச் சென்றதை கடுமையானதாகக் கருதவில்லை. அவர், ரமேஷை பிடிக்க முன்வரவில்லை. ரமேஷ் தப்பித்துச் செல்ல அனுமதித்ததற்காக அ. சா. 1, அ. சா. 1-ஐ கண்டித்தார். ஆனால், அவருடைய கடமையை அற்றியதில் கவனக்குறைவாக இருந்தததாக அல்லது ரமேஷை கைது செய்ய இயலாமற் செய்ததற்காக அ. சா. 1 மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அ. சா. 6. ராஜா கல்யான மண்டபம் எதிரே பூ விற்கும் வியபாரி அவர். அவருடைய கணவர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர். அவருடைய சகோதரி ராஜம்மாள் அந்தக் கல்யான மண்டபத்தில் பாத்திரங்களைத் துலக்குவர் அவர். எனவே, ரமேஷ் ஜீப்பிலிருந்து குதித்து, கச்சேரி சாலை நெடுக்கச் சிறிது தூரம் ஓடி பின்னர் கால்வாய்க்கு மேற்கேயுள்ள கல்விராயன் தெரு நெடுகச் சென்றதை அவர் பார்த்திருக்கக் கூடும். அவர், காவல் துறையினரிடம் உதவும் மனப்பான்மையுடைய சாட்சியாக சாட்சியமளிக்க முன் வருவார் என்று எனக்குத் தோன்ற வில்லை. அவருடைய வீடு, ராமகிருஷ்ணாபுரத்தில் உள்ளது. அது, கால்வாய்க்குச் சற்றே கிழக்கே ராஜா கல்யான மண்டபத்திற்கு அருகில் உள்ளது. ரமேஷ் ஜீப்பிலிருந்து குதித்து வெளியே ராஜா கல்யான மண்டபத்திற்கு எதிரே ஓடிய சம்பவத்தை அவர் பார்த்த தாகத் தெரிவித்த குழ்நிலை, ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

11. மேலும், ரமேஷ் காவல் நிலையத்திற்குச் செல்லும் வழியில் தப்பித்துச் சென்றதை அ. சா. 1, லஸ் கார்னரில் இருந்த அ. சா. 4-இடம் தெரிவித்தார். அ. சா. 1 அவருடைய கடமையில் கவனமில்லாமல் இருந்ததற்காக அ. சா. 4 அவரைக் கண்டித்தார். பதிவேட்டிற் காக அ. சா. 4, 12—4—1997 ஆம் நாளிட்ட அவருடைய தன் குறிப்பேட்டில் (சா. ஆ. 97) ரமேஷ் தொடர்பாக அன்று இரவு நடந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் பதவு செய்துள்ளார். சா. ஆ. 97, 12—4—1997 அன்று இரவே எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் மூல நகல் (சா. ஆ. 99) அ. சா. 46 காவல் துறை உதவி ஆணையாளரால் (போக்குவரத்து) 15—4—1997 அன்று பெறப்பட்டது. அ. சா. 4, 3—10—1997 அன்று நடைபெற்ற தொடக்க நிலை விசாரணையின் போது, அவர் அளித்த சாட்சியத்தில் 12—4 —1997 அன்று இரவு நடைபெற்ற சம்பவம் குறித்து அவருடைய தன் குறிப்பேட்டில் பதிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அ. சா. 4, சா. ஆ. 97-ஐ 3—10—1997 அன்றே தாக்கல் செய்திருக்க வேண்டும். அந்த ஆவணத்தின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் எழும் வகையில், அதை, அவர், காலந்தாழ்த்தி 4—2—1998 அன்று தாக்கல் செய்திருக்கக் கூடாது என்று

நான் இங்கு கட்டிக்காட்ட விரும்புகிறேன். எவ்வாறாயினும், சா. ஆ. 97-ன் மூல நகல் அ. சா. 46 ஆல் அன்றே பெறப்பட்டதால், 15—4—1997-க்கு முன்னரே இருந்திருக்க வேண்டும். சா. ஆ. 97, சா. ஆ. 99 உடன் அ. சா. 4-வினால் 12—4—1997 அன்று இரவே எழுதப்பட்டதாக இருந்த போதிலும், சா. ஆ. 4-ன் விளக்கமாக இருந்த போதிலும் அ. சா. 19-வினால், 13—4—1997 அன்று நடத்தப்பட்ட விசாரணையில் அ. சா. 4 பங்கேற்க வேண்டியிருந்ததாலும், 12—4—1997-க்குப் பிறகு, அவருடைய வழக்மான பணிகளை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு கவனிக்க இயலாமல் போனதாலும், சா. ஆ. 99-ம், 13—4—1997 மற்றும் 15—4—1997 ஆம் நாட்களுக்கான தன் குறிப்பேடுகளுடன் அ.சா. 46-க்கு 15—4—1997 அன்று தான் அனுப்பி இருக்க முடியும். இவ்வாறிருக்கும் போது, அ. சா. 1, 3, 6, ஆகியோரின் சாட்சியும், சா. ஆ. 97-ம், அ. சா. 1-வினால் ரமேஷ், ராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரே ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டபோது, 12—4—1997 அன்று இரவு 8-45-க்கும் 9-00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ரமேஷ் தப்பிச் சென்றிருக்க வேண்டுமென்பதையே காட்டுகிறது. அ. சா. 1 அல்லது அ. சா. 4 ரமேஷுக்கு எதிராக சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ், எடுக்கக் கருதிய நடவடிக்கை தொடர்பாகவும், அவர், வழியில் தப்பிச் சென்றது மற்றும் 12—4—1997 அன்று இரவே அவரைக் கைது செய்வதற்கு எடுக்கக் கருதிய முயற்சிகள் தொடர்பாகவும் மயிலாப்பூர் காவல் நிலையத்தின் சட்டம்-ஒழுங்கு பிரிவில் புகார் ஒன்றைச் செய்திருந்தால் மட்டுமே மயிலாப்பூர் காவல் நிலையப் பொதுக் குறிப்பேட்டில் பதிவு ஒன்று செய்யப்பட்டிருக்கக்கூடும். அது, மேலும் ஒரு நல்ல ஆதாரமாக இருந்திருக்கக் கூடும். ஆனால், இவ்வாறு செய்யப்படவில்லை. அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு, சிறு குற்றங்கள் தொடர்பானது தான் என்பதால் அ. சா. 1 மற்றும் 4 ஆகியோர் தப்பிச் சென்றது பற்றி கவலை கொள்ளவில்லை என்று காவல்துறை தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அ. சா. 1 மற்றும் 4 ஆகியோர், அவர்கள் பின்பற்ற வேண்டிய உரிய நடைமுறைகளைப் பின்பற்றும் வகையில், கடுமையாக உழைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்பதால், ரமேஷ் அ. சா. 1-ன் பாதுகாப்பிலிருந்து 12—4—1997 இரவு உண்மையிலேயே தப்பிச் சென்றார் என்ற வினா எழுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. (1) ரமேஷ் தப்பிச் செல்ல அனுமதித்ததற்காக அ.சா. 1-ன் மீதும் (2) நீதிமன்றத்தின் முன் சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக, அவர் பதிலளிக்கும் வகையில் ரமேஷுக்கு எதிராக சட்டம்-ஒழுங்கு பிரிவில் புகார் ஒன்றை அளிக்காததற்காக, அ. சா. 1, அ. சா. 4 ஆகியோர் மீதும் கடமை தவறியதற்காக அரசு தரப்பு நடவடிக்கை எடுக்குமாயின் அது நியாயமானதும் முறையானதும் ஆகும். அய்வு-வரம்பு எண்கள் (ii), (iii) மற்றும் (iv) கால்வாயில் மூழ்கி இறந்தது. அல்லது காவலில் இருந்தபோது இறந்தது.

12. 3860.50M எண் கொண்ட எம்.டி.பி. (இரயில்வே) தூணுக்கருகில் கல்லிராயன் தெரு பக்கத்திலிருந்து அருகேயுள்ள இராமகிருஷ்ணாபுரம் வரையில் கால்வாயின் கிழக்கே அ. சா. 6, 8, 10, 11 ஆகியோர் வசிக்கும் பகுதியான குடிசைப் பகுதியாகத் தோன்றும் கிழக்கு கால்வாயின் குறுக்கே செல்ல முயற்சி செய்தபோது ரமேஷ் மூழ்கி இறந்தாரா அல்லது ரமேஷ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே காவலில் வைக்கப்பட்டு, காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டு பின்னர் ரமேஷின் உடல் கால்வாயில் எறியப்பட்டதா என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய அடுத்த முக்கிய வினாவாகும். அ.சா. 9 மற்றும் தியணைப்பு மடையைச் சேர்ந்த குழுவினர் தொலைபேசி மூலம் இரவு சுமார் 10-25 மணிக்குத் தகவல் வாய்ப்பெற்றதன் பேரில், இரவு சுமார் 11-30 மணிக்குக் கால்வாயின் உள்ளே மிக ஆழமான பகுதியிலிருந்து ரமேஷின் சடலத்தை மீட்டனர் என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. தொலைபேசி மூலம் தகவல் அளித்தவர் அ. சா. 8-ஐ தவிர வேறு யாருமில்லை. கால்வாயின் கிழக்கே பட்டு நால்காவன் தெருவில் (இராமகிருஷ்ணாபுரம்) வசிப்பவரும், திருவல்லிக் கேணியில் அச்சகம் ஒன்றை வைத்து நடத்தி வருபவருமான அ. சா. 8, கல்லிராயன் தெரு கதவு எண் 5-க்கு எதிரே ஆண்களும் பெண்களும் அடங்கிய ஒரு கும்பல் கால்வாயில் நபர் ஒருவர் மூழ்கிவிட்டார் என்றும், அவருடைய உடலைக் காண இயலவில்லை என்றும், அருகிலுள்ள ஒரு வீட்டிலிருந்து இரவு சுமார் 10-25 மணிக்கு தியணைப்புப் படையினருக்கு தொலைபேசி மூலம் தகவல் அளிக்கப்பட்டதென்றும் பேசிக் கொண்டிருந்தனர். அ. சா. 1, E. 1 மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு ரமேஷை அழைத்துச் சென்றபோது, ஜீப்பின் பின்பக்கக் கதவை திறந்து ஜீப்பிலிருந்து குதித்து, கால்வாய் பாலத்தை தாண்டி, கல்லிராயன் தெரு வழியாக ஓடினார் என்று காவல்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது உண்மையாக இருக்கலாம். ரமேஷ் தப்பிச் சென்றது இரவு 8-45 மணிக்கு பின் ஆனால், இரவு 9-00 மணிக்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக இருக்கலாம். ரமேஷ் கால்வாயைக் கடக்க முயற்சிபோது, கால்வாயில் ரமேஷ் மூழ்கிக்கொண்டிருப்பதைப் பார்த்ததாகக் கூறும் யாதொரு நபருடைய நேரடி சாட்சியமும் இல்லை. அ. சா. 7, 10, 11 ஆகியோரின் சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது என்ன வெனில், இரவு சுமார் 9 மணிக்கு கல்லிராயன் தெருவிலுள்ள கதவு எண் 5-க்கு எதிரேயும், கிழக்குக் கால்வாயில் அமைந்துள்ள இராமகிருஷ்ணாபுரத்திலும் கூடி இருந்த மக்கள், கால்வாயில் மூழ்கிக் கொண்டிருந்த ஒருவரைக் காப்பாற்ற வேண்டுமென்று குரல் எழுப்பினர்

13. கால்வாயின் கிழக்குக் கரையில் இருந்த மக்கள், எழுப்பிய கூக்குரலைக் கேட்டு, கதவு எண் 5 கல்லிராயன் தெருவிலுள்ள, ஆட்டோ மெக்கானிக் ஷாப்பில் பணிபுரிந்து கொண்டிருந்த ஆண்கள் சிலர், கால்வாயை நோக்கி ஓடினர். அவ்வாறு ஓடியவர்கள், அ. சா. 10, 11 மற்றும் ஏனையோராக இருக்கலாமென அ. சா. 7 குறிப்பிட்டுள்ளார். இரவு 8—40 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், ரமேஷ் கால்வாயில் வீழ்ந்து மூழ்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தது யார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அ. சா. 10, 11-ஐ பொறுத்தமட்டில் கால்வாயில் நபர் ஒருவர் விழுந்தை உண்மையில் பார்க்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். அல்லது கால்வாயில் நபர் ஒருவர் விழுந்ததைக் குறிப்பாக எவர்

பார்த்தது என்று அவர்களால் கூற இயலவில்லை. எனவே, இரவு சுமார் 9-00 மணிக்கு நபர் ஒருவர் மூழ்கினார் என்ற கூக்குரலைக் கேட்டதாகவும், அ. சா. 9-ம் அவருடைய ஆட்களும் கால்வாயிலிருந்து இரவு சுமார் 10-30-க்கும் 11-30-க்கும் இடைப்பட்ட நேரத்தில் ரமேஷி 7, 10 மற்றும் 11 ஆகியோருடைய சாட்சியம் நம்பத் தகுந்தது. அ. சா. 16 மயிலாப்பூர் காவல் நிலையத் தலைமைக் காவலரும் நபர் ஒருவர் கால்வாயில் மூழ்கி இறந்து விட்டார் என்ற தகவலை இரவு 10-00 மணிக்கே பெற்றார். அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு அவர் சென்றார். கால்வாயில் நபர் ஒருவர் மூழ்குவதை எவர் பார்த்தது என்பது குறித்து பயனுள்ள தகவல் எதனையும் அவரால் பெற இயலவில்லை. உண்மையில், சம்பவ இடத்திற்குக் கொஞ்ச நேரம் கடந்த பிறகே, அதாவது இரவு 9-00 மணிக்குப் பிறகே அவர் சென்றிருக்கக் கூடும். அ. சா. 7-யிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெற்று (சா. ஆ. 27), அ. சா. 41 காவல் துறை உதவி ஆய்வாளர் மூலம் புலன் விசாரிக்கப்பட வேண்டிய இ. பி. கோ. 174 ஆம் பிரிவின்கீழ், 918/97 ஆம் எண் குற்ற வழக்கு ஒன்றை, நள்ளிரவு 12-00 மணிக்குப் பதிவு செய்தார் என்பது மட்டுமே அ. சா. 16 செய்த செயல் ஆகும். அ. சா. 9-ம் அவருடைய ஆட்களும் கால்வாயிலிருந்து ரமேஷின் உடலை வெளியே எடுத்தபோது அவர் அங்கே இருந்துள்ளார். ரமேஷ் கால்வாயைக் கடக்க முயற்சித்தபோது, அவர் கால்வாயில் வீழ்ந்து மூழ்கிக் கொண்டிருந்ததை யாரேனும் ஒருவர் பார்த்து கூக்குரல் எழுப்பி இருக்கலாம் என்றும், ஆனால் எவர் ஒருவரும் நேரடியாகப் பார்த்ததாக சாட்சியமளிக்க முன் வரவில்லை என்றும், எனக்குத் தோன்றுகிறது. வேறு வகையில் கூறுவதாக இருந்தால், கல்விராயன் தெருவிலுள்ள ஆட்டோ மெக்கானிக் ஷாப்பில் பணிபுரியும் நபர்களும், கால்வாயின் மிகுதியேயுள்ள தெருவில் வசிப்பவர்களுமான அ. சா. 10, 11 ஆகியோர் கால்வாயில் நபர் ஒருவர் மூழ்கிக் கொண்டிருப்பது குறித்த கூக்குரலைத் கேட்கவில்லையாயின், கால்வாயை நோக்கி ஓடி இருக்க முடியாது. கால்வாயில் நபர் ஒருவர் மூழ்கிக் கொண்டிருக்கிறார் என்ற தகவலைக் கேட்டு, சம்பவ இடத்திற்குச் சென்ற அ. சா. 16, தீயணைப்புத் துறை அட்கள், கால்வாயிலிருந்து உடலை மீட்ட பிறகு அது எவருடைய உடல் என்று கூட்டத்திலிருந்த எவாலும் கூற இயலவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

14. அ.சா. 1-ன் காவலிலிருந்து தப்பிச் சென்ற ரமேஷ் தன்னுடைய பாதுகாப்பு கருதி சாலையின் மறுக்கத்தை அடைய, கல்விராயன் தெருவிலுள்ள 5 ஆம் கதவிலக்கத்திற்கு எதிரே கால்வாயைக் கடக்க முயற்சி செய்திருக்கமாட்டார் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. ஜீப்பை விட்டு வெளியே தாவிக் குதித்த ரமேஷ், கச்சேரி சாலை, கால்வாய் பாலம் ஆகியவற்றின் நெடுக, மேற்காகவும், அதன் பின்னர் கல்விராயன் தெரு வழியாக வடக்காகவும் ஓடி, தன்னுடைய பாதுகாப்பைத் கருதி சாலையின் மறு பக்கத்தை அடையும்பொருட்டு, கால்வாயை கடக்க முயற்சித்தபோது, 3860.50 M. எண் கொண்டதும் பெருநகரப் போக்குவரத்துத் (ரயில்வே) திட்டத்திற்காகக் கட்டப்பட்டதுமான தூணின் அருகே கால்வாயில் தானே மூழ்கிவிட்டார் என்பது காவல் துறையினரின் வாதமாகும். கச்சேரி சாலையிலுள்ள கால்வாய் பாலத்திற்கும், சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்திற்கும் இடையேயான தொலைவு 600 அடியாகும். இராஜா கல்யாணமண்டபத்திற்கு எதிரே, ஜீப்பிலிருந்து அ.சா. 1-ன் காவலிலிருந்து நழுவிய ரமேஷ் கச்சேரி சாலையில் சிறிது தூரம் ஓடிய பின்னர், கல்விராயன் தெரு வழியாக வலதுபுறம் திரும்பியிருக்கக் கூடும். அ சா. 1-ன் காவலிலிருந்து தப்பிய தன்னை மீண்டும் பிடிப்பதற்காக அ.சா. 1-யின் தொடரக்கூடும் என்ற அச்சத்தின்பேரில் ஒளிந்திருந்து தப்பிச் செல்வதற்காக கால்வாயைக் கடந்து அதன் கிழக்குப் பக்கத்திலுள்ள குடிசைப் பகுதியான ஸ்ரீராமகிருஷ்ணாபுரத்திற்குச் சென்றுவிடலாம் என்று எண்ணியிருக்கக்கூடும். கால்வாயின் மேற்கு கரையும், கால்வாய் பாலத்தின் தெற்குப் பக்கமும் பாதுகாப்பானதல்ல என்பதால் அவர் அவ்வழியைத் தவிர்த்திருக்கலாம். ரமேஷ் அவ்வழியில் சென்றிருந்தால், அவர் கால்வாய் கரையின் நெடுக, சிறிது தொலைவு சென்று அங்கிருந்து ராமகிருஷ்ணா மடம் சாலையைக் கடந்து, பல்லக்கு மாணியத்திலுள்ள (மாதவ ராவ் தோட்டம்) அவருடைய இல்லத்தை அடைய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக தன்னுடைய இல்லத்திற்குத் திரும்பிச் செல்வது பாதுகாப்பானதல்ல என்பதால் ரமேஷ் அவ்வாறு செல்லக் கருதியிருக்க மாட்டார். ரமேஷ் தன்னுடைய வீட்டை அடைவதற்காக, கச்சேரி ரோட்டை கடக்கும்போது, கச்சேரி ரோட்டிலுள்ள "வண்டிகள் நிறுத்தக் கூடாத பகுதி" யில் பணியிலிருக்கும் அ.சா. 2, தன்னை பிடித்துவிடக்கூடும் என்று அவர் அஞ்சியிருக்க கூடும். அதனால், அவர் (ரமேஷ்) அந்த வழியை தேர்ந்தெடுக்கவில்லை.

15. ரமேஷ் பொறுத்தவரையில், கால்வாயின் ஆழம் 10 அடி இருக்கும் என்பதையும், மேலும், இதில் ஒடும் நீர், சாக்கடை நீர், மழை நீர் மற்றும் சகதி கலந்த நீராக இருக்கும் என்பதையும் அவர் அறியாமலிருந்திருக்கலாம். அவருக்கு அக்கால்வாய் ஆழமில்லாதது என்பதையும் அவர் அறியாமலிருந்திருக்கலாம். அவருக்கு அக்கால்வாய் ஆழமில்லாதது போலவும் அது வழியாக நடந்து சென்று விடலாம் என்றும் தோன்றியிருக்கலாம். எனவே, அதைக் கடந்து ஸ்ரீராமகிருஷ்ணாபுரம் சென்றுவிட அவர் முயற்சித்திருக்கலாம் என்ற இக் கருத்தை அ.சா. 11 மற்றும் அ.சா. 14 அளித்த சாட்சியங்கள், தெளிவாக்கும். பெருநகரப் போக்குவரத்துத் திட்டத்திற்காக (ரயில்வே) மாநகரில் பல ஆண்டுகளாக, கால்வாயின் பக்கத்தில் பெரிய அளவில் கான்கீரீட் தூண்கள் நிறுவும் பணி நடந்தேறிவருகிறது என்பது எல்லோரும் நன்கறிந்த ஒன்றாகும். கான்கீரீட் தூண்கள் நிறுவுவதற்காகத் தோண்டப்பட்ட குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட மண், கால்வாயில் படித்துக் கிடந்தது என்றும், மாநகரின் மழை நீரும், சாக்கடை நீரும் கால்வாய் வழியாக ஓடவேண்டியிருந்ததால், அக் கால்வாய் சகதியாகி நீரும், சாக்கடை நீரும் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டது என்றும், உதவிப் பொறியாளர் விட்டது என்றும், இதனால் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டது என்றும், உதவிப் பொறியாளர் (பொ.ப.து.) அ.சா. 14 தெரிவிக்கிறார். இது அபாயகரமானதாகவும், சுகாதார கேடான தாகவும் இருந்ததால் பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வரப்பெற்றதன்பேரில், தமிழ்நாடு அரசு, 21—8—1996 ஆம் (சா.ஆ. P. 15) நாளிட்ட, அரசாணையில். கால்வாயிலுள்ள

சேற்றை அகற்ற ஆணை பிறப்பித்தது. இதற்கிணங்க, கூவம் ஆற்றின் தொடக்கம் மற்றும் நேப்பியர் பாலத்திலிருந்து மயிலாப்பூர் ராமகிருஷ்ணா மடம் சாலை வரையில் இருந்த சேறு அகற்றப்பட்டது. இவ்வாறு சேறு அகற்றப்பட்டதன் விளைவாக, கால்வாயின் ஆழம் 10 அடியாக அதிகரித்தது என்றும் அ.சா. 14 கூறியுள்ளார். கால்வாயிலிருந்து சகதி அகற்றப்பட்ட பின்னரும், அக் கால்வாயில் மழை நீரும் சாக்கடை நீரும் சென்றடைந்ததால், மேற்பரப்பில் சாக்கடை நீரும் அடிப்பாகத்தில் நீரும் இருக்கும் என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். சகதி அகற்றும் பணி 1996ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1997ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் நடைபெற்றது. 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு, குறிப்பாக, இக் கொடிய சம்பவம் நடந்த 12—4—1997 ஆம் நாளன்று, கல்விராயன் தெருவின் கிழக்குப் பக்கத்திலுள்ள கால்வாயின் ஆழம் 10 அடி ஆகிவிட்டது என்று பொருள் படுகிறது. கால்வாயின் இந்த இடம் ஒரு மரணப் படுகுழி என்பதை ரமேஷ் அறிந்திருக்க மாட்டார். முன்னர் செய்ததைப் போல் இந்தக் கால்வாயின் ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்கு நடந்தே சென்று எளிதாகக் கடந்து விடலாம் என்று அவர் நினைத்திருக்கலாம். அ.சா. 11 அளித்த சாட்சியம் இந்தக் கருத்திற்கு மிகுந்த வலுவூட்டுவதாக உள்ளது. அதாவது, பெருநகர் போக்குவரத்துத் திட்டத்திற்காக (இரயிலிவே) மண்ணைத் தோண்டி எடுத்து, சிமிட்டிக் கற் கலவையிலான தூண்களை நிறுவுவதற்கு முன்னர் இந்த கால்வாயை மக்கள் எளிதில் நடந்தே கடந்து விடலாம் என்று அவர் கூறியுள்ளார். அ.சா. 11 இந்தக் கால்வாயை ஒட்டி கிழக்கே, ராமகிருஷ்ண புரத்தில் வசித்து வருகிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் கால்வாயின் ஆழத்தைப் பற்றியும் அதன் அபாயத்தைப் பற்றியும் அறியாததால் ரமேஷ், இந்த கால்வாயைக் கடக்க முயற்சித்துள்ளார் என்பதற்கும் அவ்வாறு கடக்க முயற்சித்தபோது, நீரில் மூழ்கிவிட்டார் என்பதற்கும் மேற்கூறிய கருத்து போதிய வலு சேர்க்கிறது. 22—8—1997 ஆம் நாளன்று அந்த இடத்திற்குச் சென்று ஆய்வு செய்தபோது, நீண்ட மூங்கில் கம்பைக் கொண்டு இந்தக் கால்வாயின் ஆழத்தை அளந்தபோது, இந்தக் கால்வாய் 10' 5'' (பத்தடி ஐந்து அங்குலம்) ஆழம் இருப்பது தெரிய வந்தது.

16. ரமேஷ், இந்தக் கால்வாயில் மூழ்கி இறந்திருக்க வேண்டும் என்ற கருத்திற்கு இறப்பு விசாரணை அறிக்கையும், சவப் பரிசோதனைச் சான்றிதழும், அ.சா. 19 மற்றும் அ.சா. 25 ஆகியோர் அளித்த சாட்சியங்களும் பெருமளவில் ஆதரவாக உள்ளன என்பதை ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அன்று இரவு (12—4—1997) சுமார் 11-30 மணிக்கு அந்தக் கால்வாயிலிருந்து எடுக்கப்பட்ட சடலத்தை, இது ரமேஷின் சடலம் என்று அந்த இடத்தில் யாரும் அடையாளம் கூறவில்லை. எனவே, அந்தச் சடலம் அரசினர் ராயப்பேட்டை மருத்துவமனையின் பிணவறைக்கு அனுப்பப்பட்டது. அனால், அடுத்த நாள் காலையில் (13—4—1997) இ.த. சா. 1, தினகரன் கால்பந்துப் பத்திரிகையில் வெளியான புகைப்படம் லஸ் முனையில் முந்தைய நாளிரவு போக்குவரத்துக் காவலர்களால் கைது செய்யப்பட்ட தனஞ்செயன் மகன் ரமேஷினுடையது என்று அடையாளம் காட்டினார். 13—4—1997 ஆம் நாளன்று அ.சா. 19, அரசினர் ராயப்பேட்டை மருத்துவமனையில் பிற்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 2-15மணி வரையில் ரமேஷ் சடலம் பற்றிய இறப்பு விசாரணையை நடத்தினார். அ.சா. 7 அளித்த அறிக்கையின் (சா..ஆ. P25) அடிப்படையிலான முதல் தகவல் அறிக்கை (சா. ஆ. P24) 13—4—1997 ஆம் நாளன்று லஸ் முனையில் காவல் துறை உதவி ஆணையாளரிடம் (அ.சா. 43) கொடுத்த புகார் (சா..ஆ. P26) முந்தைய நாளிரவில் லஸ் முனையிலிருந்து ஜீப்பில் தன் மகன் ரமேஷை மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அடித்துச் சாகடிக்கப்பட்டு விட்டான் என்று இ.த.சா. 1 குற்றம் சாட்டி, புகார் மனு (சா..ஆ. P26) கொடுத்திருப்பதைக் கருத்திற்கொண்டு, காவல் துறை நிலை அணைகளைச் சேர்ந்த 145 ஆம் ஆணையின்கீழ், விசாரணை நடத்துமாறு காவல் துறை ஆய்வாளர் கேட்டுக்கொண்டது (சா.ஆ. P27) அகியவற்றின் பேரில் இந்த இறப்பு விசாரணை நடத்தப்பட்டது. ரமேஷின் சடலத்தில் வலது புருவத்திற்கு மேல் கன்றிய காயம் ஒன்றும், தலையின் பின்பாகத்தில் பிறிதொரு காயமும் இருந்தது என்று இறப்பு விசாரணையின் பஞ்சாயத்தார்கள் கூறியிருந்த போதிலும், சடலத்தில் எந்தக் காயமும் காணப்படவில்லை என்று அ.சா. 19 தன்னுடைய அறிக்கையின் 7 ஆம் நெடும் பத்தியில் தெரிவித்துள்ளார். இறந்தவரின் சடலத்தில் காயங்கள் ஏதும் உள்ளனவா ஆம் எனில் அவை பற்றிய விவரங்களை அளிக்க வேண்டும் என்பது தொடர்பானதே இந்த 7ஆம் நெடும் பத்தியாகும். பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இறப்பு விசாரணை நடத்திய அ.சா. 19 இறந்தவரின் சடலத்தில் காயம் ஏதும் காணப்படவில்லை என்று இந்த நெடும் பத்தியில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இறந்த ரமேஷ் சடலத்தின் தலையில் பின்பக்கம் காயமிருந்ததாக பஞ்சாயத்தார்கள் தெரிவித்திருந்தபோதிலும், ரமேஷ் சடலத்தில் சவப் பரிசோதனைசெய்த அ.சா. 25 கூட தலையின் பின்புறத்தில் காயம் எதனையும் தான் பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ளதை இங்குக் குறிப்பிடலாம். தலையின் பின்பாகத்தில் காயமேதும் இல்லை என்று அ.சா. 25, தெளிவாகக் கூறியுள்ளார். சா..ஆ. P 28-ல் ஏழாம் நெடும் பத்தியில் இறந்தவரின் தலையின் பின்புறத்தில் காயம் இருந்தது பற்றி அ.சா. 19 குறிப்பிடத் தவறிவிட்டாரா என்று அ.சா. 19 இடம் இறந்தவர் சார்பாக வாதிட்ட வழக்குரைஞர் கேட்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

17. அ.சா. 25, அவருடைய சவப் பரிசோதனை வேதியல் பகுப்பாய்வாளரின் அறிக்கை (சா.ஆ. P31) அகியவற்றின் அடிப்படையில் இறந்து போன ரமேஷ் தண்ணீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்திருக்கக் கூடுமென்று தோன்றுகிறது எனும் கருத்துத் தெரிவித்தார். அவர் இறந்தவரின் குரல்வளையிலும் மூச்சுக் குழலிலும் சகதித் துகள்களைக் கண்டதால், மூழ்கியபோது அவர் உயிருடன் இருந்திருக்கவேண்டுமென்றும், தண்ணீருடன் சகதித் துகள்களும் உள்ளே சென்றிருக்க வேண்டுமென்றும் அ.சா. 25 இதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

உள்ளங்கை, உள்ளங்கால் ஊறிய நிலையில் இருப்பதிலிருந்து உடல் தண்ணீரில் சில மணி நேரம் கிடந்ததைக் காட்டுகிறது என்றும், அவர் கூறியுள்ளார். இறந்து போனவரின் குரல் வளையிலும், மூச்சுக் குழலிலும் இரத்தம் தோய்ந்த திரவம் காணப்பட்டதற்குக் காரணம் அவர் இறப்பதற்கு முன்னர் உடலுக்கு வெளியே நடந்த வன்முறையே என்பதை அவர் மறுத்தார். அவர் கூறியுள்ளார். விந்து வெளியேறியுள்ளதற்கு இறந்தவர் மூழ்கும்போது உயிருக்குப் போராடியது காரணமென்று கூறியுள்ளதுடன் குடலின் அடிப்பகுதியில் சிறிது திரவம் இருந்ததையும் கண்டார். மூளையை அறுவை சிகிச்சை செய்து பார்த்ததில் அதில் இழைம அழற்சி கூர் நரம்புணர்ச்சி கோளாறு காணப்பட்டதென்றும், அதன் மேற்புற ரத்தக் குழாய்கள் திரட்சியாகக் காணப்பட்டு வெளிப்புறத்தில் ஏராளமான இரத்த ஒழுக்கு (Pelichiae) காணப்பட்டது. இது இறந்தவரைத் தலையில் அடித்ததால் ஏற்பட்டதல்ல எனபது அ.சா. 25-ன் கருத்தாகும். மூளையில் இத்தகைய அறிகுறி காணப்பட்டதற்கு மூச்சுத் திணறல் காரணமாக இருக்கலாம். தலையில் தாக்கியதால் ஏற்பட்டதல்ல என்று அ.சா. 25 உறுதி செய்துள்ளார். சாதாரணமாக ஒரு மனிதன் தானே நீரில் மூழ்கினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அ.சா. 25 விளக்குகிறார். ஒரு மனிதன், சாதாரணமாக நீரில் மூழ்கினால், அவன் மேலே வர முயற்சிப்பான். ஆனால் அது நான்கு அம்சங்களைப் பொறுத்தது. (1) அந் நபரின் சொந்த முயற்சி (2) உடலின் இயற்கையான மிதவைத் தன்மை (3) உடலுக்கும் உடைக்கும் இடையில் சிக்கியிருக்கும் காற்று (4) தண்ணீரின் எதிர் விசை, இந் நான்கு அம்சங்கள், இந் நபருக்கும் பொருந்தும் என வாதிட இயலாது. ரமேஷ் கால்வாயில் விழுந்து மூழ்கி இருந்தால் உயிருடன் மேலே வந்திருப்பார் என்று கூற இயலாது. இக் குறிப்பிட்ட சம்பவத்தில் 10 அடி ஆழமுள்ள காவல்வாயில் சாதாரணத் தண்ணீர் மட்டும் இருக்கவில்லை. சகதியும் காணப்பட்டது. கழிவு நீரும் மழை நீரும் ஒடி அவை சகதியாக இருந்தது.

(18) ஆணையம் அந்த இடத்தை நேரில் பார்வையிட்டபோது அக் கால்வாயில் தண்ணீரும் சகதியும் கலந்து கலவையைக் கண்டதேயன்றி மேற்புறத்தில் தெளிவான நீரைப் பார்க்கவில்லை. கால்வாயில் தூர் வாரிய பின்னரும், சாக்கடை நீரும் மழை நீரும் கால்வாயில் பாய்ந்து, அதன் விளைவாக மேற்சொன்ன பரப்பிற்கு கீழ்மட்டத்தில் நீர் இருக்கும்போது கால்வாயின் மேற்பகுதி சகதியாகக் காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட பரப்பிற்குக் கீழே நீர் மட்டம் இருக்கும் என்று அ. சா. 14 சாட்சியம் அளித்துள்ளார். சாக்கடை நீர், மழை நீர்க் கலவையின் ஆழம் என்ன என்று அவர் திட்டவட்டமாகக் கூறவில்லை. சாக்கடை நீர் மழை நீருடன் சகதியும் சேர்ந்து கால்வாயில் ஒடும் என்பது பொதுவாக அனைவரும் அறிந்த ஒன்று. எனவேதான், கால்வாயின் மேற்பரப்பு குழம்பாக தோற்றமளித்தது. கால்வாயின் மேற்பரப்பு குழம்பாக இருந்து, அதற்குக் கீழ் நீர்ப்பாப்பு காணப்பட்டால், அதிலும் குறிப்பாக அது 10 அடி ஆழம் இருக்கும்போது ரமேஷ் மேற்பரப்பிற்கு வர முயற்சிப்பதற்கான வாய்ப்பு குறைவு. ரமேஷ் மேலே வரும் வகையில் கால்வாயின் தண்ணீர் முழுவதும் தெளிவாகக் காணப்படவில்லை. மேலும், ரமேஷ் இரு கால்களிலும் ஷூக்கள் (காலணிகள்) அணிந்திருந்தார். அது அவர் மேலே வரத் தடையாக இருந்திருக்கும். கால்வாயைக் கடக்க வேண்டுமென்ற அவலில் விசித்திரத் தன்மை வாய்ந்த இந்தக் கால்வாய்க்குள் ரமேஷ் அடியெடுத்து வைத்தபோது அவர் மேலும் கீழே கால்வாய்க்குள் சென்று மூழ்கியிருப்பார் என்பதிலும் மேலே வர இயலாமல் அவர் இறந்திருப்பார் என்பதிலும் சந்தேகமில்லை. திறமைமிக்க தீயணைப்பு வீரரான அ. சா. 9 அவருடைய இருப்பில் கயிற்றைக் கட்டிக்கொள்ள, இருவர் கரையில் நின்று கொண்டு கயிற்றை பிடித்துக்கொள்ள அவர் கால்வாயில் இறங்கி உடலை மீட்க முதலில் முயன்றார் என்பதையும், கால்வாயில் தண்ணீரும் குழம்பும் காணப்பட்டதால் அவர் மேற்கொண்டும் இறங்க இயலவில்லை என்றும் அதனால் அவர் மீண்டும் கரைக்கு இழுக்கப்பட்டார் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இறுதியாக, அ. சா. 9-ம் அவருடைய ஆட்களும் பலமுறை கொக்கிகள் கொண்ட நங்கூரத்தைப் பயன்படுத்தி அந்த உடலை வெளியே எடுத்தனர். அணிந்திருந்த பேன்ட், ஷர்ட், ஷூ ஆகியவை அப்படியே இருக்க ரமேஷின் உடலை எடுத்தது, அவர் ஒடியபோது என்ன நிலையில் இருந்தாரோ அதே நிலையில் தப்பிப்பதற்காக கால்வாயைக் கடக்க முயற்சித்தபோது கால்வாயில் விழுந்திருக்க வேண்டும் என்றும் தெளிவாகக் காட்டுகிறது.

(19) ரமேஷின் வலது கண்ணிற்கு மேலேயும் கீழேயும் காணப்பட்ட இரு சிராய்ப்புகளைப் பொறுத்தவரை, ஏதாவது சொர சொரப்பான மேற் பரப்பில் உராய்ந்ததால் இத்தகைய காயங்கள் ஏற்பட்டிருக்குமென்று அ. சா. 25 கூறினார். அவ்வாறிருந்தால், ரமேஷ் தப்பிப் பதற்கு தலைதெறிக்க ஒடியபோது, அவர் கால்வாய்க் கரையில் விழுந்து அங்கங்கே கான்கிரீட் துண்களுக்குப் பக்கத்தில் கிடந்த கற்களில் மோதி அவருக்கு இந்தச் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். எப்படியாயினும் அவர் காவல் துறையினரால் அடிக்கப்பட்டு கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கக் கூடிய அளவுக்கு அவை கடுமையான காயங்கள் என்பதற்கும் ரமேஷ் உடலின் முக்கியமான பாகங்களில் ஏற்பட்டுள்ள என்று சொல்வதற்கும் எந்தவித சாட்சியமும் இல்லை. ரமேஷ், 12—4—1997 ஆம் நாளன்று இரவில் கால்வாயில் விழுந்து தனது முடிவைத் தானே தேடிக்கொண்டிருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்தால், காவலில் இருக்கும்போது காவல்துறையினர் ரமேஷை சித்திரவதை செய்து, கொலை செய்தனரா என்ற மற்ற வினா அடிப்பட்டுப் போகிறது.

(20) இருப்பினும், இந்தச் சம்பவத்தில், காவல் துறையினர் குறிப்பாக அ. சா. 1 அவர்களது காவலில் ரமேஷை சித்திரவதை செய்து கொலை செய்யக்கூடிய அவசியத்தை ஏற்படுத்தும் வதுவானசூழ்நிலைகள் எவையுமில்லை என்று தோன்றுகிறது. இராமகிருஷ்ணாமடம்

சாலையில் நேரு நியூஸ் மார்ட்டின் முன்பும், லஸ் முனையில் கேரளா பேஷன் ஜூவல்லரி கடையின் முன்பும் நடந்த சம்பவம் மிகை படுத்தித் கூறப்பட்டதாகத் தோன்றுகிறது. இறந்து போனவர் தரப்பில் அதிக அளவில் மிகைப்படுத்தித் கூறப்பட்டதாகத் தோன்றுகிறது. 12—4—1997 ஆம் நாளன்று இரவு 8-30 மணியளவில் நேரு நியூஸ் மார்ட்டிற்கு எதிரே, அ. சா. 1-க்கும் ரமேஷிக்கும் இடையில் வாய்த் தகராறு ஏற்பட்டது என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. இராமகிருஷ்ணாமடம் சாலையில் வண்டிகள் கடந்து செல்வதற்காக பச்சை ஒளிக்குறி இருந்தபோது நேரு நியூஸ் மார்ட்டின் எதிரில் அச் சாலையைக் கடக்க ரமேஷ் முயன்றபோது, அ. சா. 1 அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த நேரத்தில் சாலையைக் கடக்க வேண்டாம் என்றும், சிவப்பு ஒளிக்குறி தெரியும்போது சாலையைக் கடக்குமாறும் ரமேஷுக்கு அறிவுரை வழங்கியதாகவும், அதற்கு ரமேஷ் அ. சா. 1-ஐ பார்த்து ஏளனமாகச் சிரித்துவிட்டு, அவரை விபச்சாரியின் மகன் என்று திட்டியதாகவும் அ. சா. 1 சாட்சியம் அளித்துள்ளார். அ. சா. 1 அளித்துள்ள சாட்சியத்தை உறுதிப்படுத்தி அ. சா. 2 சாட்சியம் அளிக்கும்போது, சாலையைக் கடக்க அ. சா. 1 எதிர்ப்புத் தெரிவித்தபோது, ரமேஷ் சாலையின் நடுப்பகுதி வரையில் கடந்து விட்டார் என்று தெரிவித்தார். இருப்பினும், இறந்து போனவர் தரப்பில் இது மறுக்கப்பட்டது. சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தபோதே அ. சா. 1, ரமேஷை விபச்சாரியின் மகன் என்று குறிப்பிட்டு தள்ளிப்போகும்படி கூறியதாகத் தெரிவிக்கப் பட்டது. இ. த. சா. 2, 3 ஆகியோரும் இது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். இந்த சாட்சியங்களிலிருந்தும், அணையும் அறிந்தவரையில் ஒருவரை ஒருவர் விபச்சாரியின் மகன் என்று திட்ட முற்பட்டனர் என்று தெரிகிறது.

(21) அ. சா. 1, ரமேஷை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்பதையும் அல்லது ரமேஷ் தரப்பிலும் அதேபோன்று திட்டினார் என்பதையும் நம்ப நான் தயாராக இல்லை. ரமேஷ் நன்கு ஆடையணிந்த கண்ணியமான மனிதராகத் தோன்றுகிறது, என்பது தெளிவாகிறது. அவர் 12 ஆம் வகுப்பு வரையில் படித்திருப்பதோடு துணிக் கடைக் கிடங்கு ஒன்றில் வேலை பார்த்து வந்தார். ரமேஷ் சாலையைக் கடக்க முயர்சி செய்திருப்பாராயின் அல்லது சிறிது தூரம் சாலையைக் கடந்துள்ள குழ்நிலையில், ரமேஷ் மீது கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தும் அளவிற்கு அ. சா. 1 சென்றிருக்க மாட்டார். ரமேஷுடன் இருந்ததாகக் கூறிக்கொள்ளும் இ. த. சா. 2, 3 ஆகியோர், அ. சா. 1, ரமேஷை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளது நம்பத்தகுந்ததாக இல்லை. சம்பவம் நடந்த நேரத்தில் இ. த. சா. 2, 3 ஆகியோர் ரமேஷுடன் இருந்திருப்பார்களா என்று நினைத்துப் பார்க்கவே மனம் துணுக்குறுகிறது. முந்தைய நாள் இரவில் (12—4—1997) சம்பவம் நடந்த நேரத்தில் இ. த. சா. 2, 3 ஆகியோர் ரமேஷுடன் இருந்ததாகச் சொல்லப்பட்ட போதிலும் அடுத்தநாள் (13—4—1997) காலை 9-00 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். பி. ராம ஜெயத்திடம் (அ. சா. 42) புகாரைக் (சான்றாவணம் P 26) கொடுத்த இ. த. சா. 1, [அது, லஸ் முனையில் காவல் துறை உதவி அணையாளரிடம் (அ. சா. 43) ஒப்படைக்கப்பட்டது] குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. போக்குவரத்துக் காவல் துறையினர் லஸ் முனையில் இருந்து ரமேஷைக் கூட்டிச் சென்றனர் என்ற தகவல் இ. த. சா. 2 மூலமாகத் தான் இ. த. சா. 1-க்கு வரப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இ. த. சா. 3, இ. த. சா. 1-ன் அடுத்த வீட்டுக்காரர் எனச் சொல்லப்படுகிறது. சான்றாவணம் P. 26-ல் மயிலாப்பூர் போக்குவரத்துக் காவல்துறையினர், ரமேஷை கூட்டிச் சென்றதாக அவருக்குத் தகவல் கிடைத்த தாக மட்டுமே இ. த. சா. 1 தெரிவிக்கிறார். 13—4—1997 ஆம் நாளன்று பிற்பகலில் அ. சா. 19-இடம் இ. த. சா. 1 அளித்த இன்னொரு சாட்சியத்தில் (சான்றாவணம் P 32) தகவல் அளித்தவரின் பெயரே வேறு மாதிரியாகக் கூறப்பட்டது. மகேஸ்வரி என்ற பெயருடைய பூக்காரி ஒருவர் அவரது வீட்டிற்கு விரைந்து வந்து, போக்குவரத்துக் காவல் துறையினர் ரமேஷைக் கூட்டிச் சென்றது குறித்த தகவலைத் தெரிவித்ததாக சான்றாவண பி 32-ல், இ. த. சா. 1 தெரிவிக்கிறார். ஆனால், மேற்சொன்ன மகேஸ்வரி சாட்சியம் அளிக்க முன் வரவில்லை. அதற்குப் பதிலாக, 12—4—1997 ஆம் நாளன்று இரவில் லஸ் முனையில் நடைபெற்ற சம்பவம் முழுவதற்கும் மற்றும் லஸ் முனையிலிருந்து காவல் துறை ஜீப் ஒன்றில் ரமேஷை காவல் நிலையம் நோக்கி கூட்டிச் சென்றதற்கும் நேரடி சாட்சியாக இ. த. சா. 2, 3 ஆகியோர் தோன்றியுள்ளனர். இ. த. சா. 2, 3 ஆகியோர் தயாரித்துக் கொண்டு வரப்பட்ட சாட்சிகள் என்பதிலும் அவர்களது சாட்சியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க தேவையில்லை என்றும் முடிவு செய்ய எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

(22) வேறு வகையில் சொன்னாலுங்கூட, இ. த. சா. 2, 3 ஆகியோர் அளித்த சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரணானவையாகக் காணப்படுகின்றன. அ. சா. 1 ரமேஷின் சட்டையைப் பிடித்துக் கொண்டு நேரு நியூஸ் மார்ட் முன்பு அவரை வலுக்கட்டாயமாகத் தள்ளிச் சென்றதாகவும், கேரளா பேஷன் ஜூவல்லரி கடைக்கு அருகில் இருந்த அ. சா 4 இடம் அவரைக் கொண்டு சென்ற பின்னர், இரண்டு காவலர்கள் ரமேஷை ஜீப்பினுள் தள்ளியதாகவும் அவரை உதைத்ததாகவும் இ.த.சா. 3 கூறுகிறார். ஆனால், கேரளா பேஷன் ஜூவல்லரிக்கு அருகில் ரமேஷை ஜீப்பினுள் தள்ளி உதைத்தது குறித்து மட்டுமே இ.த.சா. 2 தெரிவிக்கிறார். நேரு நியூஸ் மார்ட் அருகில் அ.சா. 1 ரமேஷை தள்ளியது குறித்து அவர் எதுவும் கூறவில்லை. இ.த.சா.1 ஏற்கெனவே சா.ஆ. P 26 மற்றும் சா.ஆ. P 32 ஆகியவற்றில் என்ன சொல்லியிருந்தாரோ அதை மறந்துவிட்டு அதிலிருந்து மிகைப்படுத்திக் கூறியுள்ளார். தற்போது, அவர், போக்கு வரத்துக் காவலர், ரமேஷை அழைத்துக் கொண்டு சென்றது குறித்து இ.த.சா. 2 இடமிருந்து தகவல் வரப்பெற்றதாகக் கூறுகிறார். இ.த.சா. 3-ஐப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை இ.த.சா. 1-ஐ பொறுத்தவரையில்,

ரமேஷை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முன்னர், லஸ் கார்னரில் போக்கு வரத்துக் காவல் துறையினர் ரமேஷிடம் வன்முறையாக நடந்து கொண்டார்கள் என்பது பற்றி தனிப்பட்ட முறையில் அவருக்குத் தெரியாது. வேறு வகையாகச் சொன்னால்கூட, அத்தகைய பொது இடத்தில், ரமேஷ் தாக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு நம்ப முடியாத ஒன்றாகும். ரமேஷை ஜீப்பிலேயே அடித்துக் கொன்று அவரின் சடலத்தைக் கால்வாயில் வீசி எறிந்து விட்டனர் என்று இ.த.சா.1-ன் கருத்து வெளி இடத்தில் அவ்வாறு நடத்திருக்காது. இ.த.சா. 1-இன் தரப்பில் எடுத்துக் கூறப்பட்ட சான்று மிகைப்படுத்தப்பட்டதாகவும், பின்னர் நினைத்துப் பார்த்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் உள்ளது. சாட்சியமளித்தபோது, அவரின் சாட்சியத்தில், லஸ் கார்னரில் ரமேசுக்கும் அ.த.சா. 1-க்கும் இடையில் சிறிய அளவில் வாய்ச்சண்டை மட்டுமே ஏற்பட்டது என்றும், கடுமையாகக் கோபமூட்டத்தக்க வகையில் எதுவும் ஏற்பட்டிருக்க இயலாது என்றும் தெரிவித்தார். வாய்ச்சண்டையின் பேரில் அவரை அடித்துக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனே, ரமேஷை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்று ஊகம் செய்ய இயலாது. ரமேஷை லஸ் கார்னரில் வன்மை யாகத் தாக்கினார்கள் என்ற கருத்தை நாம் எடுத்துக் கொள்ளாவிட்டால், அ.த.சா. 1-க்கும் ரமேசுக்கும் இடையில் வாய்ச்சண்டை அல்லது வாய்த் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமே எஞ்சியுள்ளது.

23. வாய்ச்சண்டை அல்லது வாய்த் தகராறின் தன்மை என்னவாக இருக்கும் என்று ஊகம் செய்தால், சம்பவம் நடைபெற்ற இடத்தில் மறுக்க இயலாத வகையில் இருந்தவர்களான அ.சா. 1, 2 மற்றும் 4 ஆகியோரின் சாட்சியங்களே எஞ்சியுள்ளன. இ.த.சா. 1 அவ்விடத் திலேயே இல்லை. இ.த.சா. 2 மற்றும் 3 ஆகியோர் அவர்களின் சாட்சியங்களிலும் சா.ஆ. P 26 மற்றும் P 32 ஆகியவற்றிலுள்ள அவரச் சாட்சியங்களிலும் தெரிவிக்கபட்டுள்ளவாறு அவர்கள் அவ்விடத்திற்கு வந்திருக்கவும் இயலாது. அச்சம்பவத்தை பார்த்திருக்கவும் இயலாது. எனவே, ரமேஷ் போக்குவரத்து ஒளிக்குறியை மீறி சாலையைக் கடந்தது, அதற்கு அ.த.சா. 1 எதிர்ப்புத் தெரித்தது, அதனால் ரமேஷ் சண்டையை ஆரம்பித்தது ஆகியவற்றால்தான் வாய்ச் சண்டை ஏற்பட்டிருக்க வேண்டும். அ.த.சா. 1, 2 மற்றும் 4 ஆகியவர்களின் சாட்சியத்தைக் கவனமாக நுண்ணாய்வு செய்ததில், ரமேஷ், அ.த.சா. 1 உடன் சண்டையிட்டிருக்க வேண்டும் என்பதையும், அவர், இராமகிருஷ்ணாமடம் சாலையில் முறையற்ற வகையில் நடந்திருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன. ரமேஷ், இராமகிருஷ்ணாமடம் சாலையைக் கடந்து செல்ல முயன்ற போது, அல்லது அச்சாலையைச் சிறிது தூரம் கடந்து சென்றபோது அ.த.சா. 1 அதை எதிர்த்திருக்க வேண்டும். வாகனங்கள் கடந்து செல்வதற்கான பச்சை ஒளிக்குறி காட்டப்பட்டிருந்ததால், ரமேஷ் அவ்வாறு சாலையைக் கடந்து செல்லக்கூடாது என்று எச்சரித்திருக்க வேண்டும். அதற்கு ரமேஷ், சாலையைக் கடந்து செல்வதில் தீமை எதுவும் ஏற்படாது என்று தெரிவித்திருக்க வேண்டும். அ.த.சா. 1-ன் அதிகாரம் மற்றும் நடத்தை பற்றி வினவும் வகையில் சிலவற்றைச் சொல்லியிருக்க வேண்டும்; அ.த.சா. 1 அவருக்கு மறுப்பு தெரிவித்திருக்க வேண்டும். ரமேஷ் தொடங்கிய இத்தகைய சண்டை பொது இடத்தில் முறையற்ற வகையில் அவர் நடந்து கொண்டதில் முடிந்துள்ளது. எனவே, சென்னை மாநகர்க் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் ரமேஷ் மீது வழக்கு பதிவு செய்வதுதான் சரியானது என்று அ.த.சா. 4 கருதி, அவரை, காவல் நிலையத்தின் சட்டம்-ஒழுங்கு பிரிவிற்கு அனுப்பிவைத்தார். எனவே ரமேஷ் கெட்ட வார்த்தை களைப் பயன்படுத்தினார் என்றும் அவரைக் கொன்று விடுவதாக மிரட்டி பதம் செய்தார் என்றும், அ.த.சா .1 அளித்த சாட்சியம் மிகைப்படுத்தப்பட்டதாகவே தோன்றுகிறது. இத் தகைய சூழ்நிலைகளில் ரமேஷ், ஆத்திரமூட்டி அவரை சித்திரவதை செய்து, காவல் நிலையத்தில் அவரைக் கொன்றுவிடும் அளவிற்குக் கடுமையாக எதுவும் செய்திருக்க மாட்டார் என்பதே எமது ஊகம் ஆகும். 'நேரு நியூஸ் மார்ட்'டின் முன்னால் ரமேஷின் நடத்தை தமக்கும் கோபமூட்டியபோதிலும் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொண்டு, ரமேஷை அ.த.சா. 4 இடம் அழைத்துச் சென்றதாக அ.த.சா. 1 சாட்சியமளித்துள்ளார்.

24. ரமேஷை ஜீப்பில் கொண்டு செல்லும்போது வழியில் செல்கையில் போக்குவரத்துக் காவல் துறையின் காவலிலிருந்து அவர் தப்பியோடி விட்டார் என்பதையும் இரவு சுமார் 9.00 மணிக்கு காவல் நிலையத்தின் வளாகத்தில் அ.த.சா. 4, இ.த.சா. 1-க்கு தகவல் கொடுத்திருந் தால், நல்லவராகத் தோற்றமளித்த அந்தப் பையனுக்கு, காவலர்களிடம் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்று இ.த.சா. 1 அறிவுரை கூறும்படி கேட்டுக் கொண்டிருக்க முடியும். இ.த.சா. 1-ம் அவரின் மகனான ரமேஷ் பத்திரமாக வீடு திரும்பி விடுவார் என்ற நம்பிக்கையில், அவரின் வீட்டிற்குச் திரும்பிச் சென்றிருப்பார். அ.த.சா. 4இன் வாக்குமூலத்தைச் சந்தேகிக்க எதுவும் இல்லை. ரமேஷ் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லும் வழியில், தப்பியோடி விட்டார் என்பதை லஸ் கார்னரில் அ.த.சா. 1 மற்றும் 3 ஆகியோரின் மூலமாக அ.த.சா. 4 ஏற்கெனவே அறிந்திருந்தார். சாதாரணமாக, காவல் துறை காவலர் அல்லது காவல் துறை அதிகாரியின் முன்னிலையில் ஒருவர் குற்றம் புரிந்து விட்டால், யார் அவர் என்னவகை இருக்கிறார் ? எங்கு தங்கியிருக்கிறார் முதலிய கேள்விகளை அந்தக் காவலர் அல்லது காவல் துறை அதிகாரி கேட்பார். ஆனால், இந்த வழக்கைப் பொறுத்தவரையில், ரமேஷ் அ.த.சா. 1-ன் காவலில் இருந்ததாலும், காவல் நிலையத்திற்குச் செல்லும் வழியில் ரமேஷ் தப்பிச்சென்று விடுவார் என்று அ.த.சா. 1 அல்லது அ.த.சா. 2 ஆகிய இருவரில் எவருமே எண்ணாததாலும் ரமேஷை ஜீப்பில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முன்னர், லஸ் கார்னரில் இருந்தபோது, அவரின் பெயர் மற்றும் முகவரி ஆகிய எதையுமே அவரிடமிருந்து கேட்டறிந்து உறுதிப்படுத்தவில்லை என்பதில் வழக்கத்திற்கு மாறானது எதுவும் இல்லை. மாண அடைந்தவரின் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட மற்றொரு சூழ்நிலை யாதெனில், போக்கு வரத்துக் காவல் துறை அலுவலகம் செயல்பட்டு வரும் பகுதி உட்பட காவல்நிலையத்தின்

வளாகம் முழுவதிலும் உள்ள மின் விளக்குகள் எதுவுமே எரியாமல் இருட்டாக இருந்தது. காவல் நிலையத்தில் ரமேஷை சித்திரவதை செய்து கொலை செய்வது வெளியில் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே மயிலாப்பூர் காவல் நிலையக் காவலர்களால் இவ்வாறு செய்யப்பட்டது என்பதாகும். 12-4-1997 அன்று இரவு 9.00 மணிக்கு மின் விளக்குகள் எரியாததால், காவல் நிலைய வளாகம் இருட்டாக இருந்தது என்பதை அ.த.சா. 1, 3 மற்றும் 4 ஆகியோரின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. மயிலாப்பூர் காவல் நிலையத்தில் மின் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்ற புகார் 12-4-1997ஆம் நாளன்று இரவு 1.35 மணிக்கு வந்தது என்றும், இத்துடன் மற்றவெளிப் பகுதியில் சில இடங்களிலும் மின் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்ற புகார் தன்னால் பெறப்பட்டது என்றும் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கும் ஏனைய இடங்களுக்கும் மின் இணைப்பைக் கொடுத்தேன் என்றும் அ.த.சா. 15 ஆன தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கம்பியாள் கூறுகிறார். அவர் கூற்றுக்கிணக்க, மயிலாப்பூர் காவல் நிலையத்திலிருந்த மின் பெட்டியின் மின் இணைப்பிலிருந்த (Cutout Carrie.s) கம்பி உருகி விட்டிருந்ததால், மின் இணைப்பு இல்லை என்றும், அதனால் மின விளக்குகள் எரியவில்லை என்றும், அவர் உருகி விட்டிருந்த (Cutout Carriers) கம்பியை அகற்றி விட்டு முதன்மைக் கம்பி இணைப்பில் நேரடியாக இணைத்ததன் மூலம் மின் இணைப்பு கொடுத்தார் என்றும் தெரிவிக்கிறார். மின் தடங்கல் ஏற்பட்டது குறித்து அ.த.சா. 15-க்கு முன்னரே தெரிவிக்காமல் இரவு 1.35 மணிக்குத்தான் தெரிவிக்கப்பட்டது என்ற வினாவிற்குக் காவல் துறையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட விளக்கம் யாதெனில், மின் தடங்கல் இரவில் ஏற்பட்டது என்றும், அப்போது அதிக அளவில் பணி இல்லை என்றும் கட்அவுட் கேரியரில் பழுது ஏர்பட்டுள்ளது என்பது மிகப்பெரிய பழுது என்றும் மீண்டும் மின் இணைப்பு வருவதற்கு அவர்களால் உடனடியாக ஒன்றும் செய்ய இயலாது என்றும் தெரிவித்தனர் என்பதையாகும் எப்படி இருப்பினும், அந்தச் சூழ்நிலையை அதாவது, இரவு 9.00 மணிக்கு மின் விளக்குகள் எரியாமல் இருந்ததை காவலர்களுக்கு எதிராக அவர்களின் நடத்தையைச் சந்தேகிக்கும் வகையில் எடுத்துக் கொள்ள இயலாது. உண்மையில் மின் தடங்கல் ஏந்த நேரத்தில் ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

25. நியூ ரோடு நியூஸ் மார்ட்டில் சுமார் இரவு 8.30 மணிக்கு அ.த.சா. 1 உடன் சண்டை போட்ட ரமேஷ் இரவு 8.45 மணிக்கு காவல் துறையின் ஜீப்பில் அனுப்பி வைக்கப் பட்டார் என்றும், செல்லும் வழியில் இராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரில் ரமேஷ் தப்பியோடி விட்டார் என்றும், அ.த.சா. 1, 2 மற்றும் 4 ஆகியோர் உறுதியான சாட்சியம் அளித்தனர். காவல்வாயின் குறிப்பிட்ட ஒரிடத்தில் ஒருவர் விழுந்துவிட்டார் என்று இரவு சுமார் 9.00 மணிக்கு காவல்வாயின் கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் உள்ள மக்கள் அபயக் குரலெழுப்பினர் என்றும், அ.த.சா. 7, 10, 11 ஆகியோர் சொல்லித்தனர். வழியில் கொண்டு செல்லும்போது, ரமேஷ், தப்பியோடிவிட்டார் என்பதை அ.த.சா. 1 மற்றும் 3 ஆகியோர் லஸ் கார்னருக்குத் திரும்பிவந்து அ.தா. சா. 4 இடம் தெரிவித்தனர். அதன் பின்னர் அனைவரும், அவர்களின் பணி முடிந்த பின்னர், லஸ் கார்னரிலிருந்து இரவு 9.00 மணிக்கு காவல் நிலையத்திற்குச் சென்றனர் என்றும், அவர்கள் தெரிவித்தனர். இ.த.சா. 1 தெரிவித்தது யாதெனில், போக்குவரத்துக் காவலர்கள், ரமேஷை காவலில் வைத்திருப்பதாக இரவு 9.00 மணிக்குத் தகவல் பெற்று அவர் இரவு 9.10 மணிக்கு லஸ் கார்னருக்குச் சென்றதாகவும் அங்கு யாருமே இல்லை என்றும், அதன் பின்னர், காவல் நிலையத்திற்குச் சென்று ரமேஷ் பற்றி அ.த.சா. 4 இடம் விசாரித்ததாகவும் தெரிவித்தார். வழியில் ரமேஷ் தப்பியோடிய பின்னர் அ.த.சா. 1 மற்றும் 3 ஆகியோர் லஸ் கார்னருக்குத் திரும்பி வந்து, இரவு 9.00 மணி வரையில் லஸ் கார்னரில் இருந்த அ.த.சா. 4 உடன் இருந்தனர் எனறு சாட்சியமளித்தனர். ரமேஷ் காவல்வாயில் விழுந்த மூழ்கிவிட்ட நேரமும் இரவு சுமார் 9.00 மணி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரமேஷ், காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டு சித்திரவதை செய்து சாகடிக்கப்பட்டிருக்கலாம் என்பது ஊகிக்க இயலாத ஒன்றாகும். மேலும், காவல் நிலையத்தில் இ.த.சா. 1, அ.த.சா. 4ஐ சந்தித்த உடனே அ.த.சா. 1, 3, 4 ஆகிய அனைவரும் அவரவர்களின் வீடுகளுக்குச் சென்று விட்டதாக அ.த.சா. 1, 3, 4 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். இச்சூழ்நிலையில் அ.த.சா. 4 தெரிவித்தது நவராக இருக்கும் என்று சொல்ல இயலாது. ரமேஷ், வழியில் கொண்டு செல்லும்போது ஏற்கெனவே தப்பியோடி விட்டார் என்று அவர், இ.த.சா. 1 இடம் சொல்லியிருந்தால், அவர், அவருடைய வீட்டிற்குத் திரும்பியிருப்பார். ஏற்கெனவே தெரிவித்தவாறு, ரமேஷ் காவல் நிலையத்தில் வைத்து அவரை சித்திரவதை செய்ததற்கும் சாத்தியம் இல்லை என்பதை அ.த.சா. 19 மற்றும் 25 ஆகியோர் அளித்த மறுத்துக் கூற முடியாத சாட்சியம் தெளிவாகக் காட்டுகிறது.

ஆய்வு பரம்பு (V) மற்றும் (VI) :

13-4-1997 அன்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள்.

26. முந்தைய நாள் இரவு, காவல்வாயில் மூழ்கி ரமேஷ் மாண்டடைந்த பின்னர், அடுத்த நாள் காலையில் அதாவது 13-4-1997 அன்று என்ன நடந்தது? அதனால் ஏர்பட்ட சேவல் விளைவு என்ன? அக்ஷையர், இந்த ஆணையத்திற்கு அளிக்கப்பட்ட அறிவுரைப்படி இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் அவை பரிசீலனை செய்யப்படுவதற்குத் தொடர்புடையனவாகும். காவல் நிலையத்தில், அ.த.சா. 4ஐச் சந்தித்து ரமேஷ் பற்றி கேட்டறிந்த ரமேஷின் தந்தையான இ.த.சா. 1 12-4-1997 அன்று இரவு எப்படியும் ரமேஷ் வீடு திரும்பி விடுவார் என்று நம்பியிருந்தவர், ரமேஷ் வீடு திரும்பாததால் கவலையடைந்தார். அவர் 13-4-1997 அன்று காலையிலிருந்து ரமேஷ் பற்றி விசாரிக்கத் தொடங்கினார். அவர், கௌதரியா என்ற பூக்காரியை விசாரித்ததாகவும், முந்தையநாள் இரவு காவல்வில் விழுந்த

ஒருவர் மரணம் அடைந்தது பற்றியும், தியணைப்புப் படையினர் வந்து அந்தச் சடலத்தை வெளியே எடுத்தது பற்றியும் அவர் குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது. அந்தச் சடலம், அவரின் மகன் ரமேஷாக இருக்குமோ என்று இ.த.சா. ... சந்தேகப்பட்டார். அவரின் சந்தேகம் புகைப்படத்துடன், 13-4-1997 அன்று காலையில் வெளிவந்த ''மயிலாப்பூர் கூவத்தில் விழுந்தவர் சாவு'' என்ற தலைப்பின் கீழ் ரமேஷின் அரையளவு பார்த்தவுடனேயே தெளிவாயிற்று. க.பொ. 3 ஆவ வெளிமீட்டப்பட்ட புகைப்படம், அ.த.சா. 41 கேட்டுக் கொண்டதன் பேரில் அ.த.சா. 12 ஆல் எடுக்கப்பட்டதாகும். இ.த.சா. 1 அதிர்ச்சியும் துயரமும் அடைவது இயற்கையே. முற்பகல் நான் இரவு ... லஸ் கார்னரிலிருந்து கவலர்களால் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், ரமேஷ் காவல் நிலையத்திற்கு சாதகப்படுத்து, அவரின் சடலத்தை கால்வாயில் வீசி எறிந்து விட்டனர் என்று என்னிடம் சந்தேகப்பட்டார். இ.த.சா. 1 கூட்டத்துடன் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு உடனடியாகச் சென்று, தமது மகனான ரமேஷ் காவல் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார் என்றும், ரமேஷின் மரணத்திற்குக் காவலர்களைதான் பொறுப்பு என்றும் சத்தம் போட்டனர். அதே நேரத்தில் சோடா பாட்டில், கம்புகள், கற்கள் ஆகிய ஆயுதங்களுடன் கூடிய வலுவான கும்பல் 100 பேர் கொண்ட கூட்டம் ''திடீரென'' அலுவலகத்திற்குள் நுழைந்து ரமேஷ் பற்றி வெளியிடப்பட்ட செய்தியின் உண்மைத் தன்மை குறித்து கேள்வி எழுப்பியும், அது தந்தெல்லாக காவல்காரர்களை மூழ்கி எற்பட்ட மரணம் அல்ல எனத் தெரிவித்தும், அந்த அலுவலகத்தில் காக்குதல் நடத்தினர். அந்த அலுவலகத்திலிருந்த காவலாளிகள், சுடலை, கொம்பையா, மற்றும், அ.த.சா. 13, 18, 21 ஆகியோரும் எனைய 8 பேர்களும், அவர்களை வெறித்தனமான தாக்குதல்களால் சாயமடைந்தனர். மேலும், அந்த கூட்டத்தினர், தினகரன் அலுவலகக் கட்டிடத்திற்கும், அலுவலக வேனுக்கும் தீ வைத்தனர். ஆ.த.சா. 21இன் தலையில் ஏற்பட்ட கடுமையான காயத்திற்காக, அவர் தனியார் மருத்துவமனையில், பல நாட்கள் அக நோயாளியாக இருந்து சிகிச்சை பெற வேண்டியதாயிற்று.

(கா.பொ. 44 இன் தொடர் வரிசைகள்).

அதிக எண்ணிக்கையிலிருந்த கும்பல் பின்னர் நான்கு சாலைகள் சந்திக்குமிடமான லஸ் கார்னர் வரை நோக்கித் திரும்பி போக்குவரத்தைத் தடுத்து, அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து செயலற்றுப் போகும்படி செய்யத் தொடங்கியது. அ.சா. 13, 18, 21 ஆகியோரின் சாட்சியம், தினகரன் செய்திதாள் கட்டிட வளாகத்தில் காலை 7.00 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையே வன்முறைச் சம்பவம் நடந்தது என்பதற்குத் தெளிவான ஆதாரமாகும்.

27. காலை 7 மணிக்கும் 7-30 மணிக்கும் இடையே தினகரன் செய்தித்தாள் அலுவலகத்தையும் அதன் பணியாளர்களையும் குறி வைத்துத் தாக்கிய சுமார் 100 பேர் அடங்கிய கும்பல் காலை சுமார் 7-50 மணிக்கு லஸ் கார்னரை நோக்கிச் சென்று லஸ் கார்னரில் மட்டுமின்றி, அதனை அடுத்துள்ள பகுதியிலும், காலை 7-50 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையே வன்முறைச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டது என்பதை சாட்சியம் காட்டுகிறது. சுமார் 100 பேர் இருந்த கும்பல் லஸ் கார்னரில் 500 பேராகப் பெருகியது என்றும், காவல் துறையினர், அவர்களைக் கலைந்து போகச் செய்ய கடுமையாகப் போராட வேண்டியிருந்தது என்றும் சாட்சியம் குறிப்பிடுகிறது. சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. என். பி. ராமஜெயம் (அ. சா. 42), திருவாளர்கள் கோதண்டராமன், காவல்துறை உதவி ஆணையாளர் (அ. சா. 43), கிருஷ்ணமூர்த்தி, காவல்துறை ஆய்வாளர் (அ. சா. 44), வெங்டாச்சலம், காவல்துறை உதவி ஆய்வாளர் (அ. சா. 26), பழனிச்சாமி, காவல்துறை ஆய்வாளர் (அ. சா. 37), செல்வராஜ், காவல்துறை ஆய்வாளர் (அ. சா. 38), வி. கே. ராஜகோபாலன், காவல்துறை ஆணையாளர், (அ. சா. 45) ஆயுத சேமக்காவல் படையைச் சேர்ந்த காவலர்கள் (அ. சா. 29 முதல் 36 வரை), இராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள பிக்விக் பிளாசா வரவேற்பாளர் (அ. சா. 23), லஸ் சர்ச் சாலையிலுள்ள சௌமியா பேக்கரியின் உரிமையாளர் (அ. சா. 24), திரு. கன்னியப்பன் ஒட்டுநர், 5 டி வழித்தடம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து (அ. சா. 26), திரு. பி. வைதீஸ்வரன், நடத்துநர், வழித்தடம் என் 12 எல் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து (அ. சா. 27) ஆகியோரின் சாட்சியம் இந்த அம்சத்தில் பரிசீலிப்பதற்குப் பொருத்தமானதாக இருக்கும். மிகப்பெரிய போராட்டக் கும்பல் ஒன்று லஸ் கார்னரில் அனைத்துச் சாலைகளிலும் போக்குவரத்தைத் தடை செய்து, பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துகிறது என்ற தகவல் வரப்பெற்றதன் பேரில் அ. சா. 43, 44, 28, 37, 38 ஆகியோர் அ. சா. 45-ன் உத்தரவின் பேரில், காலை சுமார் 8 மணியிலிருந்து சம்பவம் நடந்த இடத்தில் அதாவது லஸ் கார்னரில் இருந்தனர்.

28. வன்முறையில் ஈடுபடமல் அமைதியாகக் கலைந்து செல்லும்படி காவல்துறை அதிகாரிகள் கும்பலிடம் கூறிய அறிவுரை வீணாயிற்று என்பதைச் சாட்சியம் காட்டுகிறது. சம்பவம் நடந்த இடத்திற்குக் காலை 9-00 மணிக்கு வந்த மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. என். பி. ராமஜெயம் அதேபோன்று அறிவுரையைக் கும்பலிடம் கூறினார். சென்னை மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார் என்றும், காவல் நிலை ஆணை எண் 145-ன் கீழ் விசாரணை செய்ய உத்தரவிடுவார் என்றும், அந்தப் பகுதியில் வன்முறை தேவையில்லை என்றும் அவர் அளித்த உறுதிமொழி, கும்பலைச் சமாதானப்படுத்த வில்லை. காவல்துறை அதிகாரிகளின் அறிவுரையையும், எச்சரிக்கைகளையும் புறக்கணித்த கும்பல், காவல்துறையினரையும், அந்தப் பகுதியிலுள்ள கடைகளின் ஞ்சுப்பரப் பலகைகளையும் நோக்கிக் கற்களையும், சோடா பட்டில்களையும் வீசியது. அதனால், சண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏற்றி வந்த டெல்டா வேன் 29 காவல்துறை இணை ஆணையாளரின் (தெற்கு) அம்பாசிடர் கார் ஆகியவை சேதமடைந்தன. மேலும், மேன்மேலும் வன்முறையில் நாட்டங் கொண்ட கும்பல், மயிலாப்பூர் காவல் நிலையத்தையும், காவலர்களையும் தாக்குகின்ற நோக்கத்துடன் மயிலாப்பூர் காவல் நிலையத்தை நோக்கி முன்னேற முயற்சித்ததாகச் சொல்லப்படுகிறது.

கும்பல் சுமார் 500 பேராகப் பெருகி, கற்களையும், சோடாபுட்டிகளையும் எறிந்தும், காவலர்கள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட வேண்டும் என்று கோஷமிட்டும் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதாலும், காவல்துறை அதிகாரிகள் மீண்டும் மீண்டும் விடுத்த எச்சரிக்கை பயனற்றுப் போனதாலும், லஸ் கார்னரில் கும்பலைக் கலைக்க நான்கு கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் காமதேனு திரையரங்கிற்கு எதிரேயுள்ள மாதவராவ் கார்டன் தெரு தொடங்குமிடத்தில் ஆறு கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த லஸ் கார்னர் பகுதியிலும், மாதவராவ் கார்டன் தெரு தொடங்குமிடத்திலும் நடந்த சம்பவங்களைக் கண்காணித்த அ. சா. 45-ன் இடது உள்ளங்கையின் வெளிப் புறத்தில் கல் வீச்சினால் காயமேற்பட்டது. கும்பல் கற்கள், சோடாபுட்டி ஆகியவற்றை வீசியதால், அ. சா. 38, 28, 31, 29, 34, 30, 33, 32, 37 ஆகியோரும், பணியிலிருந்த திருவளர்கள் பி. தமிழ்க் குமரன், அஜய் குமார், எட்வின், குப்புசாமி, சத்தியநாதன், பி. வெங்கடேசன், கார்த்திகேயன், மணி, வேலு, ஆகிய எனைய பிற காவலர்களும் காயமடைந்தனர். அ. சா. 38-க்கு அவருடைய இடது கை சுட்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. கும்பலின் ஒரு பகுதியினர் ஸ்ரீராமகிருஷ்ணா மடத்துச் சாலையிலுள்ள பிள்ளாசா ஒட்டலைத் தாக்கி 1,07,500 ரூபாய் (சா. ஆ. P 48) பெறுமானமுள்ள பொருட்களுக்குச் சேதமேற்படுத்தினர். லஸ் சர்ச் சாலையிலுள்ள அ. சா. 24-க்குச் சொந்தமான சௌமியா பேக்கரியின் பெயர்ப் பலகையையும் தாக்கி, 7,900 ரூபாய் (சா. ஆ. P 51) மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதமேற்படுத்தினர், மேலும் கும்பல், லஸ் கார்னர் பகுதியிலுள்ள கடைகளின் பெயர்ப் பலகைகள், சோடியம் வேப்பர் விளக்குகள், போக்குவரத்து நிழற்குடை ஆகியவற்றையும் தாக்கி சேதப்படுத்தியது. ஸ்ரீராமகிருஷ்ணா மடத்துச் சாலையிலுள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளையும், கடைகளின் கதவுகளையும் தாக்கிச் சேதப்படுத்தியதுடன், ஸ்ரீராமகிருஷ்ணா மடத்துச் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 D 12N ஆம் வழித்தட எண்களுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் தாக்கிச் சேதப்படுத்தியது. வன்முறைச் செயலின்போது கும்பலின் கல் வீச்சினால் காவல்துறை அதிகாரிகள் ஆயுத சேமக் காவல் படையைச் சேர்ந்த காவலர்கள் மட்டுமன்றி, பொது மக்களில் சிலருக்கும் தலையில் காயம் ஏற்பட்டது.

29. நடைபெற்ற வன்முறைச் செயலின் தன்மை, வன்முறையைக் கட்டுப்படுத்த காவல் துறை அதிகாரிகளால் எவ்வாறு முடிந்தது ஆகியவை குறித்து முடிவுக்கு வர, லஸ் கார்னர் பகுதியில் காவற்பணியில் இருந்த அ. சா. 45 மற்றும் எனைய காவல்துறை அதிகாரிகள் அளித்த சாட்சியம் போதுமானதாக இருக்கும். அவர்களுடைய சாட்சியத்தை இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அ. சா. 45, காலை 7-50 மணியிலிருந்து நிலைமையைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். காவல்துறை அதிகாரிகளுக்குத் தகுந்த உத்தரவுகளும், அறிவுரைகளும் அளிப்பதற்காக, அவர், சம்பவம் நடந்த இடத்தில் இருந்தார். கும்பல் நகரவும், கலையவும் மறுத்து, வன்முறையில் ஈடுபட்டபோது, கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது மட்டுமே, அவ்வாறு கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. கும்பல் கலைந்து செல்லாதபோது, சில வீடுகள் வரையில் வெவ்வேறு திசைகளில் ஓடி, கல் வீச்சில் ஈடுபட்ட கும்பலை நோக்கி, காவல்துறையினர் முன்னேற வேண்டியிருந்தது. அத்தகைய பதட்டமான தருணங்களில்கூட காவல்துறையினர் எவரும் தடியடிப் பிரயோகம் செய்யவில்லை என்பதும், பதட்டம் நிலவிய பகுதிகளில் காவலர்களை நிறுத்துவதன் மூலமும், சோந்தப்பணி மேற்கொள்வதன் மூலமும், அந்தப் பகுதியில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வர குறைந்த அளவு நடவடிக்கை மட்டுமே எடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது. அவ்வாறு செய்யவில்லை எனில், அந்தக் சமயத்தில் காவல்துறையினர் செய்த கால தாமதத்திற்காகவும், பொறுமை காட்டியதற்காகவும் காவல் துறையினரைக் குறை கூறியிருக்க வேண்டும். கும்பலின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கும் வரையில் அவர்கள் காத்திருக்கக் கூடாது. காலை சுமார் 7-30 மணிக்கு தினகரன் செய்தித்தாள் அலுவலகத்தையும் அதன் பணியாளர்களையும் கும்பல் தாக்குவதில் ஈடுபட்டபோது, அதில் சுமார் 100 பேர் மட்டுமே இருந்தனர். அவர்கள், லஸ் கார்னர் நோக்கி முன்னேறியதாகச் சொல்லப்பட்டுள்ளது. ரமேஷின் தந்தையான, இறந்தவர் தரப்பு சாட்சி எண் 1 கும்பல் ஒன்றுடன் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் அவருடைய ஆத்திரத்தை வெளிப்படுத்தியபோது, அதாவது காலை சுமார் 6-30 மணிக்கே பூசல் தொடங்கியதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த காவல்துறையினர் விவேகத்து-னும், விழிப்புடனும், கண்காணிப்புடனும் இருந்திருக்க வேண்டும். இதை கடுமையானதாகக் கருத்திற் கொண்டு, மேலும் பெரிதாகக் கூடிய எந்தவொரு எதிர்பாராச் சம்பவமும் நிகழாமல் தவிர்க்க மேற்கொண்டும் எடுக்க வேண்டிய நடவடிக்கையைத் திட்டமிட்டிருக்க வேண்டும். கும்பல், லஸ் கார்னரைக் கடந்து செல்ல அதிக நேரம் அளிக்காமல், காவல்துறையினர் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால், பொது மக்களுக்கும், அந்தப் பகுதியில் இருந்த தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதமும் காவல்துறைப் பணியாளர்களுக்கு ஏற்பட்ட காயமும் குறைந்த அளவு இருந்திருக்கக் கூடும். இங்கு, காவல்துறையினர் கும்பலுக்குச் செய்த அறிவுரையும், எச்சரிக்கையும், காலை 8 மணியிலிருந்து சுமார் இரண்டரை மணி நேரம் நீடித்ததாகச் சொல்லப்படுகிறது. கும்பலைக் கலைக்க, காலை சுமார் 10-45 மணிக்குத்தான் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், அந்தச் சூழ்நிலையில் காவல்துறையினரின் நடவடிக்கை நியாயமானது என்றும், அந்த இடத்தில் காவல்துறையினர் தங்கள் பணிகளை ஆற்றுவதில் அத்து மீறல் எதுவுமில்லை என்றும் நான் அறிகிறேன்.

ஆய்வுவரம்பு (VII) ஆணையத்தின் கருத்துரைகள்.

30. 13-4-1997 ஆம் நாளன்று காலை, தினகரன் செய்தித்தாள் அலுவலகத்திலும், லஸ் கார்னர் பகுதியிலும் நடைபெற்ற சம்பவம் கண்டு, இந்நாட்டிலுள்ள அமைதியை விரும்பும் ஒவ்வொரு குடிமகனும் வருத்தம் அடைவர் என்பதில் ஐயம் ஏதுமில்லை. காலை சுமார்

7 மணிக்கு கற்கள், சோடாபுட்டிகள், கம்புகள் ஆகியவற்றை எந்திய பெருங்கும்பல் ஒன்று, அங்கு கூடி, வன்முறைச் செயல்களில் ஈடுபட்டது. அதனால், மக்களின் உயிருக்கு ஆபத்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதமும் ஏற்பட்டன. அவர்கள், காலை 8 மணியிலிருந்து சுமார் 4 மணி நேரத்திற்கு பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்ற வகையில் போக்குவரத்து ஏற்பாட்டையும் செயலற்றுப் போகும்படி செய்துள்ளனர். ஏற கெனவே, தெரிவித்தவாறு, லஸ் கார்னர், தான்ஞ முக்கியச் சாலைகள் சந்திக்கின்ற இடமாகும். அது முக்கியமானதும் நெரிசல் மிக்கதுமான இடமாகும். பொதுமக்கள் அந்த வழியே செல்வதைத் தடுத்திட வேண்டி இந்தப் பகுதியைத் தாக்குவதற்குரிய இலக்காகக் கும்பல் தேர்ந்தெடுத்து, ஏதுமறியாத பொது மக்களுக்கு அசௌகரியத்தையும், இன்னலையும் ஏற் படுத்தியது. சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, தங்களுக்குப் பரிகாரம் வேண்டி முரட்டுத் தனமான நடவடிக்கைகளில் ஈடுபட எவரொருவரையும் சட்டம் அனுமதிப்பதில்லை. இ. த. சா. 1, அவருடைய மகனாகிய ரமேஷின் மரணம் குறித்து, ஐயம் கொண்டு, ரமேஷ், காவல் துறையினரின் காவலில் இருந்த போது, காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்று கருதினாலுங்கூட, சட்டத்தால் வரையறுக்கப்பட்ட உரிய நடைமுறையைத்தான் அவர் பின்பற்றியிருக்க வேண்டும். அ.சா.42, மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆவார். அவர், இ. த. சா. 1 அளித்த புகாரின் மீது தேவையான நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் லஸ் முனைக்கு வருவார் என்று இ. த. சா. 1-க்கு உறுதியளித்தார். ஆனால், அதனை இ. த. சா. 1-ம் மற்றும் கூட்டத்தினரும் ஏற்றுக்கொள்ள வில்லை. மயிலாப்பூர் காவல் நிலையத்தில் குற்றவியல் நடைமுறை விதிகோவை சட்டத்தின் 174 ஆம் பிரிவின் கீழ் வழக்கு ஒன்று ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, சென்னை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (பொது) கூடுதல் மாவட்ட மாஜிஸ்டிரேட்டின் விசாரணைக்கு விடப்பட்டது. இ. த. சா. 1-ம் எனையோரும் காவல் துறையினரையும் அரசு போக்குவரத்து வண்டிகளையும் பொதுச் சொத்துக்களையும் தாக்கி, நிருவாக அமைப்பையே நிலை குலையச் செய்வதை ஒரு நிவாரண நடவடிக்கையாக எண்ணினர். இது முற்றிலும் தவறாகும். இத்தகைய குழ்நிலையைத் தொடர்ந்து அனுமதித்தால் நமது ஜனநாயகமே அழிந்து போகும். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்திருப்பின், அதுவே பொருத்தமான நடவடிக்கையாக இருந்திருக்கும். வன்முறையில் ஈடுபடுவதும், பொது மக்களின் உயிருக்கு ஆபத்தும் உடைமைகளுக்குச் சேதமும் விளைவிப்பதும் ஒருவரது புகாருக்கு அல்லது குறைபாட்டிற்கு உரிய நிவாரணம் ஆகாது என்பது குறித்து விரிப்புரைச்சியற்ற மக்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்றும், செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக அவர்கள் அவற்றை உணரும்படி செய்விக்க வேண்டுமென்றும், அவ்வாறு செய்யாது போனால், அது நாட்டிற்கும், நாட்டில் குடிமகன் என்று கொல்லக் கொள்வதற்கும் நன்மை பயப்பதாக அமையாது என்பதும் என் கருத்து ஆகும். சமூக நல அமைப்புகளும், இப் பணியை மேற்கொள்ளலாம். சில நேரங்களில் சமூக விரோதிகள், விஷமிகள் பிரச்சினைக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத வெளி ஆட்கள் ஆகியோர், பிரச்சினையில் தலையிட்டு நிலைமையை மோசமாக்கும் குழ்நிலைகள் ஏற்படுகின்றன. தற்போதைய நேரில் இ. த. சா. 2 மற்றும் இ. த. சா. 3, இந்திய ஜனநாயக இளைஞர் அமைப்பு என்ற பெயரில் உள்ள ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள் என்பதும், இச்சங்கத்தின் உறுப்பினர்கள், 13—4—1997 அன்று லஸ் முனையில் நடந்த மோசமான சம்பவத்திற்குப் பின்னணியில் இருந்தனர் என்பதும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்ட கருத்தாகும். பக்கத்திலுள்ள குடிசைப் பகுதி மக்களும் இக்கும்பலில் கலந்து கொண்டனர் என்பதும் விசாரணையில் தெரிவிக்கப்பட்ட மற்றொரு கருத்தாகும். இல்லாவிட்டால் சம்பவ இடத்தில் 500 பேர் அடங்கிய கும்பல் இருந்திருக்க முடியாது. கும்பல் ஒன்று வன்முறையில் ஈடுபடும்போது அதுவும் கும்பலிலிருந்தவர்கள் தூண்டிவதாலும், ஊக்கமூட்டுவதாலும், கட்டுப் பாடற்ற கும்பலின் செயலால் பெரும் கலவரமாக அது வெடிக்கிறது. இந்நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் எந்த நேரத்திலும் எவருக்கும் தீங்கிழைக்கக் கூடாது என்பதை உணர வேண்டும்.

திருக்குறளில் சொல்லப்பட்ட கருத்து வருமாறு :—

''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் எனத்தானும்
மாணா செய்யாமை தலை.''

(யாரும் எவருக்கும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தீங்கு செய்ய வேண்டுமென மனதளவில் கூட நினைக்கக் கூடாது.)

31. முடிவுகள் :

முந்தைய பத்திகளில் நான் விவரித்தவற்றில், என் விசாரணையின் பொருள் குறித்த எனது முடிவுகளைப் பதிவு செய்துள்ளேன். ஆயினும், பொதுத் துறையின் (சட்டம்-ஒழுங்கு F) 15—4—1997 ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையின் 3 ஆம் பத்தியில் கண்டுள்ள ஆய்வு வரம்பு குறித்து திட்டவட்டமாக எனது முடிவுகள் பின்வருமாறு :—

31.1. முதல் ஆய்வு வரம்பு :

'' (i) போக்குவரத்து ஆய்வாளர், திரு. கருடபதி, சென்னை-4, மயிலாப்பூர் எண் 94, மாதவராவ் தோட்டத் தெருவில் குடியிருந்த திரு. கபாலீஸ்வரன் மகன் திரு. ரமேஷ் என்பவரைக் கைது செய்வதற்கு வழி வகுத்த தகவல்கள் மற்றும் குழ்நிலைகள் பற்றியும் 8453 ஆம் எண் ஜீப்பில் காவலர் (நிலை 1)

திரு. வேலாயுதத்துடன் மேற்படி திரு. ரமேஷ், மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, ரமேஷ் தப்பிச் சென்ற குழ்நிலைகள் பற்றியும், அவரை மீண்டும் கைது செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விசாரணை செய்தல். ''

12—4—1997 அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு திரு. கபாலீஸ்வரன் மகன் ரமேஷ், சாலையில் மோட்டார் வண்டிகள் கடந்து செல்ல பச்சை ஒளிக்குறி இருந்தபோது இராமகிருஷ்ணா மடத்து சாலையின் ஒரு பகுதியைக் கடந்து செல்ல முயன்றார். அல்லது கடந்து சென்றார் என்பதும், காவலர் (நிலை 1) திரு. ஜி. வேலாயுதம் அதனை ஆட்சேபித்தார் என்பதும், அச் சமயத்தில் இருவருக்குமிடையே வாய்த் தகராறு ஏற்பட்டது என்பதும், ரமேஷ் முறையற்ற வகையில் நடந்து கொண்டார் என்பதையும், சாட்சியும், சூழ்நிலை, கிடைத்த ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நான் அறிகிறேன். சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் ரமேஷ் மீது வழக்குப் பதிவு செய்ய மயிலாப்பூர் காவல் நிலைய சட்டம்-ஒழுங்குப் பிரிவிடம் ஒப்படைப்பதற்காக, மயிலாப்பூர் காவல் நிலையப் போக்குவரத்துப் பிரிவு ஆய்வாளர், திரு. ஆர். கருடபதியின் உத்தரவின் பேரில் (அ. சா. 4) மயிலாப்பூர் காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவு காவலர் (நிலை 1) (அ. சா. 1) திரு ஜி. வேலாயுதம், காவலில் வைப்பதற்காக ரமேஷை அழைத்துச் சென்றார் என்றும். TSP 8453 ஆம் எண் காவல் துறை ஜீப்பில் ரமேஷை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போது, கச்சேரி சாலையில் இராஜா திருமண மண்டபத்திற்கு அருகில் மேற்படி ரமேஷ் தப்பித்துச் சென்றார் என்றும் நான் அறிகிறேன். ரமேஷ், கைது செய்யப்படவில்லை என்றும், ஆனால், வெறுமனே காவலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும், எனவே, ரமேஷை மீண்டும் கைது செய்யும் பிரச்சினை எதுவும் இல்லை என்றும் நான் முடிவு செய்துள்ளேன்.

31.2. இரண்டு, மூன்று, நான்காம் ஆய்வு வரம்புகள்.

(ii) மர்மமான முறையில் திரு. ரமேஷ் இறந்ததற்கு வழி வகுத்த தகவல்கள், குழ்நிலைகள் பற்றி விசாரித்தல் ;

(iii) மேற்படி திரு. ரமேஷ், காவல் துறையின் காவலில் இருந்தபோது அடித்துக் கொல்லப்பட்டு, அவரது சடலம் பக்கிங்காம் கால்வாயில் வீசி எறியப்பட்டது உண்மை தானா என்பது பற்றி விசாரித்து அறிக்கை அளித்தல் ;

(iv) திரு. ரமேஷிடம் நடந்து கொண்ட முறையில் காவல் துறையினரின் அத்துமீறல் ஏதும் இருந்ததா என்பது பற்றி விசாரித்து, அவ்வாறு அத்துமீறி நடந்து கொண்டிருந்தால் அதற்குக் காரணமான காவல் துறையினரை அடையாளம் காட்டி, இதற்குக் காரணமான காவல் துறைப் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கருத்துத் தெரிவித்தல்.

மேற்படி ரமேஷ், மர்மமான முறையில் இறந்து போனாரா என்ற பிரச்சினையைக் கருதிப் பார்க்கையில், ரமேஷ், அ. சா. 1-ன் காவலிலிருந்து தப்பிக்கும் அவரது முயற்சியில் கால்வாயில் தானே விழுந்து முழ்கினாரா அல்லது ரமேஷ், காவல் துறையின் காவலில் வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டு அவருடைய சடலம் கால்வாயில் வீசி எறியப்பட்டதா என்பது பரிசீலனை செய்ய வேண்டிய கருத்துக்களாகும். இக் கருத்துக்கள் குறித்து, நான் 12 முதல் 15 வரையிலான பத்திகளில் விரிவாக விவரித்துள்ளேன். ஜீப்பில் கொண்டு செல்லப்பட்டபோது அ. சா. 1-ன் காவலிலிருந்து தப்பித்த ரமேஷ் கால்வாய் மற்றும் பெருநகர் போக்குவரத்துத் திட்ட (ஐயில்வே) பாலத்திற்கு மேற்கில் உள்ள கல்லிராயன் தெரு வழியே ஓடி, இரவு 8-45 9-00மணி அளவில் கால்வாயைக் கடந்து செல்ல முயற்சி செய்து பாதுகாப்பு வேண்டி கால்வாயின் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள குடிசைப் பகுதியை அடைந்து கால்வாயில் இறங்கியபோது, அவர் முழுமையாக முழ்கி இறந்து விட்டார் என்பதற்கும், கால்வாயில் சுமார் 10 அடி ஆழத்திற்கு கழிவு நீர் மழை நீர், சேறு, சகதி நிறைந்திருந்தது என்பதற்கும், இரவு சுமார் 11-30 மணிக்கு அ. சா. 9 மற்றும் ஏனைய தீயணைப்புப் பணியாளர்கள் அவருடைய சடலத்தை மீட்டனர் என்பதற்கும் ஆதாரம் உள்ளது. இதற்குமுன் அப் பகுதியில் கால்வாயில் ஆழம் அதிகம் இருந்ததில்லை என்பதற்கும், அப் பகுதியில் குடியிருப்பவர்கள் எளிதில் கால்வாயைக் கடக்க முடிந்தது என்பதையும் காட்ட, கால்வாயின் கிழக்குப் பக்கத்தில் குடியிருந்த அ. சா. 11-ன் சாட்சியமும் உள்ளது. பெருநகர் போக்குவரத்துத் திட்ட (ஐயில்வே) பாலம் கட்டியதன் விளைவாக, கால்வாயின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கால்வாய்ப் பக்கத்தில் ஐயில்வே பாலத்திற்கு பெரிய கான்கிரீட் தூண்கள் அமைப்பதற்குத் தோண்டப்பட்ட மண், கால்வாயிலேயே படிந்து விட்டது என்பதும், இதனால், அப்பகுதியில் வடிகால்களில் அடைப்பு ஏற்பட்டது என்பதும், பொதுப்பணித் துறை, 1996 ஆகஸ்டு முதல் 1997 மார்ச் வரையிலான இடைப்பட்ட கால அளவில் கால்வாயில் தூர் எடுக்கும் பணியை மேற்கொண்டது என்பதற்கும், இப் பணியினால் கால்வாய் சுமார் 10 அடி ஆழமாயிற்று என்பதும், அ. சா. 14-ன் சாட்சியத்திலிருந்து தெரிகிறது. 1997 மார்ச்சில் தூர் எடுக்கும் பணி முடிவடைந்த பிறகும்கூட கழிவு நீரும், மழை நீரும் கால்வாயில் தங்கு தடையின்றிச் செல்ல அனுமதிக்கப் பட்டது என்றும், இதனால், கழிவு நீர், மேற்பரப்பிலும், தண்ணீர் அதற்குக் கீழேயும் சென்றது என்றும், அ. சா. 14 திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். ரமேஷ், நீரில் முழ்கியதால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்து போனதாகத் தோன்றுகிற கருத்தை, அ. சா. 25-யின் மருத்துவச் சான்று உறுதிப்படுத்துகிறது. இரமேஷின் சடலத்தைச் சவப் பரிசோதனை செய்ததில், தெரிய வந்த அறிகுறிகள் அனைத்தையும் கண்டறிந்த பிறகு, அவர், இவ்வாறு அவரது கருத்தைத் தெரிவித்துள்ளார். குரல் வளை, மூச்சுக் குழலில் இரத்தம் படிந்த நுரை

போனற திரவமும் கரும் பழுப்பு நிறமுள்ள சேற்று மண் துகள்களும், நிரம்பியிருந்ததையும் (இவை, இறந்து போனவர், நீரில் மூழ்கியபோது உயிருடன் இருந்தார் என்பதற்கு, சேற்றுமண் துகள்களுடன் தண்ணீர் உள்ளே சென்றிருந்தது என்பதற்கும் அடையாளங்களாகும்) கண்டார். குடலின் கீழ்ப் பகுதியில் திரவப் பொருள் சிறிது இருந்ததையும் அவர் கண்டார்.

காவல் துறையினரின் காவலில் இருந்தபோது, ரமேஷ் காவல்துறையினரால் அடித்துக் கொல்லப்பட்டாரா என்ற கேள்விக்கு 'இல்லை' என்பதே எனது பதில். 13-4-1997 அன்று ரமேஷின் இறப்பு குறித்து விசாரணை நடத்திய அ.சா. 19-ன் சாட்சியத்தின் பேரிலும், இறந்துபோன ரமேஷின் சடலத்தை சவப் பரிசோதனை செய்த அ.சா. 25-ன் சாட்சியத்தின் அடிப்படையிலுமே, எனது முடிவுகள் அமைந்துள்ளன. ரமேஷின் உடம்பில் காயங்கள் எவையும் இல்லை என்று அ.சா. 19 தனது அறிக்கையில் (சா. ஆ. P 28) தெரிவித்துள்ளார். வலது கண்ணிற்கு சற்று மேலேயும் கீழேயும் காணப்பட்ட இரண்டு சிறு சிராய்ப்புக் காயங்கள் தவிர, உள்காயங்கள் அல்லது வெளிக்காயங்கள் எவையும் இல்லை என்று அ.சா. 25 தெரிவித்துள்ளார். இறந்து போனவரின் உடலின் முக்கிய பாகங்கள் எவற்றிலும் இறக்கும் அளவுக்குக் காயங்கள் எவையும் காணப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். மேலே குறிப்பிடப் பட்டுள்ள சிராய்ப்புக் காயங்களைப் பொறுத்தவரையில் இறந்து போனவர் உடல், கரடுமுரடான இடத்தில் மோதியதன் மூலம் அத்தகைய காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அ.சா.25 கருத்துத் தெரிவித்துள்ளார். நான் பார்வையிட்டபோது, கால்வாய்க் கரையின் பக்கத்திலும், கான்கிரீட் துணின பக்கத்திலும் இங்கும் அங்குமாக கற்கள் கிடந்தன என்பதையும் இறந்து போன ரமேஷ் தப்பித்துச் செல்ல தலைதெறிக்க ஓடியபோது கீழே விழுந்து அத்தகைய காயங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதையும் நான் அறிந்துள்ளேன். ரமேஷ் காவல்துறையினர் காவலில் இருந்தபோது அடித்துக் கொல்லப்படவில்லை என்பதையும், அவரது சடலம் கால்வாயில் தூக்கி எறியப்படவில்லை என்பதையும் ரமேஷ் விஷயத்தில் காவல்துறையினர் அத்துமீறி நடந்து கொள்ளவில்லை என்பதையும் கால்வாயில் மூழ்கியதால், மூச்சுத்திணறல் காரணமாக இறந்து போனார் எனவும் நான் அறிகிறேன்.

ரமேஷ், தப்பித்துச் செல்வதற்குக் காரணமான (1) அ.சா. 1 சட்டை தவறியதற்காகவும், சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் குற்றச்சாட்டிற்குப் பதிலளிக்கத் தக்க வகையில் ரமேஷ் மீது சட்டம்-ஒழுங்கு பிரிவில் புகார் செய்யாததற்கு அ.சா. 1 மற்றும் 4 ஆகிய இருவர் மீதும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று மேலே 11 ஆம் பத்தியில் நான் கருத்துத் தெரிவித்துள்ளேன்.

31.3 ஐந்தாவது-ஆறாவது ஆய்வு வரம்பு :

''(v) பொதுச் சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படும் வகையில் மயிலாப்பூர் பகுதியில் 13—4—1997 அன்று வன்முறைச் சம்பவங்கள் நடப்பதற்கு வழிகோலிய காரணங்கள் மற்றும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் குறித்து விசாரித்தல்.

(vi) வன்முறை சூழ்நிலைக்கு வழி வகுத்தல், காவல் துறையினர் தரப்பில் அத்து மீறல் ஏதும் நடந்துள்ளதா என்பது குறித்து விசாரணை செய்து, அறிக்கை அளித்தல்.''

12—4—1997 அன்று இரவு சுமார் 9-00 மணிக்கு கபாலீஸ்வரனின் (இ.த.சா. 1) மகன் ரமேஷை மயிலாப்பூர் போக்குவரத்துக் காவலர், லஸ் முனையிலிருந்து, மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற விபரம் தெரியவந்த திரு. கபாலீஸ்வரன் காவல் நிலையத்தில் அ.சா. 4-ஐச் சந்தித்தார்; காவல் நிலையத்திற்கு ரமேஷை அழைத்துச் சென்ற போது வழியில் அவர் ஜீப்பிலிருந்து தப்பிச்சென்று விட்டதாகவும் அவர் வீடு திரும்பியிருப்பார் என்றும் அ.சா. 4 அவரிடம் தெரிவித்தார். இ.த.சா. 1 வீடு திரும்பி விட்டார்; ஆனால் அவருடைய மகன் ரமேஷ் வீடு திரும்பாதது குறித்து கவலையுற்றார். அதற்த நாள் காலையில் ரமேஷின் புகைப்படத்துடன் ''மயிலாப்பூர் கூவத்தில் விழுந்தவர் சாவு'' என்ற தலைப்பில் 'தினகரன்' நாளிதழில் வெளியிடப்பட்டிருந்த செய்தியைப் பார்த்தார் இ.த.சா. 1 சந்தேகப் பட்டார். அதாவது, முந்தைய நாள் இரவு காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்ட அவருடைய மகன் ரமேஷ் காவல் துறையினரால் சாகடிக்கப்பட்டு, அவரது உடல் கால்வாயில் வீசி எறியப்பட்டதாக இ.த.சா. 1 சந்தேகப்பட்டார். கூட்டத்துடன் அவர் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குச் சென்று சூழ்நிலையை உருவாக்கினார். காலை 7-00 மணியிலிருந்து 7-30 மணிக்கிடையே சோடா பாட்டில்கள், கற்கள், கம்புகளுடன் அண்ணளூம் பெண்களுமாக சுமார் 100 பேர் அடங்கிய கும்பல், 'தினகரன்' பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கி, அவ்வலுவலகத்திலிருந்த சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியதோடு அ.சா. 13, 18, 21 ஆகியோருக்கும், ஏனைய 7 பணியாளர்களுக்கும் காயம் ஏற்படுத்தியது. அத்துடன் லஸ் முனையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும், காலை 8-00 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்கும் இடைப்பட்ட கால அளவில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. சுமார் 500 பேர் கொண்ட கும்பல் கையில் சோடா பாட்டில்கள், கற்கள், கம்புகளுடன் வந்து போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தியதோடு, போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தது; மேலும் அக்கும்பல் கற்கள் வீசி, அ.சா. 28, 29, 30, 31, 32, 33, 34, 37, 38 ஆகியோருக்கும் சம்பந்தப்பட்ட இடத்தில் பணியிலிருந்த ஏனைய 9 காவல் துறைப் பணியாளர்களுக்கும் காயம் விளைவித்தது. மேற்சொன்னவற்றுடன், சம்பந்தப்பட்ட இடத்தில், காவல் துறையினருக்கு உத்தரவுகளும் ஆணைகளும் பிறப்பித்துக் கொண்டிருந்த சென்னை, காவல்துறை ஆணையாளருக்கு (அ.சா. 45) கல்லெறி சம்பவத்தினால், அவருடைய இடது உள்ளங்கையின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டது. கண்ணீர்ப் புகைக் குண்டுப் படையினரின் டெல்டா வேன் காவல்துறை இணை ஆணையாளரின் (தெற்கு) அம்பாசிடர் கார் ஒட்டல்

பிக்னிக் பிளாசா, சௌமியா பேக்கரி ஆகியவற்றின் முகப்புப் பகுதி, அப் பகுதியிலுள்ள கடைகளின் பெயர்ப் பலகைகள், லஸ் கார்னரிலுள்ள போக்குவரத்து ஒளிக்குறி நிழற்குடை, சோடியம் ஆவி விளக்குகள், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் ஆகியவை வன்முறை கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தன. சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்ட மன்றப்பேரவை உறுப்பினரும் (அ.சா. 42) ஏனைய காவல் துறை அதிகாரிகளும் கூட்டத்தினரை நோக்கி அமைதியாகக் கலைந்து செல்லுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அக்கும்பல் செவிசாய்க்கவில்லை என்பதைச் சாட்சியம் தெளிவுபடுத்துகிறது. காவல் துறையினர் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்தும் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. இச் சூழ்நிலையில் தான் கூட்டத்தினரைக் கலைந்து செல்லச் செய்வதற்காக காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. காலை 8-00 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்குமிடையே அப்பகுதியில் பதட்டமான சூழ்நிலை இருந்தது என்பதையும் நண்பகல் 12 மணிக்குப் பிறகுதான் இயல்பான சூழ்நிலை திரும்பியது என்பதையும் சாட்சியம் தெளிவுபடுத்துகிறது. லஸ் கார்னரிலும் அதையடுத்துள்ள பகுதியிலும் 13-4-1997 அன்று ஏற்பட்ட நிலைமையைச் சமாளிப்பதில் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை நியாய மானதே என்றும், காவல்துறையினர் அவர்களுடைய கடமையை ஆற்றுகையில், அத்து மீறல் எதுவும் ஏற்படவில்லை என்றும் நான் அறிகிறேன்.

31.4. ஏழாவது ஆய்வு வரம்பு :

''(VII) அத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்தல். எந்த ஒரு நபரும் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு நிவாரணம் தேடி வன்முறையில் இறங்க சட்டம் அனுமதிக்கவில்லை. காவலர்களைத் தாக்குவது, போக்குவரத்து வண்டிகளையும், ஏனைய பொது, தனியார் சொத்துக்களையும் தாக்குவது, இயல்பு வாழ்க்கையை நிலைகுலையச் செய்வது ஆகியவை எவராலும் எந்நேரத்திலும் எண்ணிப் பார்க்கக்கூடாத ஒன்றாகும். இத்தகைய நிலை தொடர்ந்து அனுமதிக்கப்படுமேயானால் நம்முடைய மக்களாட்சி இன்னலுக்குள்ளாகும். குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது. அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். விழிப்புடன் இல்லாமலிருக்கும் பொதுமக்களுக்கு செய்தித்தாள்கள், சமூக நல நிறுவனங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் கற்பிக்க வேண்டும். மேலும் மக்களுக்கு ஊறு விளைவித்தலையும் பொதுச் சொத்துக் களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தலையும் எல்லா நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதை அவர்கள் உணரச் செய்தாக வேண்டும்.

31.5. திரு. கபாலீஸ்வரனின் (இ.த.சா.1) மகனான ரமேஷ் அ.சா. 1-ன் காவலிலிருந்து தப்பித்து, கால்வாயைக் கடந்து சென்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சித்தபோது, அவர் இறந்தார். என்று இந்த விசாரணையில் நான் கண்டறிந்துள்ளேன். ரமேஷ் தப்பிச் செல்ல அனுமதிக்கப்படாமல் காவல் நிலையத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப் பட்டிருந்தால் அவர் கால்வாயில் தானே மூழ்கி இறந்திருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. இ.த. சா. 1-க்கு அரசு ரூ. 50,000 கருணைத் தொகை வழங்கியிருப்பதாக இ.த. சா. 1. விசாரணையின் போது என்னிடம் தெரிவித்தார். இறந்து விட்ட ரமேஷ் சுமார் 22 வயது நிரம்பியவர் என்பதையும் அப்போது அவருடைய குடும்பத்தில் அவர் பொருள் ஈட்டும் நபராக இருந்தார் என்பதையும் அந்தக் குடும்பம் வருமானத்தையும் அந்த நபரின் உயிரையும் இழந்து விட்ட நிலையையும் கருதிப் பார்த்து, அரசு தான் பொருத்தமானதென்றும், முறையானதென்றும் கருதுகின்றவாறு மேற்கொண்டும் ஒரு தொகையை அந்தக் குடும்பத்திற்கு வழங்குவது குறித்து தற்போது கருதிப்பார்க்கலாம்.

சென்னை-600 006,
நாள் : 31-3-1998.

(ஒப்பம்)
நீதிபதி எம். மருதமுத்து,
விசாரணை ஆணையம்.

இணைப்பு–1.

சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டது குறித்த ஆணையத்தின் அறிக்கை.

சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடுவது குறித்த ஆணையத்தின் 11-8-1997ஆம் நாளிட்ட 84/MMC/97–1 ஆம் எண் கடிதத்திற்கிணங்க இன்று (22–8–1997) முற்பகல் சுமார் 11.00 மணிக்கு காவல் துறை வழக்குரைஞர் திரு. வி. ஆர். வெங்கடசாமி ஆணையத்தின் வழக்குரைஞர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் ஆகியோர் ஆணையத்தின் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். நாங்கள் அனைவரும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு முற்பகல் 11-30 மணிக்குச் சென்றோம். இறந்துவிட்டவரின் தரப்பு வழக்குரைஞர் திரு. ஏ. எஸையா, ஏற்கெனவே தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டபடி லஸ் முனைக்கு வந்திருந்தார். திரு. கே. பெரியய்யா, மயிலாப்பூர் இ-1. காவல் நிலைய சட்டம்-ஒழுங்கு ஆய்வாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சில காவலர்களுடன் லஸ் முனைக்கு வந்திருந்தனர். ஆணையத்தின் செயலாளர் திரு. எஸ். கலியபெருமாள் ஆணையத்தின் நேர்முக உதவியாளர் திரு. எம். எஸ். சந்திரசேகரன், ஆணையத்தின் பிரிவு அலுவலர் திரு. ஏ. சந்திரசேகரன் ஆகியோரும் வந்திருந்தனர்.

2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவரின் முன்னிலையிலும் முற்பகல் 11.30 மணிக்கு சம்பவம் நடைபெற்ற இடத்தை நான் பார்வையிட்டத் தொடங்கினேன். இந்த லஸ் முனை, நான்கு சாலைகளின் சந்திப்பாகும். அதாவது, வடக்கிலிருந்து ராயப்பேட்டை நெடுஞ்சாலை, கிழக்கிலிருந்து கச்சேரிசாலை, தெற்கிலிருந்து ராமகிருஷ்ணாமடம் சாலை, மேற்கிலிருந்து லஸ் சர்ச் சாலை ஆகிய நான்கு சாலைகளும் சந்திக்குமிடமாகும். சம்பந்தப்பட்ட இடங்கள், அடையாளத்திற்காக நிழற்படம் எடுக்கப்பட்டன. காவல் துறை போக்குவரத்து ஒளிக்குறி இந்த நான்கு சாலைகள் சந்திப்பின் நடுவில் இருக்கிறது. இங்கிருந்து தான் போக்குவரத்துக் காவல் துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றனர். இந்த நான்கு சாலைகளிலும் பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கான பகுதிகளைப் பார்வையிட்டேன். ராமகிருஷ்ணாமடம் சாலையில் உள்ள பாதசாரிகள் சாலையைக் கடக்கும் பகுதி மேற்கு பக்கம் நேரு நியூஸ் மார்ட் கடைக்கும் கிழக்குப் பக்கம் ஜெயராம் சீவல் கார்னர் கடைக்கு மிடையே அமைந்துள்ளது. இதன் நீளம் 58' 9'' ஆகும். இதன் அகலம் 5' 6'' ஆகும். கச்சேரி சாலையில் உள்ள பாதசாரிகள் சாலையைக் கடக்கும் பகுதி, வடக்கே பார் கோடு டேட்டாவுக்கும் தெற்கே ஜெயராம் சீவல் கார்னர் கடைக்கும் இடையே அமைந்துள்ளது. 'சிட்டி ஸ்நாக் பார்' மேற்சொன்ன சீவல் கார்னர் கடைக்குப் பக்கத்தில் உள்ளது. இந்த பாதசாரிகள் சாலையைக் கடக்கும் பாதையின் நீளம் 79 அடி, அகலம் 6 அடி ஆகும். எனைய இரண்டு சாலைகளில் (அதாவது, லஸ் சர்ச் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை) உள்ள பாதசாரிகள் சாலையைக் கடக்கும் பகுதிகள், இவ் விசாரணைக்குத் தொடர்புடையவை அல்ல எனக் கருதப்பட்டதால், அவை கருத்திற் கொள்ளப்படவில்லை. லஸ் முனையில் உள்ள மத்திய போக்குவரத்து ஒளிக்குறி, நேரு நியூஸ் மார்ட் கடையிலிருந்து 54 அடி தொலைவில் அமைந்துள்ளது. இது ராமகிருஷ்ணாமடம் சாலைக்கு மேற்கே உள்ளது. இது கேரளா பேஷன் ஜுவல்லரி கடையிலிருந்து 59 அடி தொலைவில் உள்ளது. கேரளா பேஷன் ஜுவல்லரி கடைக்கும் நேரு நியூஸ் மார்ட் கடைக்குமிடையேயான தொலைவு 113' ஆகும். இந்த நான்கு சாலைகளிலும் பாதசாரிகள் பயன்படுத்த நடைபாதைகள் உள்ளன. கேரளா பேஷன் ஜுவல்லரிக்கும் கச்சேரி சாலையில் உள்ள பாதசாரிகள் சாலையைக் கடக்கும் பாதைக்கு மிடையேயான தொலைவு 23' ஆகும். கச்சேரி சாலையின் வடக்கே அமைந்துள்ள கேரளா பேஷன் ஜுவல்லரி கடைக்கும் சண்முகம் மெட்டல் ஸ்டோர்ஸ் கடைக்குமிடையேயான தொலைவு 52 அடி ஆகும்.

3. மேற்சொன்னவற்றைக் குறித்துக் கொண்ட பிறகு, ஏனைய சில தொடர்புடைய விவரங்களைக் குறித்துக்கொள்வதற்காக நான் கிழக்குப் பக்கமாகச் சென்றேன். ராஜா கல்யாண மண்டபம், கச்சேரி சாலையின் தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தில் சாலையின் அகலம் 30 அடியாகும். பக்கிங்காம் கால்வாய் கச்சேரி சாலையின் குறுக்கே வடக்கு, தெற்காகச் செல்கிறது. ராஜா கல்யாண மண்டபம் கால்வாயின் கிழக்குப் பக்கம் உள்ளது. 'தினகரன்' தமிழ் நாளிதழ் அலுவலகம், ராஜா கல்யாண மண்டபத்தின் கிழக்கில் அமைந்துள்ளது. இந்தக் கால்வாய் பாலத்தின் நீளம் 99 அடியாகும். பாலத்தில் சாலையின் அகலம் 25 அடி ஆகும். பாலத்தின் இரு புறத்திலும் அமைந்துள்ள பாதசாரிகளுக்காக நடைபாதை 4 அடி 6 அங்குலம் அளவுள்ளதாகும்.

4. கால்வாய் பாலத்திற்கும், கல்வராயன் தெரு எனப்படும் கல்விவாரு தெருவில் உள்ள பெருநகர விரைவுப் போக்குவரத்துத் திட்டத்தின் (ரயில்வே) தூண் எண் 3860.50M-க்கு மிடையேயான தொலைவு 600 அடி ஆகும். மேற்சொன்ன தெரு, கால்வாயின் மேற்கிலும், கால்வாய்ப் பாலத்தின் வடக்கிலும் அமைந்துள்ளது. இறந்துவிட்ட ரமேஷ் தப்பிச் செல்வதற்காக காவல் துறை ஜீப்பிலிருந்து குதித்ததாகக் கூறப்படும் இடத்திற்கு அருகிலுள்ள ராஜா கல்யாண மண்டபம், கச்சேரி சாலையிலேயே இ 1 மயிலாப்பூர் காவல் நிலையத்திலிருந்து 402 அடி தொலைவில் உள்ளது. காவல் நிலையம் ராஜா கல்யாண மண்டபத்தின் எதிர் வரிசையில் கிழக்கே அமைந்துள்ளது.

5. தீயணைப்புத்துறை பணியாளர்கள் இறந்துவிட்டவரின் உடலை மீட்டதாகக் கூறப்படும் இடத்தில் தூண் எண் 3860.50 எம் அமைந்துள்ள பகுதியில் கால்வாயின் ஆழம் 10அடி 5 அங்குலம் ஆகும். இந்த ஆழத்தை நாங்கள் ஒரு நீள மூங்கில் கொண்டு அளந்தோம். வடக்கு தெற்காக ஓடும் கால்வாய் முழுக்க முழுக்க சகதியாக இருந்தது. மேற்பரப்பில் தெளிவாக நீரைக் காணமுடியவில்லை. அந்த இடத்தில் கால்வாயின் கிழக்கே சில குடிசைகளும், ஓடு போடப்பட்ட வீடுகளும் உள்ளன. தூண் 3860.50M உள்ள இடத்தில் கால்வாயின் ஆழத்தை நான் அளப்பதற்கு முன் எங்களிடையே இருந்த ஒருவர் (எங்களுக்கு அவர் யார் என்பது தெரியாது) எவரும் எதுவும் கூறாத நிலையிலும் திடீரென்று கால்வாயின் ஆழத்தை காட்டுவதற்காக கால்வாயில் இறங்கினார். அந்த நபர் அப்படியே மூழ்கிவிட்டது அங்கிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அங்கிருந்த காவலர்கள் உடனடியாக அவரைத் தூக்கி மீட்டு காப்பாற்ற வேண்டியதாயிற்று. அவர் எச்சரித்து அனுப்பிவைக்கப்பட்டார்.

6. பாலத்தின் தெற்குப் பக்கத்தில் கால்வாயின் கிழக்கே சில குடிசைகளும், வேறு சில குடியிருப்புகளும் இருந்ததை நான் பார்த்தேன். கால்வாய்க்கரையின் மேற்குப் பக்கத்தில் பாலத்திலிருந்து தொடங்கி தெற்காகச் செல்லும் வகையில் ஒரு நடைபாதை உள்ளது. பாலத்திலிருந்து கால்வாயின் மேற்சொன்ன மேற்குப் பக்கக்கரை நெடுகச் சிறிது தொலைவு சென்ற பிறகு, ராமகிருஷ்ணாமடம் சாலையில் அமைந்துள்ள அதே கால்வாயில் அமைந்துள்ள மற்றொரு பாலத்தைக் கடந்து சென்றால் பல்லக்கு மானியத்தை அடையலாம் என்று இறந்துவிட்டவரின் தரப்பு வழக்குரைஞர் திரு. ஏ. ஏசையா தெரிவித்தார்.

7. லஸ் முனையில் உள்ள போக்குவரத்து ஒளிக்குறிக்கும் போக்குவரத்து ஒளிக் குறியின் மேற்கிலும் லஸ் சார்ச் சாலையின் தெற்கிலும் அமைந்துள்ள மாதவராவ் தோட்டம் II தெருவின் நுழைவாயிலுக்குமிடையேயான தொலைவு 250 அடி ஆகும். இறந்துவிட்ட ரமேஷின் வீடு பல்லக்கு மானியத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. பல்லக்கு மானியம் செல்ல மாதவராவ் தோட்டம் II தெரு வழியாகத்தான் செல்ல வேண்டுமென என்னிடம் கூறப்பட்டது.

இந்த நேரடி ஆய்வு, பிற்பகல் சுமார் 1.30 மணிக்கு முடிவடைந்தது. சம்பவ இடத்தின் தோராய வரைபடம் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

நீதிபதி எம். மருதமுத்து.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சம்பவம் நடைபெற்ற இடம் பற்றிய தோராய வரைபடம்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்த நபர்களின் பட்டியல் :

திருவாளர்கள்—

1. ஜி. வேலாயுதம், நிலை I, காவலர் எண் 7024, ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம் (போக்குவரத்து), சென்னை–4.

2. எஸ். கிருஷ்ணன், காவலர் எண் 10028, ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம் (போக்குவரத்து), சென்னை-4.

3. இ. ராஜேந்திரன், காவலர் எண் 10540, ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம், சென்னை–4.

4. ஆர். கருடபதி, காவல் துறை ஆய்வாளர் (போக்குவரத்து), ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம், சென்னை–4.

5. ஜே. ஐசக் தேவராஜ், நிலை 1, காவலர் எண் 6691 (போக்குவரத்து), ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம், சென்னை–4.

6. திருமதி கலா, க/பெ. மோகன், எண் 45, ராமகிருஷ்ணாபுரம், கூவம்கரை சாலை, 5-வது தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

7. பா. மூர்த்தி, த/பெ. பாலசுந்தரம், எரிக்கரை, வேளச்சேரி, சென்னை-42.

8. மு. குமார், த/பெ. முனுசாமி, எண் 25, பட்டுநூல்காரன் தோட்டம், 3-வது தெரு, மயிலாப்பூர், சென்னை–4.

9. கே. கணேஷ், தீயணைப்புத்துறை அதிகரி, தீயணைப்பு அலுவலகம், மயிலாப்பூர், சென்னை–4.

10. திருமதி. மகேஸ்வரி, க/பெ. வெங்கடேசன், எண் 1, 5-வது தெரு, இராமகிருஷ்ணாபுரம், மயிலாப்பூர், சென்னை–4.

11. சு. கண்ணப்பன், த/பெ. கப்பராயன், எண் 50, 6–வது தெரு, கால்வாய்ப்பக்கம், பட்டுநூல்காரன் தோட்டம், மயிலாப்பூர், சென்னை-4.

12. எஸ். சேவியர், நிழற்படம் எடுப்பவர் (போட்டோ கிராபர்), தினகரன் அலுவலகம், சென்னை 4.

13. என். சீனிவாசன், உதவி ஆசிரியர், தினகரன், சென்னை–4.

14. எம். சபீர் முகம்மது, இளநிலை பொறியாளர், பொதுப்பணித்துறை, பக்கிங்காம் கால்வாய்ப்பிரிவு, சென்னை–21.

15. சி. வேணுகோபால், மின்கம்பியாள் (ஒயர்மேன்), மந்தைவெளி பிரிவு, சென்னை மின்வாரியம், சாந்தோம், சென்னை–28.

16. எ. பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர் எண் 3347, ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம், சென்னை 4.

17. ஆர். வில்சன், நிலை I, காவலர் எண் 3287, ஈ. 1, மயிலாப்பூர் காவல் நிலையம் (ச.ஒ.), சென்னை–4.

18. சி. பலவேசம், மெஷின் முதலாள், தினகரன், சென்னை–4.

19. பி.எ. சுந்தரம், மேலாளர், தினகரன், சென்னை–4.

20. சி. இசக்கிதுரை, அலுவலக ஏவலாள், தினகரன், சென்னை–4.

21. வி. ராதாகிருஷ்ணன், வரவேற்பாளர், பிக்னிக் பிளாசா ஓட்டல், மயிலாப்பூர், சென்னை–4.

22. கே. நாராயணன், புது சௌமியா ரொட்டிக்கடை முதலாளி, மயிலாப்பூர், சென்னை–4.

23. டாக்டர் கே. ரவீந்திரன், எம்.டி., பேராசிரியர், துறைத்தலைவர் (காவல்துறை சர்ஜன்), தடய அறிவியல் துறை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை–14.

24. எஸ். கன்னியப்பன், ஒட்டுநர், எண் 9347, அரசு போக்குவரத்துக் கழகம், மந்தை வெளி பணிமனை, சென்னை–28.

25. பி. வைத்தீஸ்வரன், பேருந்து நடத்துநர், எண் 10662, அரசு போக்குவரத்துக் கழகம், வடபழனி பணிமனை, சென்னை–26.

26. ஏ. வெங்கடாசலம், காவல்துறை உதவி ஆய்வாளர், ஈ. 3, தேனாம்பேட்டை காவல் நிலையம், சென்னை–18.

27. பி. சண்முகராஜ், ஆயுதம் தாங்கிய காவலர், எண் 862, 'ஈ' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

28. எஸ். ஜனார்த்தனன், ஆயுதம் தாங்கிய காவல்படை, தலைமைக் காவலர், எண் 9757, புதுப்பேட்டை, சென்னை–2.

29. பி. வஜ்ரவேலு, தமிழ்நாடு சிறப்புக் காவலர், எண் 1598, 'டி' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

30. என். முத்தையா, தமிழ்நாடு சிறப்புக் காவலர், எண் 2219, 'டி' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

31. எ. அழகேசன், தமிழ்நாடு சிறப்புக் காவலர், எண் 1569, 'டி' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

32. பி. சுப்பிரமணியம், நிலை-I, காவலர் எண் 11905, ஆயுதந் தாங்கிய காவல், 'ஈ' கம்பெனி, புதுப்பேட்டை, சென்னை–2.

33. ஜி. சீதாராமன், காவலர் எண் 2863, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

34. பி. பெரியசாமி, காவலர் எண் 11235, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

35. கோ. பெரியசாமி, காவல் துறை ஆய்வாளர், 'ஈ' 2, இராயப்பேட்டை காவல் நிலையம், சென்னை–14.

36. ஆர். செல்வராஜ், ஆய்வாளர் (ச மற்றும் ஒ) டி. 5, மெரினா காவல் நிலையம், சென்னை.

37. டாக்டர் ஏ.என். சண்முகம், அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவ அதிகாரி, இராயப் பேட்டை அரசினர் மருத்துவமனை, சென்னை–14.

38. டாக்டர் பெரியசாமி, டி.ஏ.எஸ். வார்டு, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை, சென்னை–14.

39. கே. கோதண்டராமன், காவல் துறை உதவி ஆணையாளர் (ச மற்றும் ஒ), மயிலாப்பூர், சென்னை–4.

40. வி.கே. இராஜகோபாலன், இ.கா.ப., ஆணையாளர், சென்னை.

41. கே. கபாலீஸ்வரன், இறந்துபோன ரமேஷின் தந்தை, எண் 95, பல்லக்கு மானியம், மாதவராவ் தோட்டம், மயிலாப்பூர், சென்னை–4.

42. ஜே. பன்னீர்செல்வம், ஆட்டோ ஓட்டுநர், எண் 2, அம்மன்கோவில் தெரு, எம்.எச். காலனி, சென்னை–29.

43. எம். ஸ்டாலின், எண் 226, மாதவராவ் தோட்டம், கால்வாய்க்கரை சாலை, மயிலாப்பூர், சென்னை–4.

44. மா. மணி, த/பெ. மாசானமுத்து நாடார், மெஷின் முதலாள், தினகரன், சென்னை–4.

45. வெ. கொம்பையா, த/பெ. வெள்ளைத்துரைத்தேவர், காவலாள், தினகரன், சென்னை–4.

46. சி. சுடலை, த/பெ. சிவானந்தபெருமாள், காவலாள், தினகரன், சென்னை–4.

47. திருமதி கல்யாணி, க/பெ. ராஜேந்திரன், எண் 46, 6–வது தெரு, பட்டுநூல்காரன் தோட்டம், மயிலாப்பூர், சென்னை–4.

48. என். சத்தியநாதன், காவலர் எண் 2673, தமிழ்நாடு சிறப்புக்காவல் VIII பிரிவு, 'ஈ' கம்பெனி, சென்னை.

49. சி. வேலு, காவலர் எண் 1870, தமிழ்நாடு சிறப்புக்காவல், V பிரிவு, 'டி' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

50. ஆர். மணி, நாயக் 1294, V பிரிவு ''டி'' கம்பெனி, காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர், சென்னை.

51. வி. கார்த்திகேயன், நாயக் 2206, 2-வது பிரிவு, 'ஏ' கம்பெனி, காவலர் கட்டுப் பாட்டு அறை, சென்னை-8.

52. ரா. ஜெயசீலன், த/பெ. ராஜ், எண் 5, 2-வது டிரஸ்ட் மெயின் சாலை, மந்தைவெளிப்பாக்கம், சென்னை-28.

53. சா. முரளி, த/பெ. சாமிஐயா, சின்ன ஒடினாபுரம், கும்மிடிப்பூண்டி, எம்.ஜி.ஆர். மாவட்டம், பேருந்து ஒட்டுநர், எண் 12554, அரசு போக்குவரத்துக் கழகம், வடபழனி, பணிமனை, சென்னை-26.

54. மு. பூபாலன், த/பெ. கே. முனுசாமி, எண் 91, சிவசாமி சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

55. திருமதி கிருஷ்ணவேணி, க/பெ. மாடசாமி, எண் 204, ஸ்லேட்டர்புரம், மயிலாப்பூர், சென்னை-4.

56. திருமதி இராஜம்மாள், க/பெ. ராமலிங்கம், எண் 45, ராமகிருஷ்ணா புரம், 5-வது தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

57. எல். எட்வின், காவலர் 4312, ஆயுதந்தாங்கிய காவலர், புதுப்பேட்டை, சென்னை.

58. கே. தென்னரசு, எண் 220, கால்வாய்க்கரை சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

59. கே. பாலன், எண் 31, அப்பர்சாமி கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

60. ஆர். ரவிச்சந்திரன், எண் 29, காமராஜர் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-18

61. என். ராகவேந்திர ராவ், எண் 7, சாரதி தெரு, தியாகராஜநகர், சென்னை-17.

62. வி. ஆர். பட்டாபிராமன், எண் 25, 2-வது தெரு, நேரு நகர், பெருங்களத்தூர், சென்னை-63.

63. டி. முனுசாமி, எண் 35, 4-வது தெரு, மங்களபுரம், சேத்துப்பட்டு, சென்னை-38.

64. திருமதி ஆர். மாரிமுத்து, எண் 61, நல்லம் தெரு, வள்ளிய தேனாம்பேட்டை, சென்னை-87.

65. கே. ஜீவன்லால், எண் 10, பி.பி.வி. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

66. சி. திருப்பதி, எண் 12, லஸ் சர்ச் சாலை, நியூ சௌமியா பேக்கரி, மயிலாப்பூர், சென்னை-4.

67. கே. சொக்கலிங்கம், தலைமை மருத்துவர், தேவகி மருத்துவமனை, எண் 148, லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

68. திருமதி லதா, க/பெ. கே. கபாலீஸ்வரன், பல்லக்கு மாநகர், மாதவராவ் தோட்டம், மயிலாப்பூர், சென்னை-4.

இணைப்பு III

சாட்சிகள் பட்டியல்

காவலர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்.

அ.சா. 1 ஜி. வேலாயுதம், நிலை I காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 2 எஸ். கிருஷ்ணன், காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 3 ஈ. ராஜேந்திரன், காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 4 ஆர். கருடபதி, காவல் துறை ஆய்வாளர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 5 ஜே. ஐசக் தேவராஜ் நிலை I, காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 6 திருமதி கலா, க/பெ. மோகன், பூ விற்பனையாளர், மயிலாப்பூர்.

அ.சா. 7 பி. மூர்த்தி, இரவுக் காவலாள், பருக் நிறுவனம், மயிலாப்பூர்.

அ.சா. 8 மு. குமார், த/பெ. முனுசாமி, மயிலாப்பூர்.

அ.சா. 9 கே. கணேஷ், தியணைப்பு அதிகாரி, மயிலாப்பூர்.

அ.சா. 10 திருமதி மகேஸ்வரி, க/பெ. வெங்கடேசன், மயிலாப்பூர்.

அ.சா. 11 சு. கண்ணப்பன், த/பெ. சுப்பராயன், மயிலாப்பூர்.

அ.சா. 12 எஸ். சேவியர். நிழற்படம் எடுப்பவர் (போட்டோகிராஃபர்) தினகரன் நியூஸ் பேப்பர், மயிலாப்பூர்.

அ.சா. 13 ஆர். சீனிவாசன், உதவியாசிரியர், தினகரன், மயிலாப்பூர்.

அ.சா. 14 எம். சபீர் முகம்மது, இளநிலைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சென்னை-2.

அ.சா. 15 ஜி. வேணுகோபால், மின் கம்பியாள் (ஒயர்மேன்), சென்னை மின் வாரியம்.

அ.சா. 16 பி. பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 17 ஆர். வில்சன், தலைமக் காவலர், ஈ-1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 18 சி. பலவேசம், மெஷின் முதலாள், தினகரன்,

அ.சா. 19 டி. ஆப்ரஹாம் (முன்னாள்) நேர்முக உதவியாளர் (பொது), மாவட்டாட்சியரகம், சென்னை.

அ.சா. 20 பி. ஏ. சுந்தரம், மேலாளர், தினகரன்.

அ.சா. 21 சி. இசக்கிதுரை, அலுவலக எவலாள், தினகரன்.

அ.சா. 22 வி. முத்தையா, நிருபர், தினகரன்.

அ.சா. 23 வி. ராதாகிருஷ்ணன், வரவேற்பாளர், பிக்னிக் பிளாசா ஒட்டல், மயிலாப்பூர்.

அ.சா. 24 கே. நாராயணன், நியூ சௌமியா பேக்கரி, மயிலாப்பூர்.

அ.சா. 25 டாக்டர் கே. ரவீந்திரன், எம்.டி., பேராசிரியர், இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனை.

அ.சா. 26 என். கன்னியப்பன், ஒட்டுநர், அரசு போக்குவரத்துக் கழகம், மந்தைவெளி பணிமனை.

அ.சா. 27 பி. வைத்தீஸ்வரன், பேருந்து நடத்துநர், அரசுப் போக்குவரத்துக் கழகம், வடபழனி பணிமனை.

அ.சா. 28 ஏ. வெங்கடாசலம், காவல் துறை உதவி ஆய்வாளர், ஈ-3, தேனாம்பேட்டை காவல் நிலையம்.

அ.சா. 29 பி. சண்முகராஜ், ஆயுதந்தாங்கிய காவலர், காவலர் கட்டுப்பாட்டு அறை, எழும்பூர்.

அ.சா. 30 எஸ். ஜனார்த்தனம், தலைமைக் காவலர், ஆயுதந்தாங்கிய காவலர், புதுப்பேட்டை.

அ.சா. 31 பி. வஜ்ரவேலு, தமிழ்நாடு சிறப்புக் காவலர், V பட்டாளம்.

அ.சா. 32 என். முத்தையா, தமிழ்நாடு சிறப்புக் காவலர், V பட்டாளம்.

அ.சா. 33 எ. அழகேசன், தமிழ்நாடு சிறப்புக் காவலர், V பட்டாளம்.

அ.சா. 34 பி. சுப்பிரமணியம், நிலை 1, காவலர், ஆயுதந்தாங்கிய காவலர், புதுப்பேட்டை.

அ.சா. 35 ஜி. சீதாராமன், காவலர், எழும்பூர்.

அ.சா. 36 பி. பெரியசாமி, காவலர், எழும்பூர்.

அ.சா. 37 கோ. பழனிசாமி, காவல் துறை ஆய்வாளர், ஈ 2, ராயப்பேட்டை காவல் நிலையம்.

அ.சா. 38 ஆர். செல்வராஜ், காவல் துறை ஆய்வாளர், மெரினா காவல் நிலையம்.

அ.சா. 39 டாக்டர் எ. என். சண்முகம், ராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை.

அ.சா. 40 எ. பெரியசாமி, மருத்துவர், டி.ஏ.எஸ். வார்டு, ராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை.

அ.சா. 41 எஸ். பாண்டியன், காவல் துறை உதவி ஆய்வாளர், ஈ 1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 42 என். பி. ராமஜெயம், எம்.எல்.ஏ., மயிலாப்பூர் தொகுதி.

அ.சா. 43 கே. கோதண்டராமன், காவல் துறை உதவி ஆணையாளர், மயிலாப்பூர்.

அ.சா. 44 வி. கிருஷ்ணமூர்த்தி, காவல் துறை ஆய்வாளர், ஈ 1, மயிலாப்பூர் காவல் நிலையம்.

அ.சா. 45 வி. கே. இராஜகோபாலன், இ.கா.ப., காவல் துறை ஆணையாளர், சென்னை.

அ.சா. 46 எம். சேவுகன், காவல் துறை உதவி ஆணையாளர் (போக்குவரத்து), சென்னை-4.

II. இறந்தவரின் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்.

இ.த.சா. 1 கே. கபாலீஸ்வரன், இறந்துபோன ரமேஷின் தகப்பனார்.

இ.த.சா. 2 ஜே. பன்னீர்செல்வம், ஆட்டோ ஓட்டுநர், அமைந்தகரை.

இ.த.சா. 3 மு. ஸ்டாலின், த/பெ. மூர்த்தி, மயிலாப்பூர்.

இணைப்பு–IV.

காவல் துறையினர் தரப்பில் குறிக்கப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்.

சான்றாவண எண்.	குறிக்கப் பட்ட நாள்.	விவரம்.
P-1	16—9—1997	காவலர் (அ.சா. 1) நிலை I, ஜி. வேலாயுதத்தின் உறுதிமொழிப் பத்திரம்.
P-2	17—9—1997	காவலர் (அ.சா. 2) எஸ். கிருஷ்ணனின் உறுதிமொழிப் பத்திரம்.
P-3	22—9—1997	காவலர் (அ.சா. 3) ஈ. ராஜேந்திரனின் உறுதிமொழிப் பத்திரம்.
P-4	23—9—1997	காவல் துறை ஆய்வாளர் (போக்குவரத்து) ஆர். கருடபதியின் (அ.சா. 4) உறுதிமொழிப் பத்திரம்.
P-5	8—10—1997	காவலர் ஜே. ஐசக் தேவராஜின் (அ.சா. 5) உறுதிமொழிப் பத்திரம்.
P-6	9—10—1997	திருமதி. கலாவின் (அ.சா. 6) உறுதிமொழிப் பத்திரம்.
P-7	14—10—1997	B. மூர்த்தியின் (அ.சா. 7) உறுதிமொழிப் பத்திரம்.
P-8	21—10—1997	எம். குமாரின் (அ.சா.8) உறுதிமொழிப் பத்திரம்.
P-9	21—10—1997	கே. கணேஷின் (தீயணைப்புத் துறை அலுவலர்) (அ.சா. 9) உறுதிமொழிப் பத்திரம்.
P-10	22—10—1997	அ.சா. 9 மூலமாக குறிக்கப்பட்ட தீயணைப்புப் பணி குறித்த அறிக்கை.
P-11	22—10—1997	திருமதி. மகேஸ்வரியின் (அ.சா. 10) உறுதிமொழிப் பத்திரம்.
P-12	22—10—1997	எஸ். கண்ணப்பனின் (அ.சா. 11) உறுதிமொழிப் பத்திரம்.
P-13	23—10—1997	எஸ். சேவியரின் (நிழற்படம் எடுப்பவர் தினகரன்) (அ.சா. 12) உறுதிமொழிப் பத்திரம்.
P-14	23—10—1997	ஆர். சீனிவாசனின் (துணை ஆசிரியர் தினகரன்) (அ.சா. 13) உறுதிமொழிப் பத்திரம்.
P-15	27—10—1997	அ. சா. 14 மூலமாக குறிக்கப்பட்ட பொதுப்பணித்துறையின் 21—8—1996 ஆம் நாளிட்ட 580 ஆம் எண் அரசாணையின் உண்மை நகல்.
P-16	27—10—1997	எம். சபீர் முகமது (இளநிலைப் பொறியாளர், பொதுப் பணித் துறை) (அ. சா. 14) விடமிருந்து வரப்பெற்ற கடிதம்.
P–17	27—10—1997	எம். சபீர் முகமதுவின் (இளநிலைப் பொறியாளர் பொதுப் பணித் துறை) (அ. சா. 14) உறுதிமொழிப் பத்திரம்.
P-18	27—10—1997	அ. சா. 16 மூலமாக குறிக்கப்பட்ட மந்தைவெளிப்பிரிவின், மின் வாரிய மின் தடை தகவல் பதிவேடு (Fuse call Register).
P-19	27—10—1997	சி. வேணுகோபாலின் (மின் கம்பியாள்) (அ. சா. 15) உறுதி மொழிப் பத்திரம்.
P-20	27—10—1997	அ. சா. 16 மூலமாக குறிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல்.
P-21	27—10—1997	தலைமைக் காவலர் ஏ. பாலகிருஷ்ணனின் (அ. சா. 16) உறுதிமொழிப் பத்திரம்.
P-22	27—10—1997	காவலர் (அ. சா. 17) ஆர். வில்சனின் உறுதிமொழிப் பத்திரம்.

P-23	3—11—1997	தினகரன். இயந்திர முதலாள் சி. பலவேசத்தின் உறுதி மொழிப் பத்திரம் (அ. சா. 18).
P-24	4—11—1997	சான்றாவணம் P 25-ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ. சா. 7-ன் அறிக்கை.
P-25	4—11—1997	இரவு நேரக் காவலாள் பி. மூர்த்தியின் புகார் (அ. சா. 7).
P-26	4—11—1997	அ. சா. 42-க்கு கே. கபாலீஸ்வரன் (D.W. 1) கொடுத்த புகார். இது குறித்து, அ. சா. 43-க்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டது.
P-27	4—11—1997	அ. சா. 19-க்கு காவல் துறை ஆய்வாளர் (அ. சா. 44) அனுப்பிய கோரிக்கை.
P-28	4—11—1997	அ.சா. 19-ன் சவ விசாரணை அறிக்கை.
P-29	4—11—1997	டாக்டர் கே. ரவீந்தரன் வழங்கிய சவப் பரிசோதனை சான்றிதழ்.
P-30	4—11—1997	இறந்ததற்கான காரணம் குறித்து அ.சா. 25-இன் கருத்து.
P-31	4—11—1997	தடய அறிவியல் துறையின் வேதியியல் பகுப்பாய்வின் அறிக்கை.
P-32	4—11—1997	அ.சா. 19 மூலமாக குறிக்கப்பட்ட D.W. 1-ன் வாக்குமூலம்.
P-33	4—11—1997	அ.சா. 19 மூலமாக குறிக்கப்பட்ட B. மூர்த்தியின் (அ.சா. 7) வாக்குமூலம்.
P-34	4—11—1997	அ.சா. 19 மூலமாகக் குறிக்கப்பட்ட திருமதி மகேஷ்வரியின் (அ.சா. 10) வாக்குமூலம்.
P-35	4—11—1997	சென்னை, மாவட்ட ஆட்சியருக்கு (அ.சா. 19) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. ஆபிரகாம் அவித்த இடைக்கால அறிக்கை.
P-36	4—11—1997	அ.சா. 19 மூலமாக குறிக்கப்பட்ட, சென்னை மாவட்ட ஆட்சியரின் ஆணைகள்.
P-37	4—11—1997	காவல் துறைத் துணை ஆய்வாளர் (அ.சா. 41) எஸ். பாண்டியனின் வாக்குமூலம்.
P-38	4—11—1997	காவல் துறை ஆய்வாளர் (அ.சா. 1) ஆர். கருடபதியின் வாக்குமூலம்.
P-39	4—11—1997	காவலர், நிலை I. ஜி. வேலாயுதத்தின் வாக்குமூலம் (அ.சா. 1).
P-40	4—11—1997	காவலர் (அ.சா. 2), எஸ். கிருஷ்ணனின் வாக்குமூலம்.
P-41	4—11—1997	காவலர், ஈ. ராஜேந்திரனின் (அ.சா. 3) வாக்குமூலம்.
P-42	5—11—1997	தினகரன், மேலாளர், பி.ஏ. சுந்தரத்தின் (அ.சா. 20) உறுதிமொழிப் பத்திரம்.
P-43	5—11—1997	அ.சா. 20 மூலமாக குறிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல்.
P-44	5—11—1997	அ.சா. 20 மூலமாக குறிக்கப்பட்ட சேதத்திற்கான மற்றும் மருத்துவச் செலவுகளுக்கான பட்டிகள்.
P-45	5—11—1997	தினகரன் அலுவலகப் பையன் (அ. சா. 21) சி. இசக்கி துரையின் உறுதிமொழிப் பத்திரம்.

P-46	11—11—1997	ஹோட்டல் பிக்னிக் பிளாசாவைச் சேர்ந்த வி. ராதாகிருஷ்ணனால் (அ. சா. 23) குறிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல்.
P-47	11—11—1997	வி. ராதாகிருஷ்ணனின் (அ. சா. 23) உறுதிமொழிப் பத்திரம்.
P-48	11—11—1997	அ. சா. 23 மூலமாக குறிக்கப்பட்ட சேதம் தொடர்பாக ஓட்டல் பிக்னிக் பிளாசாவிலிருந்து அனுப்பிய கடிதம்.
P-49	12—11—1997	சௌமியா பேக்கரி, கே. நாராயணனின் (அ. சா. 24) மூலம் குறிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல்.
P-50	12—11—1997	கே. நாராயணனின் உறுதிமொழிப் பத்திரம் (அ. சா. 24).
P-51	12—11—1997	அ. சா. 24-இன் மூலமாக குறிக்கப்பட்ட புதிய சௌமியா பேக்கரியின் சேதம் குறித்த விவர அறிக்கை.
P-52	13—11—1997	சவப் பரிசோதனை நடத்துவதற்காக டாக்டர் கே. ரவீந்தரனுக்கு (அ. சா. 25) அ. சா. 19 அனுப்பிய கோரிக்கை.
P-53	13—11—1997	டாக்டர் கே. ரவீந்திரனின் (அ. சா. 25) உறுதிமொழிப் பத்திரம்.
P-54	13—11—1997	அ. சா. 25-இன் மூலமாக குறிக்கப்பட்ட சவப் பரிசோதனைக் குறிப்புகள்.
P-55	20—11—1997	எண் 5 பேருந்து வழித் தட ஒட்டுநர் எஸ். கண்ணப்பனின் (அ. சா. 26) உறுதிமொழிப் பத்திரம்.
P-56	20—11—1997	எண் 12L பேருந்து வழித் தட நடத்துநர் பி. வைத்தீஸ்வரனின் (அ. சா. 27) உறுதிமொழிப் பத்திரம்.
P-57	21—11—1997	காவல் துறைத் துணை ஆய்வாளர் (அ.சா. 28) ஏ. வெங்கடாசலத்தின் உறுதிமொழிப் பத்திரம்.
P-58	24—11—1997	காவலர் P. சண்முகராஜின் (அ.சா. 29) உறுதிமொழிப் பத்திரம்.
P-59	24—11—1997	தலைமைக் காவலர் எஸ். ஜனார்த்தனத்தின் (அ.சா. 30) உறுதிமொழிப் பத்திரம்.
P-60	25—11—1997	காவலர் P. வஜ்ரவேலுவின் (அ.சா. 31) உறுதிமொழிப் பத்திரம்.
P-61	25—11—1997	காவலர் என். முத்தையாவன் (அ.சா. 31) உறுதிமொழிப் பத்திரம்.
P-62	25—11—1997	காவலர் ஏ. அழகேசனின் (அ.சா. 33) உறுதிமொழிப் பத்திரம்.
P-63	26—11—1997	காவலர் P. கப்பிரமணியத்தின் (அ.சா. 34) உறுதிமொழிப் பத்திரம்.
P-64	26—11—1997	அ.சா. 35இன் மூலமாக குறிக்கப்பட்ட கண்ணீர்ப் புகை குண்டு வீசும் காவல்படையினரின் பணிப் பதிவேட்டின் ஜெராக்ஸ் நகல்.
P-65	26—11—1997	அ.சா. 35இன் மூலமாக குறிக்கப்பட்ட பொது நாட் குறிப்பேட்டின் ஜெராக்ஸ் நகல்
P-66	26—11—1997	ஜி. சீத்தாராமனின் (அ.சா. 35) உறுதிமொழிப் பத்திரம்.
P-67	26—11—1997	P. பெரியசாமி (அ.சா. 36) மூலமாகக் குறிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை பதிவேட்டின் ஜெராக்ஸ் நகல்.
P-69	26—11—1997	காவலர் P. பெரியசாமியின் (அ.சா. 36) உறுதிமொழிப் பத்திரம்.

P-70	27—11—1997	காவலி துறை ஆய்வாளர் கோ. பழனிசாமியின் (அ.சா. 37) உறுதிமொழிப் பத்திரம்.
P-71	27—11—1997	காவல் துறை அய்வாளர் ஆர். செல்வராஜின் (அ.சா. 38) உறுதிமொழிப் பத்திரம்.
P-72	2—12—1997	அ.சா. 38 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-73	2—12—1997	அ.சா. 28 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்
P-74	2—12—1997	அ. சா. 31 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-75	2—12—1997	காவலர் B. தமிழ்க் குமரன் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-76	2—12—1997	அ. சா. 29 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-77	2—12—1997	காவலர் அஜய்குமார் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-78	2—12—1997	அ. சா. 39-ன் மூலமாக குறிப்பிடப்பட்ட, மோகன்ராஜ் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-79	2—12—1997	டாக்டர் ஏ. எஸ். சண்முகத்தின் (அ. சா. 39) உறுதிமொழிப் பத்திரம்.
P-80	2—12—1997	அ. சா. 34 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-81	2—12—1997	காவலர் எட்வின் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-82	2—12—1997	அ. சா. 30 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-83	2—12—1997	காவலர் குப்புசாமி தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-84	2—12—1997	காவலர் சத்தியநாதன் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-85	2—12—1997	காவலர் B. வெங்கடேசன் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-86	2—12—1997	நாயக் கார்த்திகேயன் தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-87	2—12—1997	அ. சா. 33 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-88	2—12—1997	அ. சா. 32 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-89	2—12—1997	காவலர் மணி தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-90	2—12—1997	காவலர் வேலு தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-91	2—12—1997	அ. சா. 37 தொடர்பான விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-92	2—12—1997	டாக்டர் ஏ. பெரியசாமி (அ. சா. 40) அவர்களின் உறுதி மொழிப் பத்திரம்.

P-93	4—12—1997	மயிலாப்பூர் காவல்துறை உதவி ஆணையாளர், சட்டம்-ஒழுங்கு, திரு. கே. கோதண்டராமன் அவர்களின் (அ. சா. 43) உறுதிமொழிப் பத்திரம்.
P-94	4—12—1997	அ. சா. 44 மூலமாக குறிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் தட்டச்சு நகல்.
P-95	16—12—1997	அ. சா. 45-க்கு வழங்கப்பட்ட விபத்துப் பதிவேட்டின் இரண்டாம் நகல்.
P-96	16—12—1997	காவல்துறை ஆணையாளர் திரு. வி. கே. இராஜகோபாலன் அவர்களின் (அ. சா. 45) உறுதிமொழிப் பத்திரம்.
P-97	4—2—1998	அ. சா. 4-ன் 12—4—1997 ஆம் நாளிட்ட நாட்குறிப் பேட்டின் கார்பன் நகல்.
P-98	4—2—1998	அ. சா. 4-ன் 13—4—1997 ஆம் நாளிட்ட நாட்குறிப் பேட்டின் கார்பன் நகல்.
P-99	4—2—1998	சான்றாவணம் P97-ன் மூல நகல்.
P-100	4—2—1998	சான்றாவணம் P98-ன் மூல நகல்.
P-101	4—2—1998	அ. சா. 4-ன் 14—4—1997 ஆம் நாளிட்ட மூல நாட்குறிப்பேடு.

இறந்தவர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்.

D-1	23—12—1997	கே. கபாலீஸ்வரன் (D.W. 1) அவர்கள் மூலம் குறிக்கப் பட்ட 12—4—1994 அன்று நடைபெற்ற திருவாளர்கள் சுந்தரம் கிளேடன் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் தினம் கொண்டாடியது தொடர்பான அழைப்பிதழ்.
D-2	23—12—1997	D.W. 1 மூலம் குறிக்கப்பட்ட 14—4—1997 ஆம் நாளிட்ட ''இந்து'' பத்திரிகைச் செய்தி குறிப்பு.
D-3	23—12—1997	கே. கபாலீஸ்வரனின் உறுதிமொழிப் பத்திரம் (D.W. 1).
D-4	2—1—1998	ஜே. பன்னீர் செல்வத்தின் உறுதிமொழிப் பத்திரம் (D.W. 1).
D-5	2—1—1998	எம். ஸ்டாலின் உறுதிமொழிப் பத்திரம் (D.W. 3).

காட்சிப் பொருட்களின் பட்டியல்.

கா.பொ. 1.	23—10—1997	அ.சா. 12 மூலமாக குறிக்கப்பட்ட இறந்துபோன ரமேஷின் நெகடிவ் நகலுடன் கூடிய புகைப்படம்.
கா.பொ. 2.	23—10—1997	அ.சா. 12 மூலமாக குறிக்கப்பட்ட இறந்துபோன ரமேஷின் நெகட்டிவ் புகைப்படம்.
கா.பொ. 3.	23—10—1997	அ.சா. 13 மூலமாக குறிக்கப்பட்ட இறந்துபோன ரமேஷின் புகைப்படம் வெளியிடப்பட்ட 13—4—1997 ஆம் நாளிட்ட ''தினகரன்'' செய்தித் தாள்.
கா.பொ. 4.	5—11—1997	தினகரன் அலுவலகத்தைச் சேர்ந்த P.A. சுந்தரத்தால் (அ.சா. 20) குறிக்கப்பட்ட D. N. 07D 7373 ஆம் எண் வேனின் பதிவு எண்ணின் நிழற்படமும் அதன் நெகட்டிவும்.

கா.பொ. 5.	5—11—1997	அ.சா. 20 மூலமாக குறிக்கப்பட்ட தினகரன் அலுவலகத்தின் பெயர் பலகைக்கு ஏற்பட்ட சேதத்தை குறிக்கும் நிழற்படமும் அதன் நெகட்டிவும்.
கா.பொ. 6.	5—11—1997	அ.சா. 20 மூலமாகக் குறிக்கப்பட்ட ''தினகரன்'' செய்தித் தாள் அலுவலகத்தின் சன்னல்கள் மற்றும் கதவு களுக்கு ஏற்பட்ட சேதத்தைக் காட்டும் நிழற்படமும் அதன் நெகட்டிவும்.
கா.பொ. 7.	26—11—1997	P.W. 12, மூலமாகக் குறிக்கப்பட்ட 14—4—1997 ஆம் நாளிட்ட ''தினகரன்'' செய்தித் தாள்.

நீதிபதி எம். மருதமுத்து,
விசாரணை ஆணையம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

© தமிழ்நாடு அரசு 1998

பொதுத் (மிகக் கழுக்கம்) துறை

அரசாணை எண் எஸ். எஸ். II/143-9/98, நாள் 21, ஜூலை 1998

சுருக்கம்

சட்டம்—ஒழுங்கு—திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகன் திரு. ரமேஷ் 12—4—1997 ஆம் நாளன்று சென்னை மயிலாப்பூர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும், இதனையடுத்து, 13—4—1997 அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சனை குறித்தும் விசாரணை செய்ய அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 60/1952) விசாரணை செய்தல்—விசாரணை ஆணையம் சென்னை, உயர்நீதி மன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எம். மருதமுத்து அவர்கள் அளித்த விசாரணை அறிக்கை முடிவுகள்—ஏற்றுக் கொள்ளப்படுகின்றன—ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

படிக்கவும் :

அரசாணை எம்.எஸ். எண். 423, பொதுத் (சட்டம் ஒழுங்கு-எஸ்ப்) துறை, நாள் 15—4—1997.

ஆணை :—

மேற்சொன்ன அரசாணையில், திரு கபாலீஸ்வரன் என்பவரின் மகன் திரு. ரமேஷ் 12—4—1997 அன்று சென்னை, மயிலாப்பூர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும், இதனையடுத்து 13—4—1997 அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை குறித்தும் விசாரணை செய்வதற்காக, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952)-கீழ், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியான திரு. எம். மருதமுத்து அவர்கள் விசாரணை ஆணையமாக நியமிக்கப்பட்டார். விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு :—

(i) எண் 94, மாதவராவ் தோட்டம் தெரு, மயிலாப்பூர், சென்னை-4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகனான திரு. ரமேஷ் என்பவரை போக்குவரத்து ஆய்வாளர் திரு. கருடபதி கைது செய்ய வழி வகுத்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும், மேற்சொன்ன ரமேஷ் 8453 ஆம் எண் ஜீப்பில் நிலை-1 காவலர் வேலாயுதம் உடனிருக்க மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது எந்தச் சூழ்நிலைகளில் தப்பிச் சென்றார் என்பது குறித்தும், அவரை மீண்டும் கைது செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்தும் விசாரணை செய்தல் ;

(ii) திரு. ரமேஷின் மர்மமான மரணம் ஏற்படக் காரணமாக இருந்த தகவல்கள், சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்தல் ;

(iii) மேற்சொன்ன ரமேஷ் காவல்துறைக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது சாகடிக்கப் பட்டு, அவரின் உடல் பக்கிங்காம் கால்வாயில் வீசப்பட்டது என்ற புகார் உண்மையானதுதானா என்பது குறித்து அறிக்கை அளித்தல் ;

(iv) திரு. ரமேஷ் குறித்து காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையில் ஏதேனும் அத்துமீறல் இருந்ததா என்பது பற்றி விசாரித்தல், அதெனில் அதற்குப் பொறுப்பாளிகளான காவல் துறை அதிகாரிகளைக் கண்டறிந்து, அவர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தல்.

(v) அதன் பின்னர், 13—4—1997 அன்று மயிலாப்பூர் பகுதியில் பொதுச் சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்த வழி வகுத்த வன்முறைச் செயல்கள் ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் மற்றும் காரணங்கள் பற்றி விசாரித்தல் ;

(vi) வன்முறை சூழ்நிலை தொடர்பாக காவல்துறையினர் எடுத்த நடவடிக்கையில் அத்துமீறல் ஏதேனும் நடந்துள்ளதா என்பது பற்றி விசாரணை செய்து அறிக்கை அளித்தல் ;

(vii) இனி இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழாவண்ணம் உறுதி செய்ய மேற்கொள்ளவேண்டிய அவசியமான நடவடிக்கைகள் குறித்துத் தெரிவித்தல்.

2. விசாரணை ஆணையம் விசாரணை நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்களைக் கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர் ஆய்வு வரம்புகள் குறித்துப் பின்வருமாறு தன் முடிவுகளைத் தெரிவித்துள்ளது.

ஆய்வு வரம்பு (i)

(i) ''எண் 94, மாதவராவ் தோட்டம் தெரு, மயிலாப்பூர், சென்னை-4'' என்ற முகவரியில் வசிக்கும் திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகனான திரு. ரமேஷ் என்பவரைப் போக்குவரத்து ஆய்வாளர் திரு. கருடபதி கைது செய்ய வழி வகுத்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும், மேற்சொன்ன ரமேஷ் 8453 ஆம் எண் ஜீப்பில் நிலை-1 காவலர் திரு. வேலாயுதம் உடனிருக்க, மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, எந்தச் சூழ்நிலைகளில் தப்பிச் சென்றார் என்பது குறித்தும், அவரை மீண்டும் கைது செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்தும் விசாரணை செய்தல்''.

முடிவுகள் :

12—4—1997 அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு திரு. கபாலீஸ்வரன் மகன் ரமேஷ், சென்னை, மயிலாப்பூர், லஸ் முனையிலுள்ள இராமகிருஷ்ணா மடம் சாலையில் வாகனங்கள் செல்வதற்காக பச்சை ஒளிக்குறி (Green Signal) இருந்தபோது, அச்சாலையின் ஒரு பகுதியைக் கடக்க முயன்றார் அல்லது கடந்து சென்றார் என்றும், நிலை-1 காவலர் திரு. ஜி. வேலாயுதம் (அ.சா. 1) இதனை ஆட்சேபித்தார் என்றும், இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்ச் சண்டையில் ரமேஷ் முறை தவறி நடந்து கொண்டார் என்றும், விசாரணை ஆணையம். சாட்சியங்களின் அடிப்படையிலும் சூழ்நிலைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலும் அறிந்துள்ளது. சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்கீழ் அவர்மீது வழக்குப் பதிவு செய்வதற்காக மயிலாப்பூர் காவல் நிலையத்தின் சட்டம்-ஒழுங்குப் பிரிவில் ரமேஷை ஒப்படைக்கும் பொருட்டு, மயிலாப்பூர் காவல் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு, போக்குவரத்து ஆய்வாளர் திரு. கருடபதியின் (அ.சா. 4) உத்தரவின் பேரில் மயிலாப்பூர் காவல் நிலையம், போக்குவரத்துப் பிரிவு நிலை-1 காவலர் திரு. ஜி. வேலாயுதம் (அ.சா. 1) ரமேஷை காவலில் வைப்பதற்காக அழைத்துச் சென்றார் என்றும், மேற்சொன்ன ரமேஷ் காவல் துறை ஜீப்பில் (எண். 8453) காவல் நிலையத் தற்புகு கொண்டு செல்லப்பட்டபோது, கச்சேரி சாலையிலுள்ள ராஜா கல்யாண மண்டபம் அருகே தப்பி ஓடிவிட்டார் என்றும் ஆணையம் அறிகிறது. ரமேஷ் கைது செய்யப்படவில்லை என்றும், காவலில் வைப்பதற்காக மட்டுமே கொண்டு செல்லப்பட்டார் என்றும் எனவே, ரமேஷை மீண்டும் கைது செய்யும் வினாவிற்கு இடமில்லை என்றும் மேலும் முடிவு செய்யப்படுகிறது.

காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும்போது ரமேஷ் தப்பி ஓடிவிட்ட தகவலை அ. சா. 1, நிலை-1 காவலரான திரு. ஜி. வேலாயுதம் லஸ் கார்னரில் இருந்த காவல்துறை ஆய்வாளரான திரு. ஆர். கருடபதியிடம் (அ.சா. 4) முறைப்படி தெரிவித்துள்ளார் எனறும், அ.சா. 1 தன் கடமையிலிருந்து தவறியதற்காக அ. சா. 4 அவரைக் கண்டித்தார் என்றும் ஆணையம் அறிந்துள்ளது. 12—4—1997 அன்று இரவு 8-45 மணிக்கும் 9-00 மணிக்குமிடையே அ.சா. 1 ரமேஷை ஜீப்பின் அழைத்துச் சென்றபோது, அவர் ராஜா கல்யாண மண்டபத்திற்கு எதிரே ஜீப்பிலிருந்து குதித்துத் தப்பிச சென்று விட்டார் என்பதை அ.சா. 1, 3, 6 ஆகியோரின் சாட்சியம் சா.ஆ.பி. 97 ஆகியவை காட்டுகின்றன. அ.சா. 1 அல்லது அ.சா. 4 மட்டும் ரமேஷ்மீது சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75ஆம் பிரிவின்கீழ் எடுக்கக் கருதிய நடவடிக்கை பற்றியும் நடுவழியில் அவர் தப்பிச் சென்றது பற்றியும் 12—4—1997 அன்றிரவே அவரைக் கைது செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் மயிலாப்பூர் காவல் நிலையத்தின் சட்டம்-ஒழுங்குப் பிரிவில் அன்றிரவே தெரிவித்திருந்து, மயிலாப்பூர் காவல் நிலையப் பொதுக் குறிப்பேட்டில் அதனைப் பதிவும் செய்திருந்தால் அது இவ்வழக்குக்கு மிக வலுவான ஆதாரமாக இருந்திருக்கும், ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. ரமேஷ், என்ன நடவடிக்கைக்காக் குற்றம் சாட்டப்படவிருந்தாரோ, அந்நடவடிக்கை மிகச் சிறிய குற்றமே என்பதால் அவர் தப்பிச் சென்றது குறித்து அ.சா. 1, 4 ஆகியோர் கவலைப்படவில்லை என்று காவல் துறை தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. அ.சா. 1 மற்றும் அ.சா. 4 ஆகியோர் அவர்களுக்கு வரையறை செய்யப்பட்ட உரிய நடைமுறையைப் பின்பற்ற போதிய முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆய்வு வரம்புகள் (ii) (iii) (vi)

(ii) மர்மமான முறையில் ரமேஷ் இறந்ததற்கு காரணமாக இருந்த நிகழ்வுகள் சூழ்நிலைகள் ஆகியவை குறித்து விசாரணை செய்தல் ;

(iii) பாதுகாப்பிலிருக்கையில் மேற்சொன்ன ரமேஷ் சாகடிக்கப் பட்டு பக்கிங்ஹாம் கால்வாயில் அவரது உடல் வீசி எறியப்பட்டது என்ற குற்றச்சாட்டு உண்மையானதா என்பது குறித்து விசாரித்து, அறிக்கை அளித்தல் ;

(iv) ரமேஷிடம், காவலர்கள் அத்துமீறி நடந்து கொண்டனரா, ஆமெனில், அதற்கு பொறுப்பான காவல்துறைப் பணியாளரைக் கண்டறிந்து, அக்காவல் துறைப் பணிய ளர்மீது எடுக்கப்பட்ட வேண்டிய பொருத்தமான நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவித்தல்.

முடிவுகள் :

ஆய்வு வரம்பு (ii)-ஐப் பொறுத்தவரை, ரமேஷ் அ. சா. 1-ன் பாதுகாப்பிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிக்கையில் கால்வாயில் அவராகவே முழ்கிவிட்டாரா அல்லது காவலரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டு பின்னர் அவருடைய உடல் கால்வாயில் வீசி எறியப்பட்டதா என்பது குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளது. ஜீப்பில் அழைத்துச் செல்கையில், அ.சா. 1-ன் காவலிலிருந்து, தப்பிச் சென்ற ரமேஷ் பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் பெருங்காட் விரைவு ரயில்போக்கு வரத்துத் திட்ட பாலத்தின் மேற்கில் இருக்கும் கல்லிராயன் தெரு வழியே ஓடி, இரவு 8-45-க்கும் இரவு 9-00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் கால்வாயைக் குறுக்கால் கடந்து அவருடைய பாதுகாப்பிற்காககால்வாயின் கிழக்குப் பக்கமிருக்கும் குடிசைப் பகுதிக்குச் செல்ல முயற்சி செய்தார் என்பதற்கும் கால்வாயில் இறங்குகையில் அவர் கால்வாயில் முழுமையாக முழ்கி இறந்தார் என்பதற்கும், அக்கால்வாயில் சுமார் 10 அடி ஆழமும், கறிவுநீர், மழைநீர்., சேறு கலந்த சகதியும் உடையதாக இருந்தது என்பதற்கும், அவருடைய உடலை, மயிலாப்பூர் தீயணைப்புப் படை அலுவலர் திரு. கே. கண்ணையும்: (அ.சா.9) தீயணைப்புத் துறையின் ஏனைய பணியாளர்களும், இரவு சுமார் 11-30 மணிக்கு வெளியே எடுத்தனர் என்பதற்கும் ஆதாரம் உள்ளது. அ.சா. 25, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில், போராசியர் டாக்டர் கே. ரவிந்திரன், எம்.டி. அவர்களின் மருத்துவ நீதியான சாட்சியம், ரமேஷ் நீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்திருப்பதாகத் தோன்றுகிறது என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது. ரமேஷின் சடலத்தை சவப் பரிசோதனை செய்கையில் அவர் கண்டறிந்த அனைத்து அறிகுறிகளையும் கருத்தில் கொண்ட பிறகு அவர் அவருடைய கருத்தைத் தெளிவித்துள்ளார். குரல் வளையிலும் அதன் பகுதிகளிலும் ரத்தக் கறையுடன் நுரை போனற திரவமும், கரும் பழுப்பு மண் துகள்கள் சிலவும் இருந்ததை அவர் கண்டறிந்துள்ளார்.—இது இறந்துவிட்டவர், நீரில் மூழ்கிய போது, உயிருடன் இருந்தார் என்பதற்கும், மண் துகள்களுடன் கூடிய நீர் உள்ளே சென்றதென்பதற்கும் அறிகுறியாகும். குடலின் கீழ்ப்பகுதியில் சிறிது திரவம் இருந்ததையும் அவர் கண்டறிந்துள்ளார்.

(iii)–(iv)—ஆம் ஆய்வு வரம்புகளை, அதாவது, காவலர்கள் தம் காவலில் இருந்த ரமேஷை சாகடித்திருப்பார்கள் என்ற கருத்தை பொறுத்தமட்டில், இந்த ஆணையம், அவ்வாறு இல்லை என்று கண்டறிந்துள்ளது. இந்த விசாரணை ஆணையம், 13—4—1997 ஆம் நாளன்று ரமேஷின் சடலம் குறித்து சவ விசாரணை நடத்திய சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னாள் தோ்தல் உதவியாளர் (பொது) திரு.ஏ. அப்ரஹாம் (அ.சா. 19)அவர்கள் அளித்த சாட்சியம், இறந்துவிட்ட ரமேஷின் சடலத்தைச் சவப் பரிசோதனை செய்த அரசு இராயப்பேட்டை மருத்துவமனை போராசியர், டாக்டர் கே. ரவிந்திரன், (அ.சா. 25) அவர்கள் அளித்த சாட்சியம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் ஆணையம் இம் முடிவுக்கு வந்துள்ளது. அ.சா. 19, தன்னுடைய அறிக்கையில் (சா.ஆ. 28) ரமேஷின் உடலில் காயங்கள் எவற்றையும் தான் காணவில்லை என்று தெரிவித்துள்ளார். ஈவலது கண்ணின் மேல்பகுதியிலும், கீழ்ப் பகுதியிலும் இரண்டு சிறு சிராய்ப்புகள் இருந்ததைத் தவிர, மற்றபடி, வெளிப்புறக்காயம் எதுவும் இல்லையென்றும் அ.சா. 25 டாக்டர் கே. ரவிந்திரன், தெரிவித்துள்ளார். இறந்து விட்டவரின் உடலின் யாதொரு முக்கியமான பாகங்களில் மரணம் விளைவிக்கக் கூடிய கடும் காயங்கள் எதனையும் அவர் கண்டறிய வில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிராய்ப்புகளைப் பொறுத்த மட்டில், இறந்து விட்டவர், கரடுமுரடான பரப்பில் மோதியதன் காரணமாக இந்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று அ. சா. 25 கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த விசாரணை ஆணையம், அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தபோது, கால்வாய்க் கரையின் பக்கங்களிலும் கான்கிரீட் துண்களின் பக்கங்களிலும் கறைகள் இருந்ததையும் கண்டறிந்துள்ளது. இறந்து விட்ட ரமேஷ் தப்பிக்க முயன்று ஓடியபோது, தடுக்கி விழுந்து இந்தக் காயங்களை அடைந்திருக்கக் கூடும் ரமேஷ் காவலில் இருந்த போது காவலர்களால் சாகடிக்கப்படவில்லை என்றும், அவருடைய உடல் கால்வாயில் தூக்கி எறியப்படவில்லை என்றும், காவலர்கள் ரமேஷை விசாரிக்கையில் அத்துமீறி நடக்கவில்லை என்றும், அவர் கால்வாயில் நீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்துவிட்டார் என்றும் விசாரணை ஆணையம் கண்டறிந்துள்ளது.

மயிலாப்பூர் இ-1 காவல் நிலையத்தில் நிலை-1 காவலரான அ.சா. 1 திரு. ஜி. வேலாயுதம், ரமேஷ் என்பவரைத் தப்பி ஓடவிட்டதன் மூலம் கடமை தவறிய குற்றத்திற்காக அவர் மீது (அ.சா.1) அரசு உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்றும், சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ் உள்ள குற்றச் சாட்டுக்கு ரமேஷ் என்பவரை நீதிமன்றம் முன்பாக பதிலளிக்கச் செய்ய, மயில் சட்டம்-ஒழுங்குப் பிரிவில் புகார் பதிவு செய்யாததற்காக திரு. ஜி. வேலாயுதம் (அ.சா.1) மயிலாப்பூர், இ-1 காவல் நிலைய, காவல்துறை ஆய்வாளர் திரு. ஆர். கருடபதி (அ.சா.4) ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் விசாரணை ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது.

ஆய்வு வரம்புகள் (v) மற்றும் (vi).

(v) 13—4—1997 அன்று மயிலாப்பூர் பகுதியில் பொதுச் சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படும் வகையில், வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக் காரணமாயிருந்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி விசாரித்தல்.

(vi) அத்தகைய வன்முறைச் சூழ்நிலையைச் சமாளிப்பதில், காவல் துறையினரில் அத்துமீறல்கள் எவையேனும் இருந்தனவா என்பது குறித்து விசாரித்து அறிக்கை அளித்தல்.

முடிவுகள் :

12—4—1997 அன்று இரவு சுமார் 9 மணிக்கு திரு. கபாலீஸ்வரனின் (இறந்தவர் தரப்பின் சாட்சி-1) மகன் ரமேஷை மயிலாப்பூர் போக்குவரத்துக் காவலர்,.லஸ் முனையிலிருந்து, மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்ற விவரம் தெரியவர, திரு. கபாலீஸ்வரன் (இ.த.சா. 1) இ-1 மயிலாப்பூர் காவல்துறை ஆய்வாளர், திரு. ஆர். கருடபதியைச் (அ.சா. 4) சந்தித்தார் என்றும், காவல் நிலையத்திற்கு ரமேஷை அழைத்துச் சென்றபோது, வழியில் அவர் ஜீப்பிலிருந்து தப்பிச் சென்று விட்டதாகவும், ரமேஷ் வீடு திரும்பி விடுவார் என்று கூறியதாகவும் விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது. இ.த.சா. 1 திரு. கபாலீஸ்வரன் வீடு திரும்பினார் ; ஆனால், அவருடைய மகன் ரமேஷ் வீடு திரும்பாதது குறித்து கவலை யுற்றார். அடுத்த நாள் காலையில் ரமேஷின் புகைப்படத்துடன் '' மயிலாப்பூர் கூவத்தில் விழுந்தவர் சாவு '' என்ற தலைப்பில் '' தினகரன்'' நாளிதழில் வெளியிடப்பட்டிருந்த செய்தி யைப் பார்த்து, இ.த.சா. 1 சந்தேகப்பட்டார். அதாவது, முந்தைய நாள் இரவு காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்ட, அவருடைய மகன் ரமேஷ் காவல் துறையினரால் சாகடிக்கப்பட்டு, அவரது உடல் கால்வாயில் வீசி எறியப்பட்டதாக இ.த.சா. 1 சந்தேகப் பட்டார். கூட்டத்துடன், அவர் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குச் சென்று கலவரம் செய்தார். காலை 7 மணியிலிருந்து 7-30 மணிக்கிடையே, சோடா பாட்டில்கள், கற்கள், கம்புகளுடன் ஆண்களும் பெண்களுமாக சுமார் 100 பேர் அடங்கிய கும்பல் ரமேஷ் குறித்து வெளியிடப்பட்ட செய்திகளின் உண்மைத்தன்மை குறித்தும், ரமேஷ் கூவத்தில் தற்செயலாக மூழ்கி இறக்கவில்லை என்றும் கூறிக் கொண்டு, தினகரன் பத்திரிக்கை அலுவலகத்தைத் தாக்கி, அங்கிருந்த சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியது ; மேலும், ''தினகரன்'' பத்திரிக்கை உதவி ஆசிரியர் திரு. ஆர். சீனிவாசன் (அ.சா. 13), எந்திர இயக்க முதலர் திரு. சி. பழவேசம் (அ.சா. 18), அலுவலக உதவியாளர் திரு. சி. இசக்கிதுரை (அ.சா. 21), ஏனைய 7 பணியாளர்களுக்கும் அக்கும்பல் காயங்களை ஏற்படுத்தியது. இவை தவிர, சுமார் 500 பேர் அடங்கிய கும்பல், சோடா பாட்டில், கற்கள், கம்புகளுடன் போக்குவரத்தைத் தடை செய்து, ஸ்தம்பிக்க வைத்தது ; இதனால், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையில் லஸ் முனையிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. மேலும் அக்கும்பல் காவல் துறைப் பணியாளர்கள் 18 பேருக்குக் காயங்களை ஏற்படுத்தியது. மேற்சொன்னவற்றுடன், அப்போதைய சென்னை காவல்துறை ஆணையாளர், திரு. வி. கே. ராஜகோபாலன் அ. சா. 45-க்கு கல்லடிப்பட்டு இடது உள்ளங்கையின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டது. கண்ணீர்ப்புகைக் குண்டு படையினரின் ''டெல்டா'' வேன், காவல்துறை இணை ஆணையாளரின் (தெற்கு) அம்பாசிடர் கார், ஒட்டல் பிக்னிக் பிளாசா, சௌமியா பேக்கரி ஆகியவற்றின் முகப்புப் பகுதி, அப்பகுதியிலுள்ள கடைகளின் பெயர் பலகைகள், .லஸ் முனையிலுள்ள போக்குவரத்து ஒளிக்குறி நிழற்குடை சேதியம் ஆவி விளக்குகள், அரசுப் போக்குவரத்து பேருந்துகள் ஆகியவை வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தன. சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. பி. இராமஜெயம் அவர்களும் (அ.சா. 42), ஏனைய காவல்துறை அதிகாரிகளும் கூட்டத்தினரை நோக்கி அமைதியாகக் கலைந்து செல்லுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அக்கும்பல் செவி சாய்க்கவில்லை என்பதைச் சாட்சியம் தெளிவுபடுத்துகிறது. காவல் துறையினர் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்தும், எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. இச்சூழ்நிலையில் தான், கூட்டத்தினரைக் கலைந்து செல்ல செய்வதற்காக, காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டு களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. காலை 8 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையே அப்பகுதியில் பதட்டமான சூழ்நிலை இருந்தது என்பதையும், நண்பகல் 12 மணிக்குப் பிறகு தான், இயல்பான சூழ்நிலை திரும்பியது என்பதையும் சாட்சியம் தெளிவுபடுத்துகிறது. லஸ் முனையிலும், அதையடுத்துள்ள பகுதியிலும் 13—4—1997 அன்று ஏற்பட்ட .நிலைமையைச் சமாளிப்பதில் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை நியாயமானதே என்றும், காவல்துறையினர் அவர்களுடைய கடமையை நிறைவேற்றியதில் அத்துமீறல் எதுவுமில்லை என்றும் விசாரணை ஆணையம் முடிவுக்கு வந்துள்ளது.

ரமேஷின் தந்தையான இ. த. சாட்சி எண். 1, கும்பல் ஒன்றுடன் சென்று மயிலாப்பூர் காவல்நிலையத்தில், அவருடைய ஆத்திரத்தை வெளிப்படுத்தியபோது, அதாவது காலை சுமார் 6-30 மணிக்கே பூசல் தொடங்கியதால், அந்தப் பகுதியைச் சேர்ந்த காவல்துறையினர் விவேகத்துடனும், விழிப்புடனும், கண்காணிப்புடன் இருந்திருக்க வேண்டும் என்றும், சம்பவத்தின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு, மேலும், பெரிய அளவில் எந்தவொரு எதிர்பாராச் சம்பவமும் நிகழாமல் தவிர்க்க, மேற்கொண்டும் எடுக்க வேண்டிய நடவடிக்கையைத் திட்ட மிட்டிருக்க வேண்டும் என்றும் விசாரணை ஆணையம் கருத்துக்கு வந்துள்ளது. கும்பல், லஸ் முனையைக் கடந்து செல்ல அதிக நேரம் அளிக்காமல், காவல்துறையினர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் அந்தப் பகுதியில் இருந்த பொதுச் சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதமும், காவல்துறைப் பணியாளர்களுக்கு ஏற்பட்ட காயமும் குறைந்த அளவே இருந்திருக்கக் கூடும்.

ஆய்வு வரம்பு (vii)

(vii) இத்தகைய விரும்பத் தகாத சம்பவங்கள் மீண்டும் நிகழாவண்ணம் உறுதி செய்ய மேற்கொள்ள வேண்டிய தேவையான நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்தல்.

முடிவுகள்/கருத்துரைகள் :

எந்த ஒரு நபரும் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, தனக்கு நிவாரணம் தேடி, வன்முறையில் இறங்க சட்டம் அனுமதிக்கவில்லை என்று விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது.

பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது :—

(i) குற்றவாளிகள், எவ்விதத் தண்டனையும் பெறாமல் எளிதில் தப்பிவிட அனுமதிக்கப் படக் கூடாது—அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii) இது தொடர்பாக, விழிப்புணர்வைப் பெற்றிராத பொது மக்களுக்கு செய்தித் தாள்கள், சமூக நல அமைப்புகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் இச்செய்தி நன்கு எடுத்துரைக்கப் பட வேண்டும். இவ்வாறு எடுத்துரைப்பதன் வாயிலாக பொதுமக்களுக்கு ஊறு விளைவிப்பதும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதும் அனைத்து நிலைகளிலும் எப்போதும் தடுக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

பரிந்துரை :

ரமேஷை தப்பிக்கவிடாமல் காவல் நிலையத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு சென்றிருந்தால் ரமேஷ் கால்வாயில் விழுந்து முழ்கி இறந்து போவதற்கு வாய்ப்பு ஏற்படிட்டிருக்காது என விசாரணை ஆணையம் கண்டறிந்துள்ளது. இ.த.சா. 1-க்கு, அரசு ரூ. 50,000 கருணைத் தொகை வழங்கியதாக விசாரணையின் போது இ.த. சா. 1 (திரு. கபாலீஸ்வரன்) விசாரணை ஆணையம் முன்பு கூறியதாக விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது. இறந்துபோன ரமேஷ் ஏறத்தாழ 22 வயதுள்ளவர் என்பதையும், அப்போது அவர் அந்தக் குடும்பத்தில் சம்பாதிக்கும் ஓர் உறுப்பினர் என்பதையும் வருமானத்தையும், ஒரு நபரின் உயிரையும் இழந்து அந்தக் குடும்பம் தவிக்கிறது என்பதையும் கருதிப் பார்க்கையில், மேலும் ஒரு தொகையை அந்தக் குடும்பத்திற்கு அளிப்பது பொருத்தமானது, சரியானது என்று தோன்றுவதால், அது குறித்து அரசு பரிசீலிக்கலாம் என்ற விசாரணை ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது.

3. விசாரணை ஆணையத்தின் முடிவுகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

4. கடமை தவறிய காவல்துறை பணியாளர்மீது அதாவது, பி. டபிள்யூ. 1, நிலை-1 காவலர் திரு. ஜி. வேலாயுதம், இ-1 மயிலாப்பூர் காவல் நிலையம், பி. டபிள்யூ. 4, போக்கு வரத்துப் பிரிவு காவல்துறை ஆய்வாளர் திரு. ஆர். கருடபதி ஆகியோர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விசாரணை ஆணையத்தின் கருத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக உள்துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

5. எதிர்காலத்தில் இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்காத வண்ணம் தடுப்பதற்கு ஆய்வு வரம்பு (vii) தொடர்பாக விசாரணை ஆணையம் தெரிவித்த கருத்துரைகள், மேலும் விரிவான ஆய்விற்காகவும், தேவையான நடவடிக்கை எடுப்பதற்காகவும் சம்பந்தப்பட்ட துறைகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

6. இறந்துபோன ரமேஷ் குடும்பத்திற்கு அரசு ஏற்கெனவே வழங்கிய ரூ. 50,000 கருணைத் தொகையுடன் மேலும் அதிகத் தொகை அளிப்பது உரியது என்றும் பொருத்தமானது என்றும் விசாரணை ஆணையம் பரிந்துரைத்தை அரசு ஏற்றுக்கொண்டு ரமேஷின் மரணம் காலவர்கள் துன்புறுத்தியதால் ஏற்பட்டதல்ல என்ற போதிலும், கூடுதலாக ரூ. 50,000 கருணைத் தொகை வழங்க முடிவு செய்துள்ளது.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி),

ஏ. பி. முத்துசாமி,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர் :

அரசு செயலாளர், பொது (சட்டம்-ஒழுங்கு-எஃப்) துறை, சென்னை-9.
அரசுச் செயலாளர், உள்துறை, சென்னை-9.
அரசுச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
ஆளுநர் அவர்களின் செயலாளர், சென்னை-32.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை.
காவல்துறை இயக்குநர், சென்னை-2.
காவல் துறைத் தலைவர், புலனாய்வு, சென்னை-2.
காவல்துறை ஆணையாளர், சென்னை-8.
மத்திய அரசுச் செயலாளர், உள் விவகார அமைச்சகம், புதுடில்லி.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது).

எம். இலக்குமணன்,
மி. க. சார்புச் செயலாளர்,
பொதுத் (மிக கமுக்கம்) துறை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. மருதமுத்து விசாரணை ஆணைய அறிக்கை.

திருத்தங்கள்.

கீழ்க்கண்ட பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அச்சுப் பிழைகள் திருத்தியவாறு படிக்கப்படவேண்டும்.

பக்கம்.	பத்தி எண்/ வரிசை எண்.	தற்போதுள்ள வார்த்தை.	திருத்தம்.
1	(i)/5	குறிப்பிடப்படும், (இவர் இறந்து விட்டவர்)	குறிப்பிடப்படும் (இவர் இறந்து விட்டவர்)
3	(v)/6	சேரும்	சேறும்
7	முதல் வரி	உள்ளங்கையில்	உள்ளங்கையின்
15	5/34	தோனறுவதோடு	தோன்றுவதோடு
18	11/கடைசி வரி	ஆய்வு-வரம்பு எனினும் (ii), (iii) மற்றும் (iv) கால்வாயில் மூழ்கி இறந்தது அல்லது காவலில் இருந்தபோது இறந்தது.	பத்தி தலைப்பாகக் கொள்ள வேண்டும்
20	16/26	இழப்பு	இறப்பு
21	17/21	காவல்வாயில்	கால்வாயில்
24	25/2	ராவல்	காவல்
24	25/3	வழியில	வழியில்
25	26/20	கூட்டத்தினா	கூட்டத்தினர்
25	26/24	(கா. பொ. 44 இன் தொடர் வரிசைகள்)	இல்லாததாக கொள்ளப் படவேண்டும்
29	கடைசி வரி	வேன் காவல் துறை கார் ஒட்டல்	வேன், காவல்துறை கார். ஒட்டல்
30	31.4.	'' (VII) அத்தகைய விரும்பத் தகாத சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்பதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்தல்.	பத்தி தலைப்பாகக் கொள்ளவேண்டும்
2	முடிவுகள் 2/6	ஜீப் பிள்	ஜீப்பில்
2	2/14	நடவடிக்கைக்காகக்	நடவடிக்கைக்காக
3	முடிவுகள் 1/16	ரமேஷ	ரமேஷ்
3	2/20	கூடும் ரமேஷ்	கூடும் என்றும், ரமேஷ்
5	(ii) கடைசி வரி	உணறுமாறு	உணருமாறு
5	பரிந்துரை 2-வது வரி	ஏற்படிட்ருக்காது	ஏற்பட்டிருக்காது
5	6/4	காலவர்கள்	காவலாகள்
5	6/2	உரியது என்றும்	தகுயானது மற்றும்
5	கடைசி 4 வரிகள்	(ஆணைப்படி அனுப்பப் படுகிறது) எம். இலக்குமணன் மி. க. சார்புச் செயலாளர் பொது (மிக கமுக்கம்) துறை	இல்லாததாகக் கொள்ள வேண்டும்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
அரசு எஸ்டேட் அரசினர், சென்னை-600 079.
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS